பக்கங்கள்: முப்பத்துஇரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 05 திங்கட்கிழமை (18.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 143


02 வீணாகியது யுவராஜின் ஆட்டம்


16 சிக்கித் திணறும் கொழும்பு


18 இளம் சமூகத்தை சரியான முறையில் பயன்படுத்துவோம்


24 தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

# நிபுணர்குழு அறிக்கையை எதிர்கொள்வதற்கு எதிர்க்கட்சியையும் இணைத்து செயற்பட முயற்சி

## கூட்டறிக்கை விடுவது குறித்து அரச தரப்பு ஆராய்கிறது

கொழும்பு, ஏப்ரல் 18

**ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக அரசும் எதிர்க்கட்சியும் கூட்டு அறிக்கை வெளியிடுவதன் அவசியம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தி வருகிறார்.**

அரசுடன் இணைந்து ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் கூட்ட றிக்கை விடுக்கவேண்டும் என்று பௌத்த பிக்குகள் சிலர் ஒன்றிணைந்து எதிர்க் கட்சியினரிடம் வலியுறுத்த உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்க, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் தற்போது வெளி நாடுகளில் உள்ளனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் (32 ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் குழு அறிக்கை வெளிவந்த சந்தர்ப்பத்தில்

# சர்வதேச ஊடகங்களில் யுத்தக் குற்றப் படங்கள்

கொழும்பு, ஏப்.18

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கையிடம் கையளிக்கப்பட்டதை அடுத்து யுத்தக் குற்றங்களை உறுதிப்படுத்தும் படங்கள் மற்றும் வீடியோக்களை சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

வெள்ளைக் கொடியுடன் சரணடைந்து சுட்டுக் கொல்லப் பட்டனர் எனத் தெரிவிக்கப்படும் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், புலிகளின் சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் ஆகியோர் சித்திரவதை செய்யப் பட்டு, கொலை செய்யப்பட்டுக் கிடப்பதைப் போன்ற படங் களை நிபுணர் குழுவின் அறிக்கை (32 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு பதில் அளித்த பின்னரே ஐ.தே.க. கருத்து வெளியிடும்

## நிபுணர் குழு அறிக்கை குறித்து மழுப்பல் போக்கு

கொழும்பு, ஏப்.18

ஐ.நா.நிபுணர்கள் குழு அறிக்கை தொடர்பாக இலங்கை அரசின் உத்தி யோகபூர்வ பதில் வெளியிடப்படும் வரை கருத்துக்கூற முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலை வர் கரு ஜயசூரிய கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறி யவை வருமாறு:-

இலங்கையின் யுத்தக் குற்றச்சாட்டு கள் தொடர்பாக ஐ.நா. நிபுணர்கள் குழு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூனிடம் அறிக்கை சமர்ப்பித்திருப்பதை மட்டுமே நாம் அறிவோம். அந்த அறிக் கையில் அடங்கியிருக்கும் விடயம் என்னவென்று தெரியாது.

இந்த அறிக்கை தொடர்பாக இலங்கை அரசு உத்தியோகபூர்வமான பதிலை வழங்கவேண்டும். அந்தப் பதிலைப் பார்த்துத்தான் அந்த அறிக்கை தொடர் பாக எமது கட்சியின் நிலைப்பாடு தெரி விக்கப்படும். (32 ஆம் பக்கம் பார்க்க)

# ஓய்வுபெறும் வயது வந்துவிட்டது பிரதமர் பதவி விலக வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்து

கொழும்பு, ஏப். 18

பிரதமர் டி.எம்.ஜயரட்ன பதவி விலக வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

பிரதமரால் தமது கடமைகளை உரிய முறையில் மேற் கொள்ள முடியவில்லை. ஓய்வு பெறும் வயதில் பதவிகளை வகிப்பதால் எவருக்கும் எவ்வித (32 ஆம் பக்கம் பார்க்க)

**உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்ட அதிர்ஷ்டசாலிகளின் விவரம் 3 ஆம், 4 ஆம் பக்கங்களில்...**

## பல்கலை. அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் இம்மாத இறுதியில்

கொழும்பு, ஏப் 18

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட் டுப் புள்ளிகள் இந்த மாத இறுதியில் அல் லது மே மாதத்தின் முதல் வாரமளவில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது என உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் மீள் திருத்தப் பணி கள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றன என்று உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் இந்தப் பெறுபேறுகள் கையளிக் கப்பட்டதன் (32 ஆம் பக்கம் பார்க்க)

# நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக மே தினமன்று பெரும் ஆர்ப்பாட்டம்

## நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு, ஏப். 18

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்கும் தினமாக மே தினம் அமையவேண்டும் என்றும் அன்றைய தினம் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளு மாறும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களுட னான சந்திப்பு நேற்று முன்தினம் அலரி மாளிகை யில் நடைபெற்றபோதே ஜனாதிபதி மேற்கண்ட வாறு அழைப்பு விடுத்தார்.

போர்க் குற்றங்களுக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டுமென்ற சர்வதேச கோரிக்கைகளுக்கு எதி ராக எமது வலிமையை வெளிப்படுத்தும் தினமாக மே தினம் அமையவேண்டும். இவ்வளவு நாளும் எமது வலிமையை நாம் வெளிப்படுத்தவில்லை. எனவே மே தினத்தில் எமது வலிமையை வெளிப்படுத்து வோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் கடைசிக் கட்டத்தில் போர்க் குற்றங் களும், மனிதத்தன்மைக்கு எதிரான குற்றங்களும் இடம்பெற்றதான (32 ஆம் பக்கம் பார்க்க)

# பனாமா மாநாட்டில் பங்கேற்க திஸ்ஸவுக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, ஏப். 18

சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியப் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொள்ள ஐ.தே.க. பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு அனுமதி மறுக் கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பனாமாவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான சர்வதேச நாடா ளுமன்ற ஒன்றியப் பிரதிநிதிகள் மாநாட்டில் இலங்கையின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வாவின் தலைமையில் கலந்து கொண்டுள்ளனர்.

அதேநேரம் இந் நாள்களில் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு பனாமாவுக்குச் சென்றிருக்கும் ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவையும் அதில் கலந்து கொள்ள வைப்பதற்கு ஐ.தே.கவின் இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் (32 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் அழைப்புக்கெதிராக தொழிற்சங்கங்கள் போர்க்கொடி

கொழும்பு, ஏப். 18

போர்க்குற்றங்கள் குறித்து ஐ.நா. நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக மே தின ஊர்வலங்களைப் பயன் படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ அழைப்பு விடுத்துள்ளமைக்குத் தொழிற்சங்கங் கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

ஊடகங்களில் கசிந்த ஐ.நாவின் அந்த அறிக்கை யின்படி இலங்கை அரசின் மீது போர் குற்றச்சாட்டு கள் சுமத்தப்பட்டிருந்தன. ஆனால், அவற்றை அரசு முற்றாக நிராகரித்துள்ளது.

தமது அரசிற்கும், செயலுக்கும் பொதுமக்களின் பூரண ஆதரவு இருக்கிறது என்பதைக் காண்பிப்பதற் காகவே, இந்த மே தினக் கொண்டாட்டங்களை ஐ.நா வின் அறிக்கைக்கு எதிராகக் குவிப்பதற்கு ஜனாதி பதி கோரிக்கை விடுத்திருந்தார்.

தனது நாட்டுக்காக மின்சார நாற்காலியில் அமர வும் தான் தயார் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், தொழிலாளர் தினமான மே தினத்தை ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கையை எதிர்ப்பதற் கான தினமாகப் பயன்படுத்துவதைத் தொழிற்சங்கங் கள் எதிர்த்துள்ளன.

இலங்கை அரசில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கத்தில் அங்கம் வகிப்பவரும், செங்கொடிச் சங்கம் உட்பட பல மலையக தொழிற் சங்கங்களின் மூத்த (32 ஆம் பக்கம் பார்க்க)

உதயன்
18 ஏப்ரல் 2011 திங்கட்கிழமை

# வீணானது யுவராஜின் சகலதுறை ஆட்டம்




-டிலீப்-

மிகவும் பரபரப்பான ஆட்டத்தில் புனே வாரியர்ஸை 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டெக் கான் சார்ஜஸ் அணி வெற்றி கொண்டது. சகல துறையி லும் யுவராஜ் கலக்கிய போதும் டெக்கான் அணியை வீழ்த்த முடியவில்லை.

மும்பையில் நடந்த நேற்றைய லீக் ஆட்டத்தில் யுவராஜ் தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியும் சேவாக் தலைமையிலான டெல்லி டெயாடெவில்ஸ் அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி டெயாடெவில்ஸ் அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய ரைடர் - ஸ்மித் இருவரும் சிறப்பான அடித்தளத்தை அமைத்தனர். இருப்பினும் ஸ்மித் 12 ஓட்டங்களுடன் வெளியேறினார். மறுமுனையில் ரைடர் சிறப்பாக ஆடினார். டெல்லியின் பந்து வீச்சில் ரசிகர்களுக்கு வாணவேடிக்கை காட்டினார்.

27 பந்துகளில் 60 ஓட்டங்களை அதிரடியாய் பெற்றார் ரைடர். இதில் 5 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கின. சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த ரைடர் நடீமின் பந்து வீச்சில் வின்ச்சிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இருந்தும் முறுமுனையில் புனே அணித்தலைவர் யுவராஜ் வெளுத்துக்கட்டினார் டெல்லியின் பந்து வீச்சை. அதிரடியாட்டத்தால் வேகமாக அதிகரித்துச் சென்றது புனேயின் ஓட்ட வேகம். பின் வரிசை வீரர்கள் சிறப்பாகச் செயற்படாததனால் இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் புனே வாரிஸர்ஸ் 5 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் யுவராஜ் சிங் இறுதிவரை ஆட்டமிழக்காது 32 பந்துகளில் 66 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தார். 5 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் யுவராஜின் அதிரடியில் அடங்கின.

பந்து வீச்சில் டெல்லி சார்பில் டின்டா, நடீம் தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு கடினமான இலக்கை விரட்டத் தொடங்கிய டெல்லிக்கு அணித்தலைவர் சேவாக் மற் றும் வோர்னர் ஆகியோர் சிறப்பான அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர். இருவரும் அதிரடியாக ஆடி ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டனர். 29 பந்துகளில் டெல்லி 50 ஓட்டங்களைக் கடந்தது. முதலாவது விக்கெட்டுக்காக 75 ஓட்டங்கள் பகிரப்பட்டது. 28 பந்துகளில் 46 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வோர்னர் 'ரன் அவுட்' மூலம் ஆட்டமிழந்தார். டெல்லி அணி 97 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டபோது சேவாக்கின் விக்கெட்டையும் இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய வீரர்களை யுவராஜ் வெளியேற்றிக் கொண்டிருந்தார். சீரான இடைவெளிகளில் டெல்லியின் விக்கெட் வீழ்ந்த வண்ணமிருந்தது. மத்திய வரிசையில் களமிறங்கிய வேணுகோபால் ராவ் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி டெல்லியை வெற்றிப் பாதையை நோக்கி பயணிக்க வைத்தார். மறுமுனையில் வின்ச் அசத்தலாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். 12 பந்துகளில் 25 ஓட்டங்களைப் வின்ச் பெற்றார். யுவராஜ் 19 ஆவது ஓவரை வீசினார். அந்த ஓவரின் முதலாவது பந்தில் வின்ச் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சிறப்பாக ஆடிய ராவ் அந்த ஓவரின் இறுதிப் பந்தில் ஆட்டமிழக்க 180 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்தது டெல்லி அணி. 6 பந்துகளில் 10 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது டெல்லி. களத்தில் ஹோப்ஸ் துடுப்பெடுத்தாடினார். இறுதி ஓவரை ரைடர் வீசினார். முதலாவது பந்திலேயே ஹோப்ஸ் சிக்ஸர் விளாசினார். அடுத்த பந்திலேயே பவுண்டரி விளாசினார். நான்கு பந்துகள் மீதமிருக்க மூன்று விக்கெட்டுக்களால் 'திரில்' வெற்றி பெற்றது டெல்லி.

சகல துறைகளிலும் கலக்கிய யுவராஜ் ஆட்ட நாயகனாகத் தேர்வானார்.

## ஐ.பி.எல் பதினாறாவது ஆட்டம்

ஆட்டம்: டெல்லி டெயாடெவில்ஸ் எதிர் புனே வாரியர்ஸ்  நாணயச் சுழற்சி: டெல்லி டெயாடெவில்ஸ்
முடிவு: 03 விக்கெட்டுக்களால் டெல்லி டெயாடெவில்ஸ் வெற்றி  ஆட்டநாயகன்: யுவராஜ்சிங்

புனே வாரியர்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ரைடர் | c வின்ச் b நடீம் | 60 | 27 | 05 | 5 |
| ஸ்மித் | c பதான் b டின்டா | 12 | 14 | 02 | 0 |
| மன்ஹாஸ் | c வோர்னர் b ஹோப்ஸ் | 20 | 18 | 01 | 1 |
| யுவராஜ்சிங் | ஆட்டமிழப்பில்லை | 66 | 32 | 04 | 5 |
| உத்தப்பா | c வோர்னர் b நடீம் | 04 | 10 | 00 | 0 |
| மொனிஷ் மிஷ்ரா | c சேவாக் b டின்டா | 07 | 11 | 00 | 0 |
| பார்னெல் | ஆட்டமிழப்பில்லை | 10 | 09 | 01 | 0 |
| யுங்யுங்வாலா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ரோகித் சர்மா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| வோஜ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| தோமஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 5, lb 1, b 1, nb 1) | 08 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| வேணுகோபால் ராவ் | 01 | 14 | 0 | 0 |
| டின்டா | 04 | 42 | 2 | 0 |
| இப்ரான் பதான் | 03 | 28 | 0 | 0 |
| யாதவ் | 04 | 36 | 0 | 0 |
| ஹோப்ஸ் | 04 | 26 | 1 | 0 |
| நடீம் | 04 | 39 | 2 | 0 |

TOTAL - 187/5 (20)
1-28 (ஸ்மித்), 2-82 (மன்ஹாஸ்), 3-98 (ரைடர்), 4-117 (உத்தப்பா), 5-146 (மிஷ்ரா)

டெல்லி டெயாடெவில்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வோர்னர் | run out( வோஜ்/ உத்தப்பா) | 46 | 28 | 06 | 2 |
| சேவாக் | b ரைடர் | 37 | 23 | 06 | 0 |
| இப்ரான் பதான் | c வோஜ் b யுவராஜ் சிங் | 14 | 16 | 01 | 0 |
| நமன் ஓஜா | st உத்தப்பா b யுவராஜ் சிங் | 11 | 09 | 00 | 1 |
| மத்தியூவேட் | lbw b இசாந் சர்மா | 03 | 04 | 00 | 0 |
| வேணுகோபால்ராவ் | c யுங்யுங்வாலா b யுவராஜ் சிங் | 31 | 20 | 01 | 3 |
| வின்ச் | c & b யுவராஜ் சிங் | 25 | 12 | 01 | 2 |
| ஹோப்ஸ் | ஆட்டமிழப்பில்லை | 13 | 04 | 01 | 1 |
| நடீம் | ஆட்டமிழப்பில்லை | 00 | 00 | 00 | 0 |
| டின்டா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| யாதவ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 9, b 1) | 10 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| தோமஸ் | 02 | 22 | 0 | 0 |
| வோஜ் | 03 | 38 | 0 | 0 |
| பார்னெல் | 02 | 26 | 0 | 0 |
| இசாந் சர்மா | 04 | 29 | 1 | 0 |
| ரைடர் | 3.2 | 34 | 1 | 0 |
| யுங்யுங்வாலா | 01 | 11 | 0 | 0 |
| யுவராஜ்சிங் | 04 | 29 | 4 | 0 |

TOTAL - 190/7(19.2)
1-75 (வோர்னர்), 2 - 97 (சேவாக்), 3- 116 (பதான்), 4-116 (நமன் ஓஜா), 5-120 (மத்தியூ வேட்), 6-167 (வின்ச்), 7-180 (வேணு கோபால் ராவ்)

c - பிடியெடுப்பு  b - பந்துவீசியவர்  st - ஸ்ரொம்

# கொல்கத்தாவின் வேகத்தில் அடங்கியது ராஜஸ்தான்

-அருண்மொழி-

பாலாஜி பந்து வீச்சில் அசத்த கம்பீர் துடுப்பாட்டத்தில் கலக்க எட்டு விக்கெட்டுக்களால் இலகுவாக ராஜஸ்தான் ரோயல்ஸை வீழ்த்தியது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி.

ஐ.பி.எல்லின் பதினேழாவது ஆட்டம் கொல்கத்தாவில் நேற்று இடம் பெற்றது. இதில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவர் கம்பீர் முதலில் துடுப்பெடுத்தாடுமாறு ராஜஸ்தான் அணியைப் பணித்தார். இதன் பிரகாரம் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி மிக மோசமாகத் துடுப்பெடுத்தாடியது.

ராஜஸ்தான் அணி வீரர்கள் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெறுவதற்கே மிகவும் திண்டாடினர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களம் நுழைந்த வொட்ஸன் - பவுனிக்கர் ஜோடி முதல் விக்கெட்டுக்காக 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தது. பாலாஜியின் பந்து வீச்சில் 11 ஓட்டங்களுடன் வொட்ஸன் வெளியேறியதைத் தொடர்ந்து ராஜஸ்தானின் சரிவு ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து வந்த வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

கொல்கத்தா அணியின் மிகச் சிறந்த களத் தடுப்பின் காரணமாக இரண்டு விக்கெட்டுக்களை ராஜஸ்தான் அணி ரன் அவுட்டில் இழந்தது. மத்திய வரிசையில் களமிறங்கிய மினேரியா மாத்திரம் சிறப்பாகவும் அதிரடியாகவும் துடுப்பெடுத்தாடினார். அவரையும் பாலாஜி வெளியேற்றி வைத்தார். 17 பந்துகளில் 21 ஓட்டங்களுடன் மினேரியா ஆட்டமிழந்து வெளியேறினார். பின்வரிசை வீரர்கள் எவருமே கொல்கத்தாவின் பந்து வீச்சை சமாளிக்க முடியாத நிலையில் 15.2 ஓவர்களிலேயே சகல விக்கெட்டுக்களும் வீழ்த்தப்பட்டன. இதில் பின் வரிசை வீரர்களில் மூவர் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர்.




பந்து வீச்சில் கொல்கத்தா அணி சார்பில் பாலாஜி 15 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். சகிப் அல் ஹசன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கியது கொல்கத்தா. இருப்பினும் முதலாவது ஓவரிலேயே அதிர்ச்சி கொடுத்தது ராஜஸ்தான் அணி. ஓட்டமெதுவும் பெறாத நிலையில் கலிஸ் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து அணித்தலைவர் கம்பீர் - பிஸ்லா ஜோடி நிதானமாய்த் துடுப்பெடுத்தாடியது. 31 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் பிஸ்லா ஆட்டமிழந்து வெளியேறினார்.

திவாரி அணித்தலைவர் கம்பீருடன் இணைந்து மிக நிதானமாய் ஆடி 14 ஆவது ஓவரில் மேலதிக விக்கெட் இழப்பின்றி வெற்றியைத் தொட்டனர்.

கம்பீர் 35 ஓட்டங்களையும், திவாரி 30 ஓட்டங்களையும் அணிக்காக ஆட்டமிழக்காது பெற்றுக் கொடுத்தனர். ராஜஸ்தானின் முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்தி கொல்கத்தாவின் வெற்றிக்கு வித்திட்ட பாலாஜி ஆட்டநாயகனாய்த் தெரிவானார்.

## ஐ.பி.எல் பதினேழாவது ஆட்டம்

ஆட்டம்: ராஜஸ்தான் ரோயல்ஸ் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ்  நாணயச் சுழற்சி: கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
முடிவு: 08 விக்கெட்டுக்களால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வெற்றி  ஆட்டநாயகன்: பாலாஜி

ராஜஸ்தான் ரோயல்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வொட்ஸன் | b பலாஜி | 11 | 13 | 02 | 0 |
| பவுனிக்கர் | st பிஸ்லா b இக்பால் அப்துல்லா | 15 | 15 | 02 | 0 |
| பசல் | run out( இக்பால் அப்துல்லா) | 03 | 04 | 00 | 0 |
| றோட் | run out( சகிப் அல் ஹசன் / பிஸ்லா) | 11 | 15 | 01 | 0 |
| மெனேரியா | c பகிர்ரா b பாலாஜி | 21 | 17 | 01 | 1 |
| ரெயிலர் | st பிஸ்லா b யூசுப் பதான் | 06 | 09 | 00 | 0 |
| ரஹானி | b பாலாஜி | 06 | 09 | 00 | 0 |
| வோர்ன் | ஆட்டமிழப்பில்லை | 03 | 06 | 00 | 0 |
| அமிர் சிங் | b சகிப் அல் ஹசன் | 00 | 02 | 00 | 0 |
| ரைட் | b சகிப் அல் ஹசன் | 00 | 01 | 00 | 0 |
| ரிடிவேடி | b லீ | 00 | 02 | 00 | 0 |
| உதிரிகள் | (w 3, lb 1, nb 1) | 05 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| லீ | 2.2 | 12 | 1 | 0 |
| சகிப் அல் ஹசன் | 04 | 21 | 2 | 0 |
| பலாஜி | 03 | 15 | 3 | 0 |
| இக்பால் அப்துல்லா | 03 | 18 | 1 | 0 |
| பகிர்ரா | 01 | 04 | 0 | 0 |
| யூசுப் பதான் | 02 | 10 | 1 | 0 |

TOTAL - 81/10 (15.2)
1-24 (வொட்ஸன்), 2-28 (பவுனிக்கர்), 3-38 (பசல்), 4-43 (றோட்), 5-67 (ரெயிலர்), 6-78 (ரஹானி), 7-79 (மெனேரியா), 8-80 (அமிர் சிங்), 9-80 (ரைட்), 10-81 (ரிடிவேடி)

கொல்கத்தா நைட் ரைடர்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கலிஸ் | c ரெயிலர் b ரைட் | 00 | 02 | 00 | 0 |
| பிஸ்லா | c றோட் b வோர்ன் | 09 | 22 | 00 | 0 |
| கம்பீர் | ஆட்டமிழப்பில்லை | 35 | 35 | 03 | 0 |
| திவாரி | ஆட்டமிழப்பில்லை | 30 | 26 | 04 | 1 |
| யூசுப் பதான் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மோர்கன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சகிப் அல் ஹசன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| இக்பால் அப்துல்லா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பகிர்ரா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| லீ | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பாலாஜி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 5, lb 4, nb 2) | 11 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ரைட் | 3.5 | 29 | 1 | 0 |
| வொட்ஸன் | 04 | 20 | 0 | 0 |
| வோர்ன் | 04 | 17 | 1 | 0 |
| ரிடிவேடி | 01 | 08 | 0 | 0 |
| அமிர் சிங் | 01 | 07 | 0 | 0 |

TOTAL - 85/2(13.5)
1- 00 (கலிஸ்), 2 - 31 (பிஸ்லா)

c - பிடியெடுப்பு  b - பந்துவீசியவர்  st - ஸ்ரொம்

# உதயனின் உலகக் கிண்ணக் கொண்டாட்ட அதிர்ஷ்டசாலிகள்



முதலாம் பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலியை இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியப் பொதுமுகாமையாளர் இ.சிறீதரன் தெரிவு செய்வதை முதலாவது படத்திலும் இரண்டாம் பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலியை உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் தெரிவுசெய்வதை இரண்டாவது படத்திலும் EURO STAR வழங்கும் சிறப்புப் பரிசினை உதயன் மக்கள் தொடர்பு முகாமையாளர் திருமதி ந.தங்கராஜா தெரிவுசெய்வதை இறுதிப் படத்திலும் காணலாம்.

## மாபெரும் இறுதிப்போட்டி

1, 50,000 ரூபா பணப் பரிசில் பெறும் அதிர்ஷ்டசாலி

ப.சசிகுமார்,
763543668 V
(ஏழாலை கிழக்கு, ஏழாலை)

1, 00,000 ரூபா பணப் பரிசில் பெறும் அதிர்ஷ்டசாலி

கே.விஜயகரன்,
862963954 V
(மடம் வீதி, திருநெல்வேலி)

"EURO STAR" வழங்கும் சிறப்புப் பரிசில் பெறும் அதிர்ஷ்டசாலி

ம.சுருத்திக்கா,
748052895 V
(டச்சு வீதி, உடுவில், சுன்னாகம்),

### ஆறுதல் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளும் அதிர்ஷ்டசாலிகள்

வி.திவாகர், 782692593V
(63/3, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்),
கே.ரி.சிவராஜா, 462072520V
(306/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்),
தி.சிவசுந்தரன், 512242456V
(சொப்பந்தானை, கரவெட்டி),
சு.உமாமகேஸ்வரி, 837152810V
(உடுவில் தெற்கு, மானிப்பாய்),
எஸ்.விஜயதாரணி, 807143344V
(பிரதான வீதி, மாதகல்),
யோ.மர்லின் தர்சினி 935513669V
(28, சுவாட்ஸ் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்),
சு.பிரதீபன், 800404215V
(கே.கே.எஸ். வீதி, தாவடி, கொக்குவில்),
எஸ்.திருமகள், 817204392V
(புளியங்கண்டு வீதி, ஆனைக்கோட்டை),
ஸ்ரீ.அம்பிகா, 927171961V
(கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்),
க.நந்திகா, 706880364V
(இந்திரகிரி, வதிரி, கரவெட்டி),

## காலிறுதிப்போட்டி

தலா 10,000 ரூபா பணப்பரிசில் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

க.பூவேந்திரன், 851853456V
(நீலிப்பந்தனை, காரைநகர்),
தெ.தினேஸ், 910662830V
(மாத்திராவளவு, கொம்மந்தறை, வல்வெட்டித்துறை).
அ.கமலாகரன், 470813164V
(எஸ்.எம். கேணியடி, காரைநகர்),
ச.மதியுகன், 860832623V
(மீசாலை வடக்கு, கொடிகாமம்),
பி.புஷ்பவதி, 735544004V
(கைதடி தெற்கு, கைதடி)

## தினமொரு பரிசுப்போட்டி

### "கேற்வே" வழங்கும் பரிசுக் கூப்பனைப் பெறுவோர்

சா.ஜிந்துஜா, 878581520V
(குமரக்கோட்டம், கோண்டாவில் கிழக்கு.),
மோ.ஜனகன், 922932166V
(நவாலி தெற்கு, மானிப்பாய்.),
ரா.டக்கிளஸ், 863373298V
(47/3 செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.),
ஜெ.தயாழினி, 906313138V
(கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு.),
கே.பரநிருபன், 8904826 27V
(நீர்வேலி வடக்கு, நீர்வேலி.),
ப.முரளிதரன், 683390666V
(14, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை.),
த.சுஜேந்திரா, 892781028V
(28/23 மணத்தறை வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.),
இ.கீர்த்திகா, 74624427V
(47, கொண்டலடி வீதி, நல்லூர்.),
எஸ்.நிருஜன், 640402229V
(40, கடையிற் சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.),
சி.சிவகுமாரன், 500884207V
(அப்பையா வீதி, கொக்குவில் மேற்கு.),
அ.றுக்ஷா, 896402196V
(காளிகோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.),
ஸ்ரீ.சம்ஷிகா, 926481428V
(8/2, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.),
தெ.சர்மிளா, 907242579V
(442/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.),
சு.அருட்குமரன், 533512836V
(மாவடிச் சந்தி, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.),
வி.சொரூபினி, 946853011V
(மீசாலை மேற்கு, மீசாலை.),
வ.கிருஷ்ணகாந்தன், 890392393V
(வட்டுக்கோட்டை வடக்கு, சித்தங்கேணி.),
து.கல்யாணி, 918091955V
(கதிரிப்பாய், அச்சுவேலி.),
அ.யனார்த்தனன், 940673860V
(தமிழ் பாடசாலை ஒழுங்கை, மல்லாகம்.),
சி.கிசோத், 931883119V
(ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு.),
சி.கலைவாணி, 938112657V
(வீடியோ கலாமினி, அச்சுவேலி.),
தெ.நரேன், 893603107V
(பண்டகை வீதி, உடுப்பிட்டி.),
வா.முருகதாஸ், 945082313V
(மூளாய் கிழக்கு, சுழிபுரம்.),
வி.சாகித்தியன், 931922980V
(பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.),
ம.மேரிசோபியா, 88603269V
(பருத்தித்துறை வீதி, நெல்லியடி.),
சி.பவித்திரா, 897181509V
('சந்திரோதயம்', வதிரி, கரவெட்டி.),
சு.சியாந்தன் 923401920V
(38, கொல்லவிளாங்குளம், வவுனிக்குளம்.),
பா.பிரசாந்தினி, 835723445V
(உடுவில் தெற்கு, சுன்னாகம்.),
வ.அகில்வனா, 875983377V
(சிவன் வீதி, ஆவரங்கால்.),
ம.பிரதீஸ்வரன், 850682534V
(வேளா தோப்பு, யாழ்ப்பாணம்.),
ம.அரவிந்தன், 840253252V
(கொக்குவில் மேற்கு, கொக்குவில்.),
லோ.ஜனார்த்தனன், 901812764V
(4 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.),
க.ஹிமாலினி, 917212341V
(கருணாநிதி ச.சமூக நிலையம், வல்வெட்டி.),
ஞா.துவாரகா, 867804307V
(மானிப்பாய் வீதி, கைதடி மேற்கு, கைதடி.),
கே.பிரதீபா, 896582437V
(64/4 பொற்பதிவீதி, கொக்குவில் கிழக்கு.)
கோ.சங்கீதா 906143674 V
(அல்லின் வீதி, காரைநகர்)
சி.அலக்ஷா 928571211 V
(மந்துவில் கிழக்கு, கொடிகாமம்)
ரி.அபிர்தவர்ஷினி 946600580 V
(3, சிவன்கோயில் வீதி, சாவகச்சேரி)
வை.சத்தியவாள் 853010804 V
(1ஆம் வட்டாரம், நயினாதீவு)
சி.லாவண்யா 928153517 V
(1ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி)
சு.சுஜீந்திரன் 842604320 V
(அரசடி ஒழுங்கை, கூழாவடி, ஆனைக்கோட்டை)
பி.புஸ்பராணி 716731120 V
(கண்டுவில் 1ஆம் ஒழுங்கை, டச்சுவீதி, சாவகச்சேரி)
இ.அனற்சரண்யா 895742457 V
(56, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்)
சி.சிவானந்தன் 903471549 V
(142/8, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)
த.மேரி ஜெனீவா 918031618 V
(18, மடம் வீதி, யாழ்ப்பாணம்)
வை.காண்டீபன் 841153430 V
(64, ஏ.வி.வீதி, அரியாலை)
சி.சுபாந்தினி 887402256 V
(சண்முகம் வீதி, சாவகச்சேரி)

(04ஆம் பக்கம் பார்க்க)




ஆறுதல் பரிசிலுக்குரிய அதிர்ஷ்டசாலிகளை சிங்கர் நிறுவனத்தின் மானிப்பாய்க் கிளை முகாமையாளர் ந.சிவபாலன், உதயனின் சிரேஷ்ட உடகவியலாளர் ஞா.குகநாதன், உதயனின் சிரேஷ்ட உதவி ஆசிரியர் மா.பேரின்பநாயகம் ஆகியோர் தெரிவுசெய்வதை முதல் மூன்று படங்களிலும், ''கேற்வே''யின் தினமொரு பரிசிலுலை ''கேற்வே'' யாழ். கிளை முகாமையாளர் எஸ்.செல்வராஜா, உதயன் ஆசிரியர் பீட உறுப்பினர் ம.அருட்குமரன் ஆகியோர் தெரிவு செய்வதை அடுத்த இரு படங்களிலும், ''கம்பியூட்டர் ருடே''யின் தினமொரு பரிசிலை குறித்த சஞ்சிகையின் ஆசிரியர் எஸ்.அனுராஜ் தெரிவுசெய்வதை ஆறாவது படத்திலும், காலிறுதிப் போட்டிக்கான அதிர்ஷ்ட சாலிகளை உதயன் விளம்பரப்பிரிவைச் சேர்ந்த தி.மயில்வாகனம், உதயன் ஊடகவியலாளர் ந.நவரட்ணராஜா ஆகியோர் தெரிவுசெய்வதை இறுதி இருபடங்களிலும் காணலாம்.

## "கம்பியூட்டர் ருடே"யின் வருட சந்தாவைப் பெறுவோர்

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வ.பாஸ்கரன் 652502016 V
(''பொன்மணிவாசா'' கரணவாய் கிழக்கு கரவெட்டி)
பெளியா அன்ராசா 908450396 V
(காரச்சடி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்)
ப.நிரஞ்சினி 915963226 V
நாவற்காடு, வரணி, யாழ்ப்பாணம்.
லெ.விஜேஷ்மன் 762442230 V
(12/5, சந்தனமாதா கோயில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்)
ந.கபிலானந் 913582861 V
(49, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்)
வி.சாந்தினி 918490779 V
(கச்சாய் வீதி, சாவகச்சேரி)
சி.ரம்மியகலா 896942107 V
(124/1, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்)
அ.பி.லொய்ஸ் 816802105 V
(41/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்)
ந.உதயகுமாரன் 681010750 V
(30/11, பிள்ளையார் கோயில் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்)
யோ.சயந்தன் 911062437 V
(ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்)
ச.சிவரஞ்சன் 741680602 V
(தாளையம்பதி வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி)
க.கிருபாகரன் 671231449 V
(6, சேர். பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்)
இ.ஐங்கரன் 821385121 V
(சங்குவேலி வடக்கு, மானிப்பாய்)
ந.லோஜன் 882462307 V
(தாவடி தெற்கு, கொக்குவில்)
இ.பிரசன்னா 757663481 V
(முருகன் கோயிலடி, புலோலி வடமேற்கு, புலோலி)
சி.கார்த்தியானி 946070327 V
(132/2, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)
சி.பிரதீசன் 942781440 V
(55/4, இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்)
த.சாம்பவி 897032295 V
(61, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்)
சு.யாதுசன் 912602125 V
(உடுவில் வீதி, மானிப்பாய்)
ச.கலைவாணன் 911833492 V
(132, கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்)
எஸ்.மிலானி 907272540 V
(9, பேக்கரியடி, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்)
ச.பிரதாப் 902573046 V
(கண்டாவளை, கிளிநொச்சி)
சு.கீர்த்தனா 905964135 V
(சுதுமலை வடக்கு, மானிப்பாய்)
ந.டேனுகா 897701847 V
(சிவகுலவீதி, உரும்பிராய் மேற்கு)
இ.பிரதாபன் 920263950 V
(சரசாலை வடக்கு, சரசாலை)
வி.கேசிகா 895944483 V
(சூறாவத்தை, சுன்னாகம்)
சி.சஸ்தீபன் 882572609 V
(22/1, ஐயனார் கோயில் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்)
உ.பானுஜன் 658041754 V
(மஞ்சுளா பவனம், 4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை)
என்.நிவேதா 928010830 V
(கரணவாய் மத்தி, கரவெட்டி)
சி.சிவானந்தினி 887861978 V
(ஆனைப்பந்தி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி)
த.நித்தியா, 906272220 V
(சிவமஹால், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
த.டிலோஜன் 900712979 V
(ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்)
சி.அனோஜனா 855972751 V
(103/1, (211/30) கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்)
சா.சிந்துஜா 79283420 V
(374, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)
ப.ஜீவலக்ஷி 511974127 V
(கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்)
மு.கஜந்தன் 892453020 V
(வட்டு. கிழக்கு, சித்தன்கேணி)
ர.சியாமளா 926732609 V
(உடையாளர் கிணற்றடி, அளவெட்டி மத்தி)
ஏ.ராஜசந்திரன் 760273660 V
(26, கண்ணாபுரம், நாவாந்துறை தெற்கு)
பு.லக்ஷிகா 917182019 V
(23, மாரியம்மாள் வீதி, திருநெல்வேலி தெற்கு)
இ.ஸ்ரீகஜன் 911614146 V
(புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம்)
ச.சுபாஸ்கரன் 783082780 V
(தவசிகுளம், கொடிகாமம்)
கோ.வேனுஜா 925692948 V
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
வ.பத்மசிறி, 910912674 V
(பாக்கியலட்சுமி பவனம், அல்வாய் தெற்கு, வதிரி)
க.கணேசமூர்த்தி 703192874 V
(தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்)
ஜெ.ஆஷா 848205273 V
(1ஆம் குறுக்குத் தெரு, இணுவில் வீதி, மானிப்பாய்)
த.யாழினி 828191012 V
(சாரையடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளிநொச்சி மத்தியகல்லூரி பழைய மாணவனும் உயிரியல் பாட ஆசிரியருமான

### மு.இரவீந்திரன்

அவர்கள் இன்று (18/04/2011) இல் இருந்து கிளிநொச்சி மத்திய கல்லூரியின் அதிபராக கடைமை யேற்பதையிட்டு பெருமகிழ்வடைவதுடன், அவரது வழிகாட்டலில் கல்லூரி மேலும் மேலும் சிறக்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(3250) பழைய மாணவர்கள் 2001 உயர்தரம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கம்மா செல்லத்துரை



நவிண்டில், மாப்பானை கடவையைப் பிறப்பிட மாகவும் அல்வாய் மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது வதிரி இரும்பு மத வடியில் வசித்து வருபவரு மாகிய திருமதி தங்கம்மா செல்லத்துரை கடந்த (15.04.2011) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் நாகம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற சி.செல்லத்துரையின் (முன்னாள் இ.போ.ச. சாரதி) அன்பு மனை வியும் காலஞ்சென்ற சிவகாந்தன் மற்றும் சிவகாந்தமலர் (ராசாத்தி -கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், நவரத்தினராசாவின் (தம்பண்ணா-கனடா) மாமியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் கதிரவேலு, செல்லம்மா ஆகியோரின் சகோதரியும் கனடாவில் வசித்துவரும் அமுதினி கவிதாசன், தர்மேந்திரா(பாபு), சர்ரேவந்திரா (கோபு), மலரினி, ஜஸ்வினி, நவஜினி, ஜெகேந்திரா(மது) ஆகியோரின் பேர்த்தியும் விணுஷின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2011) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் தாழையடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வதிரி. (c'57771 4) ந.சிவகாந்தமலர் (மகள்-ராசாத்தி)

### சின்னத்துரை குணபாலசிங்கம்

முரசுமோட்டையைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை குணபாலசிங்கம் கடந்த(16.04.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பர் சின்னத்துரை -செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைரவப்பிள்ளை சின்னையா மற்றும் சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியநிதியின் அன்புக் கணவரும் சிறிசுவேதா, சிறிசுபைதா(லண்டன்), காலஞ் சென்ற சிறி கோகிலன் மற்றும் சிறிமயூரன், சிறிடினேஸ்காந், கஜீபன் ஆகியோரின் தந்தையும் குமாரசாமி சதானந்தன், கணபதிப் பிள்ளை நாகேஸ்வரன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் இசைப்பிரியா, இசைவிழி, இசைநிலா, யோய்சி, றெபேட், ஜெசிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்.
T.P 0779483826.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பான் கி - மூன் நிபுணர்குழு தந்ததென்?

இலங்கையில் - வன்னி மண்ணில் - இரண்டு வருடங்களுக்கு முன்னர் - 2009 ஆம் ஆண்டின் முற்பகுதியில், அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப் போர் இடம் பெற்றவேளை, இரு தரப்புகளாலும் அனைத்துலக மனித உரிமைச் சட்டங்களும், மனிதாபிமானச் சட்டங்களும் மீறப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கி - மூன் இந்த விவகாரம் குறித்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்கென நியமித்த நிபுணர்குழு, அதனது அறிக்கையில் மேற்கண்ட தகவலைத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

தனது மிக நீண்ட அறிக்கையில், நிபுணர் குழு மொத்தம் நான்கு பரிந்துரைகளைச் செய்துள்ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

★ஆயுதப் போரின் போது, இரு தரப்புகளாலும் சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பான நீதியான விசாரணைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும்.

★இலங்கை தொடர்பாக ஐ.நா பொதுச் செயலாளர், சுதந்திரமான அனைத்துல விசாரணைப் பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

★ இலங்கை தொடர்பாக 2009 ஆம் ஆண்டில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை மீண்டும் கொண்டு வருவது குறித்து ஐக்கிய நாடுகள் சபை மீளாய்வு செய்ய வேண்டும்.

★ போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் வகையிலான நீண்டகால நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★ துணைப் படைகளை (அதாவது ஆயுதக் குழுக்களை) களைய வேண்டும். போரினால் பிரிந்த குடும்பங்களை ஒன்று சேர்க்க வகை செய்ய வேண்டும். இறந்தவர்களுக்கு அல்லது காணாமற்போனவர்களுக்கு மரணச் சான்றிதழ்கள் வழங்க வேண்டும்.

★ அனைத்து இடம்பெயர்ந்தவர்களையும் மீளக் குடியமர்த்தி, அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் வரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க வேண்டும்.

மேற்சொன்ன பரிந்துரைகளோடு -

இலங்கை அரசு நியமித்துள்ள கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அனைத்துலக தரத்துக்கு அமைவானதல்ல. அதில் மிகவும் ஆழமான குறைபாடு கள் உள்ளன -

ஐ.நாவின் செயலாளர் நாயகமும் இலங்கை ஜனாதிபதியும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கைக்கு ஏற்புடையதாக அதன் செயற்பாட்டு விதிகள் அமைக்கப்பட வில்லை -

போரின் இறுதி நாள்களில் ஐ.நாவின் அமைப்புகளோ அரசியல் அங்கங்களோ வன்னியில் பொதுமக்களைப் பாதுகாகத் தவறிவிட்டன- என்றும் நிபுணர்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இவை தவிர, பான் கி - மூனின் நிபுணர்குழு, வன்னிப் போரில் அரசாங் கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் மனித குலத்துக்கு எதிரான மிகப் பாரதூரமான போர்க் குற்றங்களை இழைத்துள்ளன என்றும் காட்டமாகத் தெரிவித்திருக்கிறது.

அதற்கும் மேலாக, போரின் இறுதிக் கட்டத்துடன் தொடர்புடையதான, உண்மையென நம்பக்கூடிய நம்பத் தகுந்த குற்றச்சாட்டுக்களையும் நிபுணர்குழு இனம் கண்டிருக்கிறது.

அத்தோடு, தனிநபர் மதிப்பைக் காப்பதற்கான அதிகாரங்களை மீறுவதற்கு இந்தப் போர் வழிகாட்டியாக, ஒரு முன் உதாரணமாக விளங்குகிறது என்றும் நிபுணர் குழு கவலையும் கண்டனமும் தெரிவித்திருக்கிறது.

மேலும், இலங்கை அரசு இறுதிப் போர் குறித்து இப்போது கூறி வருவதற்கு மிக வேறான அல்லது முரணான பக்கத்தை நிபுணர்குழு வெளிப்படுத்தி இருக்கிறது.

இறுதிப் போரின் போது பொதுமக்களுக்கு உயிரிழப்பு ஏற்படுத்தியதில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் பங்குண்டு என்று கூறும் நிபுணர் குழு, அரச படைகளே கூடுதலான உயிரிழப்புகளுக்குக் காரணம் என்றும் தொட்டுக்காட்டியுள்ளது. அரசாங்கம் விடுத்த அறிவிப்புகள் செயற்பாட்டில் எதிர்மாறாக இருந்தமையையும் விஸ்தாரமாக விவரித்துள்ளது.

அதேவேளை-

போர் நடைபெற்ற பகுதிகளில் மிகப் பெரும் ஆபத்துகள் நிலவிய போதிலும், மக்களை அங்கிருந்து வெளியேற விடாது தடுத்தமை, சொந்த மக்களையே மனிதப் பணயக்கைதிகளாகப் பயன்படுத்தியமை உட்பட புலிகளுக்கு எதிராகவும் நிபுணர்குழு பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கிறது.

போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளின் மனித உரிமைகள் சட்ட மீறல்கள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்து பதிலளிக்க, போர் வேளையில் இயங்கிய விடுதலைப் புலிகளின் உயர்மட்ட இராணுவத் தலைமைக் கட்டமைப்பு இப்போது இல்லை. அவர்களில் எவரையும் பொறுப்புக் கூறுமாறு கேட்பது இயலாததாகிவிட்டது.

அரச தரப்பின் இராணுவக் கட்டமைப்பு, போர்க் காலத்தில் அது நடந்து கொண்ட விதம் குறித்துப் பொறுப்புக் கூறுமாறு கேட்கப்பட வாய்ப்புண்டு.

அந்த வகையில், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்குப் பதிலளிக்க நால்வர் கொண்ட குழு ஒன்றை அரசு நியமித்திருக்கிறது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை அரசுக்குச் சீற்றத்தை உண்டாக்கியிருக்கும். அதனால் ராஜதந்திர வழியிலேயே அது பதிலளிக்க, எதிர்கொள்ள முனைந்துள்ளது. அறிக்கைக்கு எதிராக உத்தியோக பூர்வமாக கருத்து வெளியிடுவதில்லை என்பதும் அரசின் நிலைப்பாடாகி இருக்கிறது.

எனினும், இலங்கையை சர்வதேச நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்வதே நிபுணர் குழுவின் நோக்கம் என்று போடுபோட ஆரம்பித்தாயிற்று.

அரசு கருத்துக் கூறத் தாமதம் காட்ட, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்றவை மூனின் நிபுணர் குழுவைத் தூற்றவும், கண்டிக்கவும் ஆரம்பித்து விட்டன. அரசு மௌனம் சாதிக்க, அதற்குத் துதிபாடும் கட்சிகள், குழுமங்கள் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராகப் பேழியக்கப் போராட்டம் நடத்தும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

தமிழர்களின் உரிமைகளை அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த கொழும்பு அரசுகள் பறித்ததோடு, அவர்களின் அறவழி சார்ந்த சாத்வீகப் போராட்டங்களை நசுக்கின.

அவ்வாறு நசுக்குவதற்கு ஆரம்பத்தில் பொலிஸ் படையையும், பின்னர் ஆயுதப்படைகளையும், அவற்றோடு காடையர் படையையும் சேர்த்து காலின் கீழ் தமிழர்களையும் அவர்களின் நியாயமான் கோரிக்கைகளையும் மிதித்ததன் விளைவு தான் இன்று சர்வதேச அரங்கினால் போர்க்குற்றவாளியாக இனங்காணப்படும் நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது என்பதனை சிங்களத் தலைமைகள் மறந்து செயற்படும் வரை -

சர்வதேச அரங்கில் எமது நாடு கூனிக்குறுக நேரிடும் என்பதனை உணராதிருக்கும் வரை -

சர்வதேச மட்டத்தில் அடிக்கடி பங்கமுறும் நிலை வரும், வளரும் என்பதனை உய்த்து உணரக்கூடாதா?

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் திட்டமிட்டபடி நாளை இடம்பெறும்

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் திட்டமிட்டபடி நாளை செவ்வாய் கிழமை முற்பகல் 10மணியளவில் நடை பெறும் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

யாழ். மாவட்டத்தின் வருடாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறும் என்றும் அதில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், துறைசார் திணைக்களத் தலைவர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக் கப்பட்டிருந்தது.

இருப்பினும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சிங்கப்பூர் பயணமாகவுள்ளதால் இந்தக் கூட்டத்தை ஒத்திவைக்குமாறு அந்தக் கட்சியின் எம். பிக்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் அரச அதிபரைக் கேட்டுக் கொண்டனர்.

ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்பதால் கூட்டத்தை ஒத்திவைக்கும் அதிகாரம் அவரிடமே உள்ளதால் இதுபற்றி அவருக்குத் தகவல் வழங்குவதாக அரச அதிபர் எம். பிக்களிடம் தெரிவித்திருந்ததாகவும் தெரிய வருகிறது. (ம-9)

## உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு முன்னோடிப்பரீட்சை

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட தமிழ் மாணவர்கள் இம் முறை உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடிப் பொதுப் பரீட்சை அடுத்தமாதம் 14ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்தப்பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இணைந்த கணிதம், உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களைக் கற்கும் மாணவர்களை பரீட்சைக்குத் தயார்படுத்தும் முகமாக நடத்தப்படவுள்ள இந்த முன்னோடிப்பரீட்சைக்கு மாணவர்கள் தம்மை தயார்படுத்துமாறு பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீட தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் கேட்டுள்ளனர்.

பரீட்சைக்குரிய வினாத்தாள் இரண்டு வாரங்களுக்குள் மதிப்பீடுசெய்யப்பட்டு புள்ளித்திட்டம் வழங்கப்பட்டு அவை தமிழ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## ஆஸ்திரேலியாவுக்கான மாணவர் விசாவில் தளர்வு குறைந்த ஆவணங்களைச் சமர்ப்பித்தாலே போதும்

கொழும்பு, ஏப்.18

ஆஸ்திரேலியாவுக்கான மாணவர் விசாவைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் குறைந்தளவிலான ஆவணங்களைச் சமர்ப்பித் தாலே போதும் என அந்நாட்டு குடியுரிமை மற்றும் குடியேற்றத் திணைக்களம் அறிவித்துள்ளது.

38 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு விசா நடைமுறையில் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 2 ஆம் திகதி முதல் இப் புதிய முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது. 2009 - 2010 காலப் பகுதியில் 2 லட்சத்து 70 ஆயிரத்து 499 மாணவர்களுக்கு ஆஸ்திரேலியா குடியேற்றத்துறையினால் விசா வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் காலப்பகுதியில் 3 லட்சத்து 82 ஆயிரத்து 710 மாணவர்கள் ஏற்கனவே மாணவர் விசாவுடன் ஆஸ்திரேலியாவில் தங்கியுள்ளனர். துறைசார் ரீதியாக மாணவர் விசா நடைமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன். குடிவரவுத் துறையின் நடவடிக்கைகளை இலகுவாக்கு வதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குடியுரிமை மற்றும் குடி யேற்றத் திணைக்களத்தின் 2010 மீளாய்வைத்தொடர்ந்தே மாணவர் விசா அனுமதிகளில் இருந்த கட்டுப்பாடுகளை அரசு தளர்த்தியுள்ளது.

ஆனால், ஏற்கனவே மாணவர் விசா அனுமதியைப் பெற்று ஆஸ்திரேலியாவிலுள்ளவர்கள் அங்கு நிரந்தரக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு புதிய விதிமுறைகள் சாதகமானவையாக அமையா என குடியுரிமை மற்றும் குடியேற்றத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (வ)

## கடன் அடிப்படையில் சிமெந்து விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ். மாவட்ட கிராமிய கூட்டுறவு வங்கியின் சமாசம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் சிமெந்தை கடன் அடிப்படை யில் விற்பனை செய்துவருகிறது.

மேற்படி சமாசம் சிமெந்து முகவரின் அந்தஸ்தைப் பெற்றுள்ளதால் மலிவான விலையில் சிமெந்தை கொள்வனவு செய்ய முடியும் என யாழ். மாவட்ட கிராமிய கூட் டுறவு வங்கியின் சமாசத்தின் பொது முகாமையாளர் சி. கெங்காதரன் தெரிவித்தார்.

ஒருபைக்கற் சிமெந்தை 760 ரூபாவிற்கு கொள்வனவு செய்யமுடியும் என்றும் தனியார் வர்த்தகரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் விலையிலிருந்து 20 ரூபா குறைந்த விலையில் பெற்றுக்கொள் முடியும் என்று தெரிவித்தார்.

அத்துடன் காலக் கிரமத்தில் பிறிமா கோதுமைமாவும் குறைந்த விலையில் விற்பனை செய்யபடவுள்ளதால் அங்கத்துவ சங்கங்களும் பொதுமக்களும் பயனடைவார்கள் என மேலும் தெரிவித்தார். (எ-31)

## சங்கானை வர்த்தகரின் பணம் அபகரிப்பு ஒரு தொகைப் பணத்துடன் இளைஞன் கைது

கடந்த சில நாள்களுக்கு முன்னர், சங்கானைப் பகுதியில் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வர்த்தகர் ஒருவரின் ரூபா 4 இலட்சம் ரூபாவைத் திருடிய சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவரை மானிப்பாய் பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

திருடப்பட்ட பணத்தில் ஓர் மோட்டார் சைக்கிள் (ரூபா 135000/-), சொனி ரேடியோ செற்(ரூ.75000/க்கு மேல்), பவுண் நகைகள் ஆகியவற்றைப் பிரஸ்தாப நபர் ஓரிரு நாள்களில் வாங்கியுள்ளார். இதனை அவதானித்த பணத்தை பறிகொடுத்த நபர் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து பொலிஸார் பிரஸ்தாப நபரை கைது செய்து விசாரணை செய்தபோது இவருடைய திருட்டு அம்பலத்திற்கு வந்துள்ளது.

இவருடைய மனைவி, பிள்ளை ஆகியோரும் பொலிஸாரால் விசாரனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் இவருடைய வீட்டை சோதனை செய்து ஒரு தொகைப் பணத்தையும் கைப்பற்றியுள்ளனர். அராலிவீதி, சங்கானையில் வசித்துவரும் பத்மவேல் பவிலன் (24) என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

மேலும் இக்காலங்களில் சங்கானைப் பகுதியில் இடம்பெற்ற ஆலயத்திருட்டுகள், இரவில் கள்ளத்தனமாக பனை ஏறி கள்ளு அபகரித்தமை தொடர்பாகவும் பொலிஸார் இவர் மீது விசாரனை மேற்கொண்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸார் இந்நபரை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்தனர். (ஐ)

# ஆலயங்களின் திருக்காட்சிகள்....


கரவெட்டி வெல்லன் விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.


பருத்தித்துறை சாமுண்டி அம்மன் (கோட்டு வாசல் அம்மன்) ஆலய வருடாந்த திரு விழாவில் சப்பரத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.


காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் புத்தாண்டு தினத்தன்று இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணிக்கின்றார். (250)


புத்தாண்டு தினத்தன்று காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகப் பெருமானின் திருவீதியுலா. (250)



மல்லாகம் பழம்பதி முருகன் ஆலய வருடாந்தத் திருவிழாவில் வேட்டைத் திருவிழா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. தேர்த் திருவிழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (86)

**கோண்டாவில் கிழக்கில் வீடு விற்பனைக்கு**

பலாலி வீதிக்கு அண்மையில் கோண்டாவில் கிழக்கில் இராச வீதியையும் பலாலி வீதியையும் இணைக்கும் கோட்டைக் காடு வீதியில் பரப்பு 1½ நிலத்தில் அமைந்துள்ள வீடு. சுற்று மதிலுடன் உடன் விற்பனைக்குண்டு.தரகர் தேவையில்லை. தொடர்புகளுக்கு: 0779635995, நேரம்: மாலை 5 8 மணி

**கண்ணீர் அஞ்சலி**

யாழ்ப்பாணம் பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் செல்வி சி.கௌசல்யா அவர்களின் தந்தை

**சுப்பன் சிவராஜா**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

காணி மாவட்டப் பதிவகம், ஊழியர் நலன்புரி சங்கம், யாழ்ப்பாணம்.

(40-20-23)(இ/577710)

**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 05 ★ 02 ★ 1940



மறைவு 21 ★ 04 ★ 2008

*சின்னப்பொடி சின்னத்தம்பி(ஐயா)*

*(சிமாசு குஷன் தொழிலக உரிமையாளர்)*

திதி: பிரதமை (18.04.2011)

தாத்தா!
எனை நேரில் பார்க்காது
விண்ணுலகம் சென்றது ஏனோ?
பற்றோடு எனை அழைத்து
விரல் பிடித்து அழைத்துச் செல்ல
இவ்வுலகம் நீங்கள் இல்லையென
கலங்குகிறேன் உம் பேர்த்தி.

மாவடி வீதி,
அச்சுவேலிதெற்கு,

என்றும் உம் நினைவுடன்
பாவிலா(நிலா) (நிலா பன்ஸி, நிலா புத்தகசாலை) மற்றும் குடும்பத்தினர்.

(3264)

## குளிர்த்தி விழா

கோப்பாய்,ஏப்.18

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த குளிர்த்தி விழா இன்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வை முன்னிட்டு அம்பாளின் கிராம தரிசனம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. (ற-72)

## பட்டிமன்றம்

உடுப்பிட்டி இமையாணன் மேற்கு கண்ணகியம்மன் ஆலயத்தின் பூங்கா வனத்திருவிழாவை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை இரவு 9 .30 மணியளவில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறவுள் ளது.

(ம-9)

**விற்பனைக்கு**

Dual core கணினிகள், Wireless நெற்வேக், Printer (HP), Scanner (HP), Telephone Booth, Browsing Booth, Dialog Broad band என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0779202515

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில By. ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302),K.K.S வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.
077 6751649

**வீடு வாடகைக்குத் தேவை**

ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் சிறிய சகல வசதி களும் கொண்ட இருவருக்கு ஏற்ற தனியான வீட்டை கோண்டாவில், திருநெல்வேலிப் பகுதியில் உடன் வாட கைக்கு எதிர்பார்கிறார்.

தொடர்பு T.P-077 2887638

நேரம் : மாலை 4 - 7 மணி (326) (20-23-45)

**வேலையாள்கள் தேவை**

உடுவிலில் இயங்கிவரும் கோழிப்பண்ணைக்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆள்கள் தேவை.

தொடர்பு: NEW R.S.K. FARM, Uduvil.
T.P. No.0213214741

(3262) (20-23-45)

**Personal Class**

தரம்6-A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class ஆங்கிலம் சரளமாக எழுத, பேச, வாசிக்கவும் விரும்புபவர்களுக்கு Spoken With Grammar வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு:- சங்கிலியன் வீதி, நல்லூர். 0778405750 (பிரபல ஆசிரியர்)

## ப.நோ.சங்கத்தின் பொதுக்கூட்டம்

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்கத்தின் தலைமைக்காரியாலய கேட்போர் கூடத்தில் தலைவர் எஸ்.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. மேலும் சங்க வளர்ச்சி தொடர்பான பிரேரணைகள் இருப்பின் அவற்றையும் முன்கூட்டியே சமர்ப்பிக்குமாறும் பொதுச்சபை உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-288)

**அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**



தோற்றம்
09.07.1932

மறைவு
19.03.2011

**அமரர் கனகசபை பரமநாதன்**

(வடலியடைடைப்பு, பண்டத்தரிப்பு)

கடந்த 19.03.2011இல் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் தொலைபேசி வழியாக துயர் பகிர்ந்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் பல வழிகளிலும் எமக்கு உதவி நல்கினோருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (18.04.2011) திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இந்துக்கல்லூரி வீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

தகவல்:-
குடும்பத்தினர்.

# மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் 17 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

## நோயாளர்கள் பெரும் சிரமம்

கொழும்பு,ஏப்.18

ஓராண்டு காலமாகவே மஹரகம புற்றுநோய் மருத்துவமனையில் 17 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக மருத்துவமனையின் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக அந்த மருந்து வகைகளை வெளியிலிருந்து விலைக்கு வாங்க வேண்டிய நிலை நோயாளருக்கு ஏற்பட்டுள்ளது.

புற்றுநோயாளருக்கு வழங்கப்படும் மருந்து வகைகள் விலை கூடியவை என்பதால் அவற்றைத் தனியார் மருந்தகங்களில் விலை கொடுத்து வாங்குவதில் நோயாளர்கள் பெரிதும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

மிகக் குறைந்த விலையில் மருந்துக்களைப் பெறும் நோக்கில் நம்பகத்தன்மையற்ற உற்பத்தி நிறுவனங்களுக்கு மருந்துகளுக்கான கோரல் கட்டளைகள் வழங்கப்படுவதன் காரணமாகவே இந்த மருந்துத் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிறுவனங்கள் உரிய காலத்தில் மருந்து வகைகளை இந்த நாட்டுக்கு வழங்குவதில்லை. நீண்டகாலமாக மருந்துத் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் மஹரகம புற்றுநோய் மருத்துவமனை மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். (ச-22)

# கட்சிப் பதவிகளிலிருந்து தயாசிறி விலகப்போவதாக அச்சுறுத்தல்

## செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்டோரை சேர்க்கக் கோருகிறார்

கொழும்பு, ஏப்.18

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான புத்திக பத்திரன, ரோசி சேனநாயக்க, தலதா அத்துகோரள மற்றும் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோரை மீண்டும் செயற்குழுவில் இணைத்துக் கொள்ளாவிட்டால் கட்சியில் வகிக்கும் அனைத்து பதவிகளிலிருந்தும் விலகிவிடுவேன்.

- இப்படி ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட எம்.பியான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவி தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க- சஜித் பிரேமதாச ஆகிய இருவருக்கிடையே காணப்பட்ட போட்டி முடிவுக்கு வந்துள்ளது.

இருந்த போதிலும், கட்சியின் செயற்குழுவில் அங்கம் வகித்த புத்திக பத்திரன, ரோசி சேனநாயக்க, தலதா அத்துகோரள, இம்தியாஸ் பாக் கீர் மாக்கர் ஆகியோர் செயற்குழுவில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்த உள்ளேன். இந்தப் பேச்சு வெற்றி அளிக்காத பட்சத்தில் கட்சியில் வகிக்கும் அனைத்து பதவிகளிலும் இருந்து நான் விலகிவிடுவேன்.

கட்சித் தலைவர் பதவிக்காக ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான மோதலின் பின்னர், மேற்படி செயற்குழு உறுப்பினர்கள் நீக்கப்பட்டமை ஏற்றுக் கொள்ள முடியாதது - என்றார் தயாசிறி.

வழிபாடு...



பௌர்ணமி தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சங்காராம விகாரையில் பௌத்த மக்கள் மதவழிபாடுகளில் ஈடுபட்டனர். (சி)

# இந்தியாவிலிருந்து நாடு திரும்ப இலங்கை அகதிகள் தயக்கம்

கொழும்பு,ஏப்.18

இந்தியாவின் தமிழ்நாட்டின் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகள் மீண்டும் இலங்கை திரும்புவது குறித்து விருப்பமற்றவர்களாக உள்ளனர்.

இலங்கையில் நிலவிய யுத்த சூழல் முடிவுற்றதைத் தொடர்ந்து அண்மையில் தமிழ்நாட்டில் இருக்கும் அகதிகள் மத்தியில் இலங்கை திரும்புவதற்கான விருப்பம் குறித்த ஆய்வு நடத்தப்பட்டது. அதன்போதே அவர்கள் இலங்கைக்குத் திரும்பிச் செல்வதில் விருப்பமற்றவர்களாக இருக்கின்றமை தெரியவந்துள்ளது. (ச)

# முப்படைகளின் புதிய தலைமையகம் ரூ.3,850 கோடியில் பத்தரமுல்லையில்

கொழும்பு,ஏப்.18

முப்படைகளுக்குமான புதிய தலைமையகம் ஒன்றை 3 ஆயிரத்து 850 கோடி செலவில் நிர்மாணிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய பத்தரமுல்லையில் 56 ஏக்கர்கள் கொண்ட நிலப்பரப்பில் முப்படைகளின் இப்புதிய தலைமையகம் அமையவுள்ளது.

இங்கு ஆயுதப்படை, விமானப்படை மற்றும் கடற்படைகளுக்கான தலைமைச் செயலகங்கள், முப்படைத் தளபதிகளின் அலுவலகங்கள் என்பன அமையவுள்ளன.

காலி முகத்திடலுக்கு அண்மையில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சும் கூட அங்கு கொண்டுசெல்லப்படவுள்ளது.

இவற்றுடன் இராணுவப் படைகளின் பயிற்சிக் கல்லூரிகள், நடவடிக்கைச் செயற் கூடங்கள், தொழில்நுட்ப ஆய்வகங்களும், உள்ளடங்கும்.

புதிய தலைமையகத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டளவில் இந்த நிர்மாணங்களை நிறைவு செய்வதே அரசின் எதிர்பார்ப்பாகும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (ம-22)

# காலி முகத்திடலில் கடற்பகுதியை நகரமாக்கும் பணிகள் அடுத்த மாதம்

கொழும்பு, ஏப்.18

கொழும்பு காலிமுகத்திடலுக்கு முன்புறமாக அமைந்துள்ள கடற்பிரதேசத்தை நிரப்பி மேடாக்கி புதிய நகரமொன்றை நிர்மாணிக்கும் பணிகள் மே மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

துறைமுக அதிகார சபையின் தலைவர் கலாநிதி பிரியத் பந்துவிக்கிரம இத்தகவலை தெரிவித்துள்ளார்.

கொழும்பு தெற்குத் துறைமுகத்தின் புதிய நீர்த் தடாகத்தை அண்டி ஜனாதிபதி செயலகத்தின் முன்புறமாகவுள்ள கடற்கரைப் பிரதேசம் வரையுள்ள கடல் நிரப்பி மேடாக்கப்படவுள்ளது.

இத்திட்டம் காரணமாக காலி முகத்திடல் மைதானத்துக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படமாட்டாது.

காலிமுகத்திடல் மைதானத்துக்கு முன்னாலுள்ள கடற் கரை அலங்கரிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சமுத்திரத்தின் 450 ஏக்கர்கள் வரையான பிரதேசத்தை நிரப்பி மேடாக்கி அங்கு புதிய நகரமொன்றை நிர்மாணிக்கும் ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இப்புதிய நகரம் உள்ளூராட்சி நிர்வாகத் தொகுதி ஒன்றாகவே அமையும்.

மாடிக் கட்டடங்கள், அலுவலகங்கள், வர்த்தக மையங்கள், பொழுதுபோக்கு மையங்கள் போன்ற ஏராளமான அம்சங்களை இப்புதிய நகரம் கொண்டிருக்கும்.

அங்கு அமையவுள்ள அனைத்து மாடிக் கட்டடங்களும் 35 மாடிகளுக்கும் மேற்பட்டவைகளாகவே நிர்மாணிக்கப்படவுள்ளன என்று நகர நிர்வாகத்துக்குப் பொறுப்பாகச் செயற்படும் துறைமுக அதிகார சபையின் தலைவர் பந்துவிக்கிரம மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

# குடாநாட்டில் பரவலாக மழை

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ். குடாநாட்டில் பல இடங்களிலும் நேற்றுப் பரவலாக மழை பெய்துள்ளதாக எமது செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

தற்போது கடும் வெப்பம் நிலவி வரும் நிலையில் இந்த மழை பெய்துள்ளது. நேற்று முற்பகல் வேளையிலேயே பரவலாக இந்த மழை பெய்துள்ளது. (ம-86)

# ஊழியர் ஓய்வூதிய நிதியத்துக்கான இரண்டு சட்டமூலங்கள் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஏப்.18

ஓய்வூதியத் திட்டத்துக்குத் தகுதி பெற்றவர்கள் மற்றும் வெளிநாடுகளில் தொழில் புரியும் ஊழியர்களின் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான இரண்டு சுருக்கப் பிரேரணைகளை நிமல் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களில் இதுவரை ஓய்வூதியத் திட்டத்தில் அடங்காதவர்களைக் கருத்தில் கொண்டே தொழில் தருநர்களின் இந்த ஓய்வூதியத் திட்டத்துக்கான சுருக்கப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஊழியர் ஒருவரின் சேவைக் காலக் கட்டணத்தின் 10சத விகிதமும், ஊழியர் சேமலாப நிதியத்தில் செயலிழந்து போன தொகையும், அதற்கு மேலதிகமாக அரசால் வழங்கப்படும் நூறு கோடி ரூபாவும் சேர்க்கப்பட்டு இந்த நிதியம் ஆரம்பிக்கப்படும்.

இந்த நிதியத்துக்குத் தொழில் தருநர்கள் ஊழியரின் அடிப்படை வேதனத்தில் இரண்டு சதவீதத்துக்கு குறையாத தொகையொன்றையும், ஊழியர்கள் இரண்டு சதவீதத்தையும் செலுத்தவேண்டும்.

ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு முன்பு ஊழியர் மரணமடைந்தால் அவரது 18 வயதுக்கு குறைந்த அல்லது மன ரீதியில் பாதிக்கப்பட்ட அல்லது அங்கவீனமான பிள்ளைக்கு ஓய்வூதியத்தின் 60 சதவீதம் செலுத்தப்படும்.

இந்தத்திட்டத்தின் கீழ் ஊழியர் ஒருவர் 65 வயதை அடைந்ததும் ஓய்வூதியத்தைப் பெறலாம். ஊழியர் ஒருவர் 65 வயதை அடைவதற்கு முன் உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டால் அல்லது செயலிழந்து போனால் அதுவரை அவர் செலுத்தி வந்த தொகையின் 60 சதவீதம் ஓய்வூதியமாக வழங்கப் படும் - என அந்தப் பிரேரணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனியார் துறை ஊழியருக்கான புதிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக தொழிற் சங்கங்களும் சந்தேகங்களை முன்வைத்துள்ளன.

இந்த தனியார் ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக மேலும் கலந்துரையாடப்படுமென ஊழியர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் உறுதியளிக்கப்பட்ட சில நாள்களில் அரசு உறுதிமொழியை மீறி அந்த ஓய்வூதியம் தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருப்பதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

உதயன்
18 ஏப்ரல் 2011 திங்கட்கிழமை

# குடிசன மதிப்பீட்டுப் பணிகள்வடக்கில் மும்முரம்

யாழ்ப்பாணம், ஏப்.18

இந்த வருடம் இடம்பெறவுள்ள குடிசன மதிப்பீட்டுக்கான ஆரம்பகட்ட தகவல் சேகரிப்புகள் வடபகுதியில் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் ஒக்ரோபர் அல்லது செப்ரெம்பர் மாதத்தில் இந்த வருடத்துக்கான குடிசன மதிப்பீடு தேசிய ரீதியாக இடம்பெறவுள்ளது.

அதற்கு முன் ஏற்பாடாக வரைபடம் தயாரிக்கும் கட்டம் நிறைவடைந்துள்ளதனை தொடர்ந்து மக்கள் வசிப்பிட கூறுகளை அடையாளப்படுத்தும் செயற்பாடு இடம்பெற்று வருகிறது.

கடந்த 1981 ஆம் ஆண்டின் பின்னர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறவில்லை.

தற்போது 30 வருடங்களின் பின்னர் இந்தப் பகுதிகளில் இந்த வருடம் குடிசன மதிப்பீடு இடம்பெறவுள்ளது.

அதற்கு முன் ஏற்பாடாக குடிசன வாழ்விட வரைபடம் தயாரிக்கும் கட்டம் நிறைவடைந்து வடபகுதியில் தற்போது மக்கள் வாழ்விட கூறுகளை அடையாளப்படுத்தும் செயன்முறைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

கிராம அலுவலர்களால் மக்கள் வாழ்விட கூறுகள் ஸ்ரிக்கர் ஒட்டி அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பணி இந்த மாதத்தினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று மாவட்ட செயலக புள்ளி விவர திணைக்களத்தால் கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குடிசன மதிப்பீட்டுக்கான ஆரம்ப கட்ட பணிகள் வடக்கு, கிழக்கில் கடந்த 2001 ஆம் ஆண்டு இடம்பெற்றன.

எனினும் அந்த மதிப்பீட்டுக்கான இறுதிக் கட்ட பணிகள் பின்னர் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ம-14)



யாழ். குடாநாட்டில் உள்ள வீடுகளில் அடையாளப்படுத்தும் 'ஸ்ரிக்கர்கள்' ஒட்டப்படுகின்றன.

# கூட்டுறவு கிராமிய வங்கிகள் வட்டி வீதங்களை அதிகரித்துள்ளன

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் தனது வட்டி வீதத்தை அதிகரித்துள்ளதுடன் புதிய கடன் வழங்கும் திட்டத்தையும் அமுல்படுத்தியுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் ஆலோசனைகளுக்கு அமையவே ஏனைய வணிக வர்த்தக வங்கிகளின் வட்டி வீதங்களுக்கு அமைவாக மேற்படி திட்டத்தை அமுல்படுத்தியுள்ளது.

சேமிப்பு வைப்பு 6 வீதமாகவும் நிலையான வைப்புக்கு 9 வீதமாகவும் நிலையான வைப்புக்கு எதிரான கடன் (மாதாந்த தவணைக் கட்டண முறை) 12 வீதமாகவும் பொதுக்கடன் 12 வீதமாகவும் விசேட மேலதிகப் பற்று வசதிக்கடன் குறுகிய காலம் (2 மாதம்) 13 வீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புதிய கடன் வழங்கும் திட்டமாக லொறி ஈட்டுக்கடன் 20 லட்சம் உட்பட 12 வீதப்படியும் காணி, கட்டட ஈட்டுக் கடன் (மூன்று வருடத்துக்கு உட்பட) 12 வீதப்படியும் குறுகிய காலகடனாக ஒரு மாத, 3 மாத, 6 மாத கடனாக முறையே 12 வீதமாகவும், வாகனக் கொள்வனவுக் கடன், புதிய தொழில் முயற்சிக் கடன், தொழில் விஸ்தரிப்புக் கடன் ஆகியவற்றுக்கு முறையே 12 வீதமாகவும், கூட்டுறவு ஊழியர் நலன் புரிச் சங்க அங்கத்தவர் கடன் 11 வீதமாகவும் வழங்கப்படும்.

மேற்படி கடன்களைப் பெறுபவர்கள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் ஊடாக வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்த பின்னரே ஏற்றுக்கொள்ளப்படும் என்று யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (எ-311)

## சேவை நோக்கு...



உதவி: பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு வடமாராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம் 30 மின் விசிறிகளை அன்பளிப்பாக வழங்கியது. சபைத்தலைவர் இ.அன்னலிங்கம் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் கே.நந்தகுமாரிடம் மின் விசிறிகளை வழங்குகிறார். (ம-236)

# பின்புறம் வந்த ஹன்ரர் மோதி மோ.சைக்கிளில் சென்றவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.18

இரும்புப் பாலத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளை பின்புறமாக இருந்து வந்த கன்ரர் ரக வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நாவற்குழிப் பாலத்தில் நேற்று முன்தினம் மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்றது. விபத்தில் ப.நவரட்ணம் (வயது -51) என்பவரே காயங்களுக்கு ஆளானவராவார்.

தென்மராட்சிப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர். மோட்டார் சைக்கிள் கடும் சேதத்துக்குள்ளாகியது.

இந்தப் பாலத்தில் வேகக் கட்டுப்பாட்டுத் தடை அமைக்கப்படாததால் இவ்வாறான விபத்துக்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக மக்கள் விசனம் கூறுகின்றனர்.

(ம-4)

# ஈ.பி.டி.பி. மீது ஊடகங்கள் உதவியுடன் தமிழ்க் கட்சிகள் சேறு பூசுகின்றனவாம்

## தன்னைக் கண்டு பயப்படுவதால் தானாம் இப்படி என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஏப்.18

ஈ.பி.டி.பி. மீது ஏனைய கட்சிகளுக்கு அரசியல் ரீதியாகப் பயம். அதனால் பல்வேறு வழிமுறைகளில் எமது கட்சி மீது ஏனைய தமிழ்க் கட்சிகள் சேறு பூச முயல்கின்றன. ஒரு சில தமிழ் ஊடகங்களின் உதவியுடன் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் என்று அவரது ஊடகச் செயலாளர் பாரூக் விடுத்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்தில் அபிவிருத்தி ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் மற்றும் முக்கிய நபர்களுடன் நடந்த கலந்துரையாடலில் அமைச்சர் இதனைக் கூறினார் என்று அந்தச் செய்திக் குறிப்புக் கூறுகின்றது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

> **தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தொடர்ந்து தக்க வைத்து அதன் மூலம் குறுகிய அரசியல் பிழைப்பு நடத்துவதையே சிலர் தமது கொள்கையாகக் கொண்டிருக்கிறார்கள்...**

அரசு மீது நம்பிக்கை இல்லை என்று கூறும் சிலர் அரசுடன் பேச்சு நடத்தப் போகிறோம் என்றும் கூறுகிறார்கள். பேச்சை இழுத்தடிப்பதாகவும் தோல்வி கண்டால் மாற்று வழியைத் தேடப் போவதாகவும் ஏதேதோ உளறுகிறார்கள்.இதுவரை அவர்கள் கண்ட மாற்று வழிதான் என்ன?

இவ்வாறான பலர் கொண்டிருந்த கொள்கைகள் யாவும் தோற்றுப்போய் விட்டன. நடைமுறைச் சாத்தியம் இல்லாததாலேயே அவை தோற்றுப்போயின.

கிடைக்கக் கூடிய நல்ல சந்தர்ப்பங்கள் அனைத்தையும் தட்டிக் கழித்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தொடர்ந்து தக்க வைத்து அதன் மூலம் குறுகிய அரசியல் பிழைப்பு நடத்துவதையே இவ்வாறானவர்கள் தமது கொள்கையாகக் கொண்டிருக்கிறார்கள்-என்றார்.



இக் கூட்டத்தில்"தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினரை நேரடியாகப் பெயர் சொல்லியே அமைச்சர் தாக்கிப் பேசினார். அவர்கள் தான் மக்களை நாளொரு பொய் சொல்லி ஏமாற்றுகிறார்கள் என்று கூறினார்'' என்று கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.எனினும் ஊடகச் செயலாளர் பாரூக்கின் அறிக்கையில் கூட்டமைப் பின் பெயர் திட்டமிட்டு தவிர்க்கப்பட்டிருந்தது. (உ)

# அதிகளவான மாத்திரைகளை உட்கொண்ட யுவதி மரணம்

தென்மராட்சி, ஏப்.18

வயிற்றுக்குத்து காரணமாக கூடுதலான மாத்திரையை உட்கொண்ட இளம் யுவதி ஒருவர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்து வந்தவேளை வைத்தியசாலை வாசலிலே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மிருசுவில் கெற்பெலி யைச் சேர்ந்த சின்னத்துரை விஜய மாலினி (வயது 24) என்ற இளம் யுவதியே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக சாவகச் சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(எ-207)

# முற்றவெளியில் பொலித்தீன் கழிவுகள்; அகற்ற நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை



கைதடி, ஏப்.18

யாழ். முற்றவெளிப் பிரதேசம் பொலித்தீன் மற்றும் ஏனைய கழிவுகள் நிறைந்து காணப்படுகிறது.

அண்மைக் காலமாகத் தொடர்ந்து இந்தக் கழிவுகள் அகற்றப்படாது உள்ளதால் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ். பிரதான தபாலகத்திற்கு தென்மேற்காக காணப்படும் இப் பகுதியில் பலராலும் பொலித்தீன் உட்பட பல கழிவுகள் கொண்டு வந்து கொட்டப்படுகின்றன.

இதனால் இவை காற்று வீசும் போது பல இடங்களுக்கும் அள்ளிச் செல்லப்படுகின்றன.

சிலவேளைகளில் காற்றுக்குப் பொலித்தீன் பைகள் பறந்துவந்து வீதியால் பயணிப்போர் மீது விழுகின்றன.

இவ்வாறு பொலித்தீன் கழிவுகள் பறந்து வந்து பல இடங்களில் பரந்து காணப்படுகின்றன.

உரியவர்கள் இதனை அவதானிக்கின்ற போதிலும் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

உரியவர்கள் உடனடிக் கவனமெடுத்து நோய்கள் பரவமுன்னர் இக் கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (ம-288)

# சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள் மூன்று நாள்கள் இடம்பெற்றன

நெல்லியடி, ஏப். 18

யாழ். செயலகம், பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் வல்வெட்டி வேவில் பிள்ளையார் ஆலய முன்றிலில் 2011 சித்திரைப் புத்தாண்டு விழா மூன்று தினங்கள் கோலாகலமாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவும் சிறப்பு விருந்தினராக யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாரும் கலந்துகொண்டனர்.

கௌரவ விருந்தனர்களாக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ். வரதீஸ்வரன் மற்றும் இராணுவ, கடற்படை உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

முதல் இரண்டு நாள்களும் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. கயிறு, கிளித்தட்டு, முட்டி உடைத்தல், படகோட்டம் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

பாரம்பரிய நடனம், கோலாட்டம், சிலம்பாட்டம், தலையணைச் சண்டை, தேங்காய் துருவுதல், சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம், கிறிஸ் மரம் ஏறுதல் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களும் இடம்பெற்றன.

இதில் கலந்துகொண்டோருக்கு நெஸ்டமோல்ட் நிறுவனத்தால் இலவசமாக தேநீர் வழங்கப்பட்டது. தமிழ், சிங்கள, முஸ்லிம் என மூவின மக்களும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சனிக்கிழமை இடம்பெற்ற மூன்றாம் நாள் நிகழ்வில் பரிசளிப்பு விழாவும் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெற்றன. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இவை இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் 52 ஆவது பிரிகேட்டின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சுதசிங்க, வடமராட்சி தளபதி கேணல் டிகிரி திஸநாயக்க உட்பட முக்கிய இராணுவ அதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-319)

சித்திரா பௌர்ணமி பிதிர்க்கடன் தீர்க்க

# ஆயிரக்கணக்கானோர் கீரிமலை சென்றனர்

யாழ்ப்பாணம், ஏப்.18

சித்திரை பௌர்ணமி தினமான நேற்று கீரிமலைக்குச் சென்ற ஆயிரக்கணக்கான மக்கள் உணர்வு பூர்மாக பிதிர்க்கடன் கிரியைகளை முறைப்படி நிறைவேற்றினர்.

பிதிர்க்கடன் நிறைவேற்றும் மண்டபத்தில் நேற்று மதியம் வரை ஐந்துக்கும் மேற்பட்ட அந்தணர்கள் இந்தக் கிரியைகளை நடத்தினர்.

உயிர் பிரிந்த தமது தாயின் ஆத்மா சாந்தியடைவதற்காக சித்திரை பௌர்ணமி தினத்தன்று பிள்ளைகளால் பிதிர்க்கடன் நிறைவேற்றுவது மரபாகும்.

கிரியைகள் மேற்கொண்டு அந்தணர்களுக்கு தட்சணை கொடுத்து கீரிமலை தீர்த்தக் கேணியில் நீராடிப் பிதிர்க்கடன் கிரியைகளை மக்கள் நிறைவேற்றினர்.

இதேவேளை, தென்னிலங்கையிலிருந்து சுற்றுலாப் பயணிகளாக வருகை தந்திருந்த சிங்கள, முஸ்லிம் மக்கள் நேற்றையதினம் கீரிமலைக்கு வந்திருந்ததனைக் காணமுடிந்தது. (ம-14)

# அலுமினிய கட்டுமானக் கற்கை

வடமராட்சி, ஏப்.18

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் கரவெட் டிப் பிரதேச செயலர் பிரிவில் அலுமினிய கட்டுமான கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கற்கை நெறியில் பயில விரும்புவோர் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவு அலுவலகத்துடன் தொடர்புகொண்டு தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த-236)

# தமிழ்ப் பாடத்தில் 66 வீதமான சித்தி சாதாரணதர முடிவுகளில் கிடைத்தது

அண்மையில் வெளியாகியுள்ள சாதாரண தரப் பரீட்சையில் தமிழ்ப் பாடத்தில் 66 வீதமானோர் சித்தியடைந்துள்ளனர்.

தமிழ் எங்கள் தாய் மொழி. இதில் எதிர்காலத்தில் நூறு வீத சித்தியடைய வேண்டும். இனிவரும் காலங்களில் ஆசிரியர்கள் மேலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு அந்த இலக்கினை அடையவேண்டும் என்று வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த வருடம் நடைபெற்ற சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டன. இதன் சித்தி வீதமதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மதிப்பீட்டுப்பணிகளின் பிரகாரம் 52 வீதமானோர் உயர்தரத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர். 68 வீதமான பரீட்சார்த்திகள் கணித பாடத்தில் சித்தியடைந்துள்ளனர்.

மேலும் பாட ரீதியான மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றின் மதிப்பீட்டு வீதங்களும் விரைவில் அறிவிக்கப்படும்.

தமிழ்ப் பாடத்தில் 66 வீதமான பரீட்சார்த்திகள் சித்தியடைந்துள்ளனர் என்று பெருமை கொள்ளக்கூடாது. தமிழ் எங்கள் தாய்மொழி. அதில் அனைத்துப் பரீட்சார்த்திகளும் நூறு வீத சித்தி பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ம-9)



உடுவில் பிரதேச செயலகத்தின் மகளிர் தின நிகழ்வுகள் சுன்னாகம் பொது நூலகத்தில் புதன்கிழமை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதிசன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் இ.இராஜேந்திரன், சர்வோதய மாவட்ட இணைப்பாளர் எஸ்.சந்திரகுமார், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (86)

# அடிப்படை வசதிகள் ஏற்படுத்துமாறு வித்தகபுரம் மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.18

வலி.வடக்கு வித்தகபுரத்தில் குடியமர்ந்த மக்கள் தமக்கு அடிப்படை வசதிகள் எவையும் இரண்டுமாதங்களாகியும் ஏற்படுத்தித் தரவில்லை என்று கவலை கூறுகின்றனர்.

கடந்த முப்பது வருடங்களாக இடம்பெயர்ந்து தாம் பல்வேறு நெருக்கடிகளுக்கும் உள்ளாகி துன்ப துயரங்களை அனுபவித்து மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் தமக்கு வெறும் 5 ஆயிரம் ரூபா பணமும் கூரைக்குப் போடும் தகரங்களும் மற்றும் மூன்று சிமெந்து பைகளும் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

வேறு எந்த விதமான உதவிகளும் வழங்கப்படவில்லை என்று கூறுகின்றனர்.

அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் தாம் எதிர்கொண்டு வரும் இன்னல்களைப் போக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர். (ம-86)

# சாதாரணதரத்துக்குத் தோற்றவுள்ள மாணவருக்கு ஆங்கில வகுப்புகள்

தென்மராட்சி, ஏப்.18

பளைப் பிரதேசப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 55 மாணவர்களுக்கு இலவச மாலை நேர ஆங்கில வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

பளை மத்திய கல்லூரி, இயக்கச்சி அ.த.க. பாடசாலை, மாசார் அ.த.க., புலோப்பளை உரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கே இந்த வகுப்பு நடத்தப்படவுள்ளது.

பளை, புலோப்பளையில் தெரிவு செய்யப்பட்ட 35 மாணவர்களுக்கு பளை மத்திய கல்லூரியிலும், மாசார், இயக்கச்சி மாணவர்களுக்கு அ.த.க. பாடசாலையிலும் இந்த வகுப்புகள் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

இந்த வகுப்புகளுக்கான நிதியை பச்சிலைப்பள்ளிப் பேரவையினர் வழங்குகவுள்ளதாகப் பேரவைச் செயலாளர் க.சண்முகதாஸ் அறிவித்துள்ளார்.

இதற்காக மாணவர்களின் விவரங்களைத் வழங்குமாறு அதிபர்களைக் கோரியுள்ளனர்.

இதேவேளை, பச்சிலைப் பள்ளிப் பிரதேச சாதாரணதர மாணவி ஒருவருக்கு டிசெம்பர் மாதம் கல்வி ஊக்குவிப்புப் பணம் வழங்கவுள்ளதாகவும் கூறப்பட்டது. (ம-207)

உதயன்
18 ஏப்ரல் 2011 திங்கட்கிழமை

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்வின் பின்னரான அபிவிருத்தி என்பது வெறும் கானல் நீராகவே உள்ளது

இராஜ் தனபால்

**முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த மக்களுக்கான வேலைத்திட்டங்கள் அரசினால் முன்னுரிமைப் படுத்தப்பட்டு ஆரம்ப வைபவங்கள் நடைபெற்ற போதிலும் எந்தவொரு வேலையும் நிறைவேற்றப்படாது காலங்கடந்து செல்வதையே காண முடிகின்றது.**

முல்லை மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான வேலைத்திட்டங்கள் அரசினால் முன்னுரிமைப்படுத்தப்பட்டு ஆரம்ப வைபவங்கள் நடைபெற்ற போதிலும் எந்தவொரு வேலையும் நிறைவேற்றப்படாது காலங்கடந்து செல்வதையே காணமுடிகின்றது.

**வீதிகள்**

இந்த மாவட்டத்தில் காணப்படுகின்ற பிரதான வீதிகள் உட்பட உள்ளூர் விவசாய வீதிகள் போரின் விளைவால் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பாதிப்படைந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

மாங்குளம், முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் நெடுங்கேணியூடாக புளியங்குளம் ஆகிய பிரதான வீதிகள் இன்று வரையிலும் குண்டும் குழிகளுமாக பிரயாணத்துக்கு ஏற்ற வகையில் இல்லாது முன்பு இருந்த நிலையிலேயே காணப்படுகின்றன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ குழுவினர் ஒட்டுசுட்டான் வருகை தந்து ஒட்டுசுட்டானிலிருந்து நெடுங்கேணி ஊடான வீதி காபெற் வீதியாக அமைக்கப்படவுள்ளதெனக் கூறி வேலையையும் ஆரம்பித்து வைத்தனர்.

ஆனால் அந்த வேலைகள் மந்த கதியிலே உள்ளன. மாங்குளம் முல்லை வீதி, ஒட்டுசுட்டான்- புதுக்குடியிருப்பு வீதி என்பவற்றைத் திருத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். ஒட்டுசுட்டான் திருக்குளம் புனரமைத்து வழங்கப்படும். அத்துடன் ஆங்காங்கு உள்ள சிறு வீதிகள் கூட உடனடியாகவே புனரமைத்துத் தரப்படும் எனவும் அமைச்சர்களால் வாக்குறுதியளிக்கப்பட்டது. ஆனால் நடப்பதுதான் எதுவுமில்லை. 'நாய்க்கு நடுத்தண்ணிக்குப் போனாலும் நக்குத்தண்ணிதான்' எனச் சொல்வது போல இம்மாவட்டத்திலும் இதே நிலைதான். ஓரிரு வீதிகளின் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்த ஒப்பந்தகாரர்களினால் உரிய முறையில் வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. உதாரணத்துக்கு அண்மையில் புனரமைக்கப்பட்ட ஒட்டுசுட்டான் - முத்துஐயன்கட்டு வீதி ஒரு மாத கால எல்லைக்குள் பழைய நிலைக்கு வந்துள்ளது. புதுக்குடியிருப்பு பிரதான வீதியிலிருந்து முத்துஐயன்கட்டு செல்லும் வீதி பல மாதங்களாக கருங்கற்களை அடுக்கப்பட்டு மக்களின் போக்குவரத்தினைத் தடை செய்த நிலையில் காணப்படுகின்றது. புதுக்குடியிருப்பு- ஒட்டுசுட்டான் வீதியின் நீர் பாயும் மதகுகள் உடைந்து ஆபத்தான நிலையில் உள்ளபோதும் அதைத் திரும்பிப் பார்ப்பார் எவருமில்லை. இதேபோன்று பலதரப்பட்ட வீதிகள், பிரதேச சபை ஒழுங்கைகள் எல்லாம் சீரழிந்த நிலையிலேதான் காணப்படுகின்றன.

மேலும் ஒட்டுசுட்டான் கற்சிலைமடு ஊடாகவும் மூன்றாம் கண்டம் ஊடாகவும் செல்லும் வீதி காடுகளாகவும் உடைந்த நிலையிலுமாக பலகாலமாகப் பராமரிப்பின்றிக் காணப்படுகின்றது. இதனால் பேருந்து சேவையும் இல்லாது போய்விட்டது. இங்கு வருகின்ற அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோர் வார்த்தைகளால் இம்மாவட்ட மக்களை மகிழ்ச்சிப் படுத்திவிட்டுச் சென்று விடுவார்கள். ஆனால் எதுவுமில்லை. தென்பகுதியிலே அடுக்கடுக்காக அபிவிருத்தி வேலைகள் நிறைவு பெற்று வருகின்றன. ஆனால் இம் மாவட்டத்தில் ஓர் அபிவிருத்தியும் நடைபெறவில்லையென்றே கூறலாம்.

**மின்சாரம்**

தென்பகுதிக்கு மின்சாரத்தினை ஏற்படுத்த பலகாலங்கள் எடுத்தன. ஆனால் வடக்குக்கு மின்சாரத்தினைக் கொண்டுவர அதிக நாள் எடுக்கவில்லை. விரைவாகக் கொண்டுவந்துள்ளோம். அதேபோன்று உள்வாங்கிய இடங்களுக்கும் மிகவிரைவில் மின்சாரம் வழங்கி மக்களுக்கு உதவுவோம் என ஒட்டுசுட்டானில் நடைபெற்ற வீதி புனரமைப்பு ஆரம்ப வைபவத்தில் கௌரவ பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ உரையாற்றும்போது தெரிவித்தார்.

இதேபோன்று மாற்றலாகிச் சென்ற முல்லை மாவட்ட அரச அதிபராலும் ஒரு மாத கால எல்லைக்குள் மின்சார விநியோகம் நடைமுறைப் படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை எவ்வித ஆரம்ப வேலையும் இடம்பெறவில்லை.

**நீர்ப்பாசனம்**

முல்லை மாவட்டத்திலே ஏராளமான நீர்ப்பாசனக் குளங்கள் உள்ளன. அவை மிக நீண்ட காலமாக எவ்வித புனரமைப்புக்களும் இன்றி கைவிடப்பட்ட நிலையிலும் முறிகுளங்களாகவும் உள்ளன. அத்துடன் நடைமுறையில் உள்ள குளங்களும் தூர்ந்த நிலையில் உள்ளதால் நீரின் கொள்ளளவு குறைந்து குளத்தின் கீழ் உள்ள காணிகளுக்கு நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். குளங்களின் வாய்க்கால்கள் உடைந்தும் தூர்ந்தும் பாவனை இல்லாமலும் உள்ளன. இதனால் பாதிக்கப்படுவது விவசாயிகளே இரண்டு ஆயிரம் குளங்கள் புனரமைப்பின் கீழ் ஒட்டுசுட்டான் கொடிதாங்கியகுளம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதனைவிட மிக முக்கியமான பெரிய நீர்ப்பாசனக் குளமான முத்துஐயன் கட்டு குளத்தின் வாய்க்கால்கள் புனரமைப்பின்றி சுமார் 2000 ஏக்கருக்கு மேல் செய்கையினை மேற்கொள்ள முடியாத நிலைதோன்றியுள்ளது.

இதனால் அநேகமானோர் காணிகளை விட்டு வெளியேறியும் உள்ளனர். விளை நிலங்கள் தரிசாக மாறியுள்ளன. அதே போன்று சிறு குளங்களின் கீழ் உள்ள வாய்க்கால்களும் நீர் பாய்ச்சமுடியாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளன.

(தொடரும்)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## பூதர் பூபாலசிங்கம்

**(சரசாலை தெற்கு, சாவகச்சேரி, திருமணத்தரகர்)**

**திதி:** பிரதமை

பிறப்பு
05.11.1946

இறப்பு
29.04.2010





ஆண்டொன்று ஆனதப்பா
உங்கள் அன்பான திருமுகம் பார்த்து
கனிவான உங்கள் வாய்மொழி கேட்காதா?
என நினைக்கும் போது உள்ளம் ரணமாகிறதே அப்பா!
எம் இல்லத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த
எங்கள் அன்புத் தந்தையே!
உங்கள் நினைவுகள் என்றும் எங்கள்
நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. (49,20,23)

# சிறுவர்கள் மற்றும் கர்ப்பவதிகளின் போசாக்கினை மேம்படுத்த வவுனியாவில் பல திட்டங்கள்

வவுனியா, ஏப்.18

வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களின் போசாக்கு மற்றும் கர்ப்பவதிகளின் போசாக்கை மேம்படுத்த பல்வேறு செயற்றிட்டங்கள் கிராமத்து சிகிச்சை நிலையங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று அண்மையில் செட்டிகுளம் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் க.சுதாகர் தலைமையில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

இதன்போது ஒவ்வொரு சிறுவர் சிகிச்சை நிலையத்திலும் ஒவ்வொரு மாதமும் கட்டாயம் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களது நிறை பார்க்கப்பட்டு போசாக்கு நிலை மதிப்பீடு செய்யப்பட்டு போசாக்கு நிலை குறைந்த சிறுவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் சுகாதாரத் தொண்டர்கள் இவ்விடயத்தில் கூடிய கவனம் எடுத்து பிள்ளைகளின் உயரம், நிறை என்பனவற்றை அறிய ஏற்பாடுகள் செய்வதன் ஊடாக அனைத்து சிறுவர்களினதும் போசாக்கு நிலையைக் கணிப்பிட இலகுவாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் கர்ப்பவதிகள் சிகிச்சை நிலையங்களிலும், குழந்தைகள் நலன்புரி சிகிச்சை நிலையங்களிலும் போசாக்கான உணவின் முக்கியத்துவம் தொடர்பாகவும் போசணைக் குறைபாட்டால் ஏற்படும் தாக்கங்கள், தொற்று நோய்கள் பரவும் விதம், தற்காப்பு நடவடிக்கைகள் எடுத்தல் என்பன தொடர்பிலும் விசேட கவனம் எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் போசாக்குக் குறைந்தவர்களுக்கு போசாக்கு நிறைந்த திரிபோஷா மற்றும் விற்றமின் குளிசைகள் வழங்குதல் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (க-501)

## வற்றாப்பளை ஆலயத்தில் இராச கோபுர குடமுழுக்கு

முல்லைத்தீவு, ஏப்.18

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் புதிதாக கட்டப்பட்ட இராச கோபுர குடமுழுக்கு வைபவம் நாளை மறுதினம் காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடைப்பட்ட சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

அடியார்களுடைய நலன் கருதி விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (க-எ)

**யுத்தத்தின் கோரம்...**



குலையாத மனவுறுதி: முல்லைத்தீவு மக்கள் மீள்குடியமர்ந்து சுமார் ஒரு வருடம் ஆகிய நிலையில் யுத்தத்தின் போது சேதமடைந்த தமது வீட்டைப் புனரமைக்கும் நடவடிக்கைக்கு முன்னேற்பாடாக இடிபாடுகளை அகற்றும் நடவடிக்கையில் பெண்ணொருவர் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். (500)

## காடுகளில் மரம் வெட்டத் தடை; வீட்டுத்திட்ட பயனாளிகள் பாதிப்பு

முல்லைத்தீவு, ஏப்.18

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்ந்துள்ள மக்கள் தமக்கான வீடுகளை அமைப்பதற்குரிய கூரைத் தடிகள், பலகைகள் என்பவற்றைக் காடுகளிலிருந்து கொண்டுவருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மக்களுக்கான நிரந்தர வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வீட்டுத் திட்டங்கள் குறித்த கால எல்லைக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனக் காலக்கெடுவும் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் வீடுகளை அமைப்பதற்குத் தேவையான மரங்களைக் காட்டிலிருந்து பெறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த காலக்கெடுவுக்குள் வீடுகளைப் பூர்த்தி செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

ஆகவே வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டவர்களை இனம் கண்டு அவர்களுக்குத் தேவையான மரங்களை எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமெனப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். வீடுகட்டுவதற்குத் தேவையான மணல், கல், மரங்கள் என்பனவற்றுக்குத் தடை விதித்துவிட்டு உரிய நேரத்தில் வீடுகளைக் கட்டி முடிக்குமாறு எம்மை நெருக்குவது எந்த வகைகளில் நியாயமென இவர்கள் கேட்கின்றனர்.

ஆகவே உண்மையில் தேவையுள்ளோரை இனம்கண்டு அவர்களின் விண்ணப்பங்களைச் சிபாரசு செய்து அவர்கள் தமக்குத் தேவையான பொருள்களைக் கொண்டுவருவதற்கு அனுமதிக்கவேண்டுமென இந்த மக்கள் அரச அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

# கடந்த மூன்று மாதங்களில் மட்டும் வவுனியாவில் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் 19 பதிவாகின

வவுனியா, ஏப்.18

வவுனியா மாவட்டத்தில் இந்த வருடத்தில் முதல் மூன்று மாதங்களில் மட்டும் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோக செயற்பாடுகள் 19 நடைபெற்றுள்ளதாக வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இவ்வருடம் ஜனவரி மாதத்தில் 4 முறைப்பாடுகளும் பெப்ரவரி மாதத்தில் 6 முறைப்பாடுகளும் மார்ச் மாதத்தில் 9 முறைப்பாடுகளும் தமக்குக் கிடைக்கப்பெற்று அவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த வருடத்தில் 96 முறைபாடுகள் வவுனியா மாவட்டத்தில் பதியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான முறைப்பாடுகளைத் தெரிவிக்க 1929 என்ற கட்டணமற்ற தொலைபேசி சேவை தேசிய சிறுவர் அதிகார சபையால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் எனவே இவற்றைப் பயன்படுத்தி பொதுமக்கள் உடனடியாக முறைபாடுகளை வழங்கலாம் என்றும் அவை தொடர்பாகத் தாமதமின்றி விசாரணை செய்யப்படும் எனவும் மாவட்ட இணைப்பாளர் க.செல்வக்குமார் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த வருடம் எதிர்வரும் காலங்களில் சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களை தவிர்ப்பதற்கு ஏற்ற பல விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதற்கு அனைத்துத் தரப்பினரதும் பூரண ஒத்துழைப்பு இன்றியமையாததெனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-501)

## புதுவருடத்தை முன்னிட்டு ஒட்டுசுட்டானில் படையினரின் ஏற்பாட்டில் நிகழ்வுகள்

முல்லைத்தீவு, ஏப்.18

புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விளையாட்டு விழா ஒன்று இராணுவத்தினரால் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

இந்த விளையாட்டு விழாவுக்கெனப் பல வடிவங்களில் கொட்டகைகள் அமைக்கப்பட்டு அவை வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன. இவை பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தன.

அத்துடன் இங்கு இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூவினங்களையும் சேர்ந்த போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் விசேடமாக நடைபெற்ற 10 மைல் நீளமான மரதன் ஓட்டப்போட்டியில் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொண்டனர்.

மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகளுக்குப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன.

விளையாட்டுப் போட்டிகளையடுத்து இரவு கலை நிகழ்வுகள் பிரமாண்டமான முறையில் நடைபெற்றன. இதில் சிங்கள, தமிழ்க் கலைஞர்கள் இணைந்து கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் கண்டுகளிக்க பொது மக்களும் கலந்து கொண்டனர்.

இந்த முழுநாள் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களுக்கு காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளைகளுக்கும் உணவுகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-500)

## பிரதேச செயலாளர் மீது தாக்குதல் போட்டியிலிருந்து வீரர்கள் வெளிநடப்பு

மன்னார், ஏப்.18

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்படவிருந்த இளைஞர் விளையாட்டுப் போட்டியின் ஆரம்பத்தில் வீரர்கள் பலர் விளையாட்டு மைதானத்தினை விட்டு வெளிநடப்புச் செய்தமையால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட இளைஞர் விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் [illegible]து விளையாட்டு மைதானத்தில் இடம்பெற ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் சுமார் 15 விளையாட்டுக்கழகங்கள் கலந்து கொண்டிருந்தன.

போட்டிகள் ஆரம்பமாக இருந்தபோது சில விளையாட்டுக் கழகங்களினைச் சேர்ந்த வீரர்கள் விளையாட்டு மைதானத்தை விட்டு வெளிநடப்புச் செய்தனர். கடந்த புதன் கிழமை விளையாட்டுப்போட்டியின் போது ஏற்பட்ட வன்முறையைத் தடுக்கச் சென்ற மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்தே தாம் போட்டியில் இருந்து வெளியேறியதாக அந்த வீரர்கள் பின்னர் தெரிவித்தனர். (க-601)

**பாரம்பரிய விளையாட்டுகளில்...**



இலங்கை உல்லாச பயணிகள் அபிவிருத்தி பிரிவினரால் திருகோணமலை சாயா புளூ விடுதியில் கலாசார நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்வில் அங்கு தங்கியிருந்த வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் ஆர்வத்துடன் பங்குபற்றினர். (ச)

# முன்னாள் பிரதேச சபை தலைவர் மீது தாக்குதல்

மட்டக்களப்பு ஏப்.18

பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் முக்கிய ஆலோசகர்களில் ஒருவரான மட்டக்களப்பு,களுவாஞ்சிக்குடிப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் மீது இனந்தெரியாத ஆயுதக் குழுவினால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் கண்ணன் என அழைக்கப்படும் மாங்காடு, பிரதான வீதியில் வசிக்கும் சீனித்தம்பி பாக்கியராசா (வயது 38) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

சம்பவ நேரம் வீட்டுக்கு வந்த 14 இற்கும் மேற்பட்டவர்கள் வீட்டுக்குள் நுழைந்து அவரது பெயரைக்கூறி அழைத்தபோது அதனை தடுக்க முற்பட்ட அவரது உதவியாளரையும் தாக்கியுள்ளனர்.

அந்தப் பகுதியில் இருந்த மக்கள் ஒன்று திரளவே தாக்குதல் நடத்தவந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தினைத் தொடர்ந்து தாக்குதல் தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் முறையிட்ட போதிலும் நடவடிக்கையெடுக்கப்படவில்லையென தாக்குதலுக்குள்ளான முன்னாள் தவிசாளர் தெரிவித்துள்ளார். (ச-21)

# வடக்கு,கிழக்கைப் பிரித்துப் பார்ப்பதை புலம்பெயர் மக்கள் கைவிட வேண்டும்

மட்டக்களப்பு,ஏப்.18

30 வருடகால யுத்தத்தில் பல இடர்களைச் சந்தித்து வாழ்ந்து வரும் எமது வடக்கு கிழக்கு மக்களை மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் என பிரித்துப்பார்க்கும் புலம்பெயர் மக்கள் உள்ளனர்.

இவ்வாறான எண்ணக்கருவை புலம்பெயர் மக்கள் கைவிட வேண்டும்.இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

தமிழ்,சிங்கள புத்தாண்டையொட்டி புலம்பெயர் மக்களின் அனுசரணையில் மட்டு. முனைத்தீவு மேன்பவர் விளையாட்டுக் கழகத்தினால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ், சிங்கள புத்தாண்டானது தமிழர், சிங்களவர் என்ற பேதமின்றி இரு இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை வலுப்படுத்துகின்றது.

நாம் விளையாட்டுப் போட்டிகளை மட்டுமல்லாமல் மேலும் பல சமூக விடயங்களையும் உற்றுநோக்க வேண்டும். இவ்வருடம் ஏற்பட்ட இரட்டை வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலம்பெயர் மக்கள் அதிக உதவியளித்துள்ளனர். அவர்கள் கடந்த காலத்தில் சொல்லொண்ணாத் துயரங்களை இலங்கையில் அனுவித்தவர்கள். இதனால் அவர்கள் புலம்பெயர்ந்து சென்று அமெரிக்கா, கனடா, லண்டன் போன்ற நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இன்றும் எமது மண், மக்களைப் பற்றியேதான் சிந்தித்துக் கொண்டிருக்கினறனர்.

தேர்தல் நடைபெற்று தற்போது ஒரு வருடமாகியுள்ளது. அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பை மக்கள் வெற்றிபெறச் செய்து உரிமையை நிலைநாட்டியுள்ளனர்.

அரசுடன் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுகளில் ஈடுபட்டுவரும் நிலையில் எமக்கான உரிய தீர்வு கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்- என்றார். (ச)

# விரிவுரைகள் இன்று ஆரம்பம்

பதுளை, ஏப்.18

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களிலும் விரிவுரைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படுமென அந்தப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் மஹிந்த எஸ். ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னர் மாணவர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டது.

இந்தப் பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் அனைத்தும் வழமை போன்று இடம்பெற்றதாக உபவேந்தர் தெரிவித்துள்ளார். (ச)


மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

ஸ்ரீநகுலமீரா சிதம்பரநாதன்

திதி: அபரபக்க பிரதமை

தோற்றம்
16.05.1947





மறைவு
21.04.2008

கண்ணீரில் கரைந்ததம்மா ஆண்டுகள் மூன்று
கண்முன்னே நீங்களில்லை உறவாட- எம்மோடு
உன்னை எண்ணாத நாளில்லை இதயத்தில்- எப்போதும்
உன் நினைவுகளே எம்மையிங்கு ஆளுதம்மா!
இறுதிவரை எம்மோடு சேர்த்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்கவிட்டு எங்கே தாயே சென்றாய்?
எம்முயிர் உள்ளவரை உம் நாமம் மறவோம்
எம் தாயின் ஆத்மா சாந்தியடை இறைவனடி வேண்டுகின்றோம்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(49,20,25)

# பல்கலை நிர்வாகத்துடன் பேசித் தீர்வு கிடைத்த பின்னரே வகுப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்

## கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

கிழக்குப் பல்கலைக்ககழக நிர்வாகத்துடன் பேசி தீர்வு கிடைத்த பின்னரே வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ரி.கிருஷ்ணகாந்த தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள பாதுகாப்பு பொலிஸார் அகற்றப்பட்டமை தொடர்பில் எந்த விதமான தெளிவுபடுத்தலும் தரப்படாமல் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமையை ஆட்சேபித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

மாணவர் ஒன்றியம் நாளை செவ்வாய்க்கிழமை பல்கலைக்கழக நிர்வாகத்துடன் இது தொடர்பாகப் பேச்சு நடத்தவுள்ளது. கடந்த மாதம் 29 ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டதையடுத்து மறுநாள் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பிலுள்ள பொலிஸார் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என மாணவர்கள் தெரிவித் துப் போராட்டம் ஒன்றில் ஈடு பட்டனர்- என்றார்.

ஆனால் அன்றைய தினம் கிழக்கு மாகாண இராணுவத் தளபதி தலைமையில் நடத்தப்பட்ட ஆலோசனையையடுத்து துணைவேந்தர் தலைமையிலான பல்கலைக்கழக நிர்வாகம் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளைக் கால வரையறையின்றி இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# நாகசேனை தோட்டத்தில் மோதல் சம்பவத்தில் ஐந்து பேர் காயம்

நுவரெலியா,ஏப்.18

லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாகசேனை தோட்டத்தில் இரு குழுவினர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் வெட்டுக் காயங்களுக்குள்ளான ஐந்து பேர் நுவரெலியா வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர்.

வெட்டுக்காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் பெண்ணொரு வரும் உள்ளடங்குகின்றார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாகவே இந்தக் கைகலப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் லிந்துலை பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் மத்திய மாகாணசபை உறுப்பினர் முரளிரகுநாதன் தெரிவித் துள்ளார். (ச)

# ரயர்க் கடையில் கொள்ளை: ஒருவர் கைது

மட்டக்களப்பு, ஏப்.18

கல்முனை, பெரியநீலாவணைப் பிரதேசத்தில் ரயர்க் கடை ஒன்றில் திருடினார் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் மற்றும் திருடப்பட்ட பொருள்களை கல்முனைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பெரியநீலாவணை பிரதான வீதியில் உள்ள ரயர்க் கடை ஒன்றின் கூரையை உடைத்து திருடர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 12 மணிக்கு உட்புகுந்துள்ளனர் என்று பொலிஸா ருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் உடனே சென்றனர்.

பொலிஸாரை கண்ட திருடர்கள் தப்பியோடியபோதும் ஒருவர் கைது செய்யப்பட்டார். மற்றைய நபர் தப்பிச் சென்றார்.

தலைமறைவாகியுள்ள மற்றொரு நபரையும் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கல்முனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## மகிழ்ச்சியான பொழுதுபோக்கில்....



ஆயிரக்கணக்கான உள்நாட்டு உல்லாசப் பயணிகள் கிழக்கின் பிரபல சுற்றுலாத் தளமான பாசிக்குடா கடற்கரையில் பொழுதுபோக்கைக் கழிக்கின்றனர். (204)

# அன்னதான உணவு சாப்பிட்டவர்கள் வைத்தியசாலையில்

நோட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியகல லொனெக் தோட்ட ஆலய உற்சவத்தில் அன்னதான உணவைச் சாப்பிட்டவர்களில் சுமார் 55 பேர் உணவு ஒத்துக்கொள்ளாமையால் வட்டவளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களில் 20 சிறுவர்கள் அடங்குகின்றனர் என்று வட்டவளை வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

லொனெக் தோட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆலய உற்சவத்தில் வழங்கப்பட்ட அன்னதான உணவைச் சாப்பிட்டவர்களுக்குத் திடீரென வாந்தி ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆராயும் நடவடிக்கைகளில் பொதுசுகாதார உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். (ச)

# கூட்டுறவுக் களஞ்சியங்கள் புனரமைப்பு

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரின் கீழ் தற்காலிகமாக பொறுப்பளிக்கப்பட்டிருந்த கள்ளியங்காட்டு மூன்று களஞ்சியசாலைகளையும் பொறுப்பேற்று புனரமைக்கும் பணிகள் கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் சேவியர் பெர்னாண்டோவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்கள் ஏற்படும் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்படும் மக்களுக்கு உடனடியாக உதவுவதற்காக உலர் உணவுப் பொருள்கள் கூட்டுறவு அமைச்சால் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அண்மையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடத்தப்பட்ட கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டபோதே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

தேவையான உலர் உணவுப் பொருள்கள் இங்கு களஞ்சியப்படுத்தி

வைக்கப்படுமென நாடாளுமன்ற உறுப்பனர் சீ.யோகேஸ்வரனிடம் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச)

# சுனாமி வீட்டுத்திட்டம் கவனிப்பாரற்ற நிலையில்

அம்பாறை,ஏப்.18

சுனாமியினால் பாதிக்கப்பட்ட கல்முனை பிரதேச மக்களில் ஒரு தொகையினருக்காக நிர்மாணிக்கப்பட்ட இறைவெளிக்கண்ட வீட்டுத் திட்டத்திலுள்ள வீடுகளில் ஏற்கெனவே பகிர்ந்தளிக்கப்பட்டவை தவிர ஏனைய வீடுகள், கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது.

அந்த வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த மின்உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருள்கள் காணாமல் போயுள்ளதாகவும் அங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இறைவெளிக்கண்டத்தில் பகிர்ந்தளிக்கப்படாமல் எஞ்சியுள்ள 29 வீடுகளையும் சுனாமியினால் பாதிக்கப்பட்டு இதுவரை வீடுகளின்றி அல்லலுறும் தமக்கு வழங்குமாறும் கல்முனையிலுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்முனைப் பிரதேசத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கடந்த 2005ஆம் ஆண்டு அரசின் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட நிதி யிலிருந்து இறைவெளிக்கண்ட வீட்டுத்திட்டத்தில் 456 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தொடர்மாடிகளாக நிர்மாணிக்கப்பட்ட இந்த வீட்டுத்திட்டத்தில் 12 வீடுகளைக் கொண்ட 38 வீட்டுத்தொகுதிகள் அமைக்கப்பட்டன. (ச)

# மான் இறைச்சியுடன் ஒருவர் கைது

திருகோணமலை, தம்பலகாமம், முத்துநகர் காட்டுப்பகுதியில் வைத்து 5 கிலோ கிராம் மான் இறைச்சியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வனவிலங்கு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸாருடன் இணைந்து தேடுதல்களை மேற்கொண்டபோது இவர் காட்டுப்பகுதியில் வைத்து இறைச்சியுடன் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)


# ஒன்றரை அடிக்கு தோண்டப்பட்ட பின் கைவிடப்பட்டது வீதிப் புனரமைப்பு

அம்பாறை,ஏப்.18

கடந்த உள்ளூராட்சித் தேர்தல் காலத்தின்போது அட்டாளைச் சேனை, நாவலடி வீதியினை கொங்கிறீட் வீதியாக அமைத்துத் தருவதாகக் கூறி, அந்த வீதியிலிருந்த கிறவல் மற்றும் மண் ஆகியவற்றை சுமார் ஒன்றரை அடி ஆழத்துக்கு தோண்டியெடுத்துள்ளனர் சம்பந்தப்பட்டோர். தற்போது இந்த வீதி புனரமைக்கப்படாது பாராமுகமாகக் கைவிடப்பட்டுக் கிடப்பதாக அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உறுதியளிக்கப்பட்டதற்கு இணங்கத் தமது வீதியினை கொங்கிறீட் வீதியாக அமைக்க வேண்டும். அல்லது பழைய நிலையில் தமது வீதியினைச் செப்பனிட்டுத் தரவேண்டும் எனச் சம்பந்தப்பட்டோரிடம் அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த வீதி இரண்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் எதுவித புனரமைப்புகளுமின்றி கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.



இந்த வீதி மண் தோண்டப்பட்டு பள்ளமாக்கப்பட்டுள்ளதால், அண்மையில் பெய்த மழை காரணமாக வீதியின் பல இடங்களில் நீர் தேங்கி நிற்கத் தொடங்கியது.

இதனால் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பயணம் செய்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

இந்த வீதியில் தோண்டியெடுக்கப்பட்ட கிரவல் மற்றும் மண் ஆகியவை சில தனியாருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்பாடு சட்ட விரோதமானது என்றும் பொது மக்கள் கூறுகின்றனர்.

இந்த விடயத்தில் உரியவர்கள் கவனம் செலுத்தி, இந்த வீதி தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் பாதுகாப்பை நாடவேண்டிய நிர்ப்பந்தம் இலங்கைக்கு ஏற்படும்

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய கூறுகிறார்

கொழும்பு,ஏப்.18

ஐ.நா. தனது அங்கத்துவ நாடு ஒன்றைப் பாதுகாக்க முன்வராது போனால், சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் பாதுகாப்பை நாட இலங்கை நிர்ப்பந்திக்கப்படும் என்று கூறியுள்ளார் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ.

ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து வெளியிட்ட கருத்தில் இவ்வாறு கூறினார். மேலும் கூறியுள்ளதாவது:

சில நாடுகளால் ஐ.நா கடத்தப்பட்டுவிட்டதாகவே தோன்றுகிறது. இலங்கை ஐ.நாவின் உறுப்பு நாடு. அதற்கு ஐ.நா. பாதுகாப்பு அளிக்க வேண்டும். இந்த அறிக்கையானது ஏனைய நாடுகளிடம் பாதுகாப்புக் கோர எம்மை நிர்ப்பந்திக்கிறது. சில நாடுகளால் ஐ.நா. அடமானம் வைக்கப்படக் கூடாது.

நிபுணர்கள் குழுவின் இந்த அறிக்கைக்குப் பின்னால் அவர்களுக்கு ஒரு நிகழ்ச்சி நிரல் இருந்துள்ளது. விடுதலைப் புலிகளால் நிபுணர்கள் குழு சலவை செய்யப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் இலங்கையின் மூன்றில் ஒரு பங்கு பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த தீவிரவாத அமைப்பே விடுதலைப் புலிகள் என்பதை அவர்கள் கூறத் தவறி விட்டனர்.

தரையில் போரிடும் படையினரைத் தவிர, கடல் மற்றும் வான் பிரிவுகளையும் புலிகள் கொண்டிருந்தனர்.

அவர்கள் தென்பகுதிக்கு தற்கொலைக் குண்டுதாரிகளை அனுப்பி அரசியல்வாதிகளையும் பொதுமக்கள் பயணம் செய்யும் பேருந்துகள், கட்டடங்களை இலக்கு வைத்தும் தாக்குதல்களை நடத்தினர்.

இராணுவ முகாம்களை அழித்து ஒரே இரவில் ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்றனர். காவல்துறையினரைக் கொண்டு அடக்குவதற்கு அவர்கள் ஓர் அமைப்பு அல்ல. மோசமான எதிரிகளான விடுதலைப் புலிகளுடன் எம்மால் போரிட முடியாது என்று ஐ.நா, அமெரிக்கா, நோர்வே மற்றும் பல நாடுகள் எம்மிடம் கூறின.

நாம் எமது படைகளை அனுப்பி, உச்சமான சூட்டு வலுவைப் பயன்படுத்தி அவர்களை அடக்கினோம்.

உலக உணவுத் திட்டம் போன்ற ஐ.நாவின் முகவர்களினதும், அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவினதும் அறிக்கைகளை நிபுணர்கள் குழு புறக்கணித்திருப்பதாகவே தோன்றுகிறது.

போரின் இறுதிக்கட்டத்தில் புலிகளிடம் சிக்கிப் போயிருந்த மக்களுக்கு எவ்வாறு மனிதாபிமான உதவிகள் அனுப்பப்பட்டன என்பது பற்றி அவர்களிடம் கேட்டால் தெரிந்து கொள்ள முடியும்.

அங்கிருந்த மக்களை புலிகள் மனித கேடயங்களாகப் பாவித்தனர். போரின் இறுதி நாள்களில் அவர்களை கடலேரிப் பகுதிக்குத் தள்ளிச் சென்றனர்.

உணவு வாகனத் தொடரணிகள் அவர்களை சென்றடைய முடியவில்லை. கடல் வழியான உணவுப்பொருள்களை பெற்றுக் கொடுக்க நாம் ஏற்பாடு செய்தோம்.

புலிகள் கடத்தி விடுவார்கள் என்ற பயத்தில் சிறுவர்களைப் பெற்றோரால் பாடசாலைக்கு அனுப்பமுடியவில்லை.

புலிகளின் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சத்தினால் ஒரே பேருந்தில் பயணிக்க தாய், தந்தையர் பயந்தனர்.

பள்ளிவாசல்களில் தொழுகை நடத்தியவர்களும் மாணவபிக்குகளும் கொல்லப்பட்டனர். இந்தநிலையில் தம்மைத் தெரிவு செய்த மக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசுக்கு உள்ளது.

போரின் கடைசி நான்கு ஆண்டுகளிலும் 6,000 படையினர் கொல்லப்பட்டனர். 20,000 பேர் காயமடைந்தனர். அவர்களில் 10,000 பேர் மோசமான காயங்களை அடைந்தனர்.

புலிகளின் உயிரிழப்புகள் மிகவும் அதிகம். ஏனென்றால படையினர் பயன்படுத்திய சூட்டுவலு அதிகமானது.

சிலர் காணாமற் போனதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. புலிகளுக்கு எதிரான போரின்போது அவர்கள் மரணமாகி விட்டதாகவே கருத வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் சொல்லவில்லை. காணாமற் போனதாகவே சொல்கிறார்கள். போரின் முடிவில் 30,000 புலிகள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவமனைகள் மீது படையினர் தாக்குதல் நடத்தியதா கக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாம் அத்தகைய தாக்குதல்களை நடத்த முன்னர் அந்த மருத்துவமனைகள் இடம்மாற்றப்பட்டுவிட்டன. மருத்துவமனைக்கு அருகே புலிகள் தமது பீரங்கிகளை நிறுத்தி எம் மீது தாக்குதல் நடத்தினர். மருத்துவர்களும் நோயாளிகளும் அங்கிருந்து வெளியேறிய பின்னரே நாம் பதில் தாக்குதல் நடத்தினோம்.

வானத்தில் இருந்து துண்டுப் பிரசுரங்களை வீசினோம். ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்தோம். போர் தவிர்ப்பு வலயங்களை பிரகடனம் செய்தோம்.

அறிவில்லாத ஆய்வுகளை நிபுணர்கள் குழுவின் இந்த அறிக்கை விவரிக்கிறது. அவர்கள் சில மேற்குலக சக்திகளின் தாளத்துக்கு ஏற்ப பாடியுள்ளனர் என்றும் கோத்தபாய தெரிவித்துள்ளார். (ம)

# குற்றங்களை ஐ.நா. நிரூபித்தால் மின்சாரக் கதிரையில் ஏறவும் தயார்

## அலரிமாளிகையில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.18

ஐ.நா. நிபுணர்கள் குழு தன் மீதும் தனது அரசு மீதும் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபித்தால், மின்சாரக் கதிரையில் மரண தண்டனைகளை நிறைவேற்றப் பயன்படுத்துவது அமரத் தயாராக இருக்கிறார் என்று கூறியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அலரிமாளிகையில், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள், ஆளும்கட்சி சார்பில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மத்தியில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது:

இலங்கையில் உறுதியற்ற நிலையை உருவாக்க வஞ்சனையுடன் என் மீதும் அரசு மீதும் அவர்கள் போர்க்குற்றம் சுமத்தியுள்ளனர். குற்றச்சாட்டுகளை அவர்கள் நிரூபித்தால், தாய்நாட்டுக்காக மின்சாரக் கதிரையில் ஏறவும் நான் தயார்.

அதுபற்றி நான் கவலைப்படவில்லை. இன்று நான் மகிழ்ச்சியான மனிதராக இருக்கிறேன்.

30 ஆண்டுகால தீவிரவாதத்தைத் தோற்கடித்ததற்காகவே, உலகில் சக்திவாய்ந்த மனிதராக ரைம் சஞ்சிகை என்னைத் தெரிவு செய்துள்ளது.

ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கை என் மீதும் அரசு மீதும் போர்க்குற்றங்களைச் சுமத்தியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த விடுதலைப் புலிகளின் நெருங்கிய உறவினர்கள் கூட இதுபோன்ற குற்றச்சாட்டுகளை எம் மீது சுமத்தவில்லை. மக்கள் எமது பக்கமே இருக்கிறார்கள் என்பதை உலகுக்கு வெளிப்படுத்தும் வகையில் மே நாள் நிகழ்வுகளை பிரமாண்டமான முறையில் நடத்தவேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார். (ம)

# ஐ.நா. வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளிப்பது குறித்து ஆராய்வு

அடிப்படையற்ற ஐ.நாவின் அறிக்கைக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது குறித்து சட்ட நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர் என்று இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியூமால் பெரேரா கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு அதிகாரபூர்வ பதில் அனுப்புவது பற்றி இலங்கை அரசு இன்னமும் முடிவு எதையும் எடுக்கவில்லை. ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் நம்பகத்தன்மை பற்றி இலங்கை அரசு ஆராயந்து வருகிறது.

அடிப்படையற்ற இந்த அறிக்கைக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது பற்றி சட்டநிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

ஒரு சிறிய பத்திரிகை கூட சரியான தகவல்களின் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கிறது.

ஆனால் இந்தப் பெரிய அறிக்கை அடிப்படையற்ற தக வல்களை உள்ளடக்கியமாக இருப்பது ஆச்சரியம் தருகிறது. என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் பதிலைப் பெறும் நோக்கிலேயே அவருக்கு நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் பிரதி ஒன்று அனுப்பப்பட்டிருப்பதாக ஐ.நா பொதுசெயலரின் பணியகம் கூறியிருந்தது.

இதேவேளை, ஐ.நா பொதுச் செயலரின் அறிக்கையை ஆராய்ந்து அதற்குப் பதிலளிக்கும் அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கு சட்டமா அதிபர் மொகான் பீரிஸ் தலைமையில் முன்னாள் வெளிவிவகாரச் செயலர்கள் நிகால் றொட்றிகோ, பேணாட் குணதிலக, பாலிக்ககார ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்றை இலங்கை அரசு நியமித்துள்ளது. (ம)

# அறிக்கைக்குப் பதிலளிக்க நால்வர் அடங்கிய குழு

## இலங்கை அரசு நியமித்தது

கொழும்பு,ஏப்.18

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. நிபுணர் குழு வெளியிட்டுள்ள அறிக்கைக்கு பதிலளிக்க நால்வ்ர் அடங்கிய குழுவொன்றை அரசு நியமித்துள்ளது.

இதேவேளை இலங்கை அரசு சார்பில் குறித்த அறிக்கைக்கு எதிராக உத்தியோக பூர்வமான கருத்துகள் எவற்றையும் வெளியிடுவதில்லை என்றும் அரசு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அரசால் நியமிக்கப்பட்டுள்ள இந்த நால்வர் அடங்கிய குழு ஐ.நா வின் அறிக்கையைக் கவனமாக ஆராய்ந்து எதிர்வரும் நாள்களில் பதிலைத் தயார் செய்யும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக ராஜதந்திர வழிகளில் மட்டும் அதனை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

இல்ங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையால் கொழும்பு பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஐ.நாவுக்கு எதிராக ஆதரவு தேடுவதற்கு வெளிநாடுகளுக்கு இலங்கைத் தூதர்கள்

கொழும்பு,ஏப்.18

ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராக ஆதரவைத் திரட்டுவதற்கு பல்வேறு நாடுகளுக்கும் இலங்கை அரசு தூதுக்குழுக்களை அவசரமாக அனுப்பவுள்ளது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையை இலங்கை அரசு பாரதூரமானதாக எடுத்துக் கொண்டுள்ளதாக இலங்கையின் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேசியா, மலேசியா மற்றும் ஆபிரிக்கா, லத்தின் அமெரிக்காவில் உள்ள பொதுநலவாய நாடுகளுக்குத் தூதுக் குழுக்களை அனுப்பி விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க படைபலத்தைப் பயன்படுத்தியது ஏன் என்று விளக்கம் அளித்து, ஐ.நா நிபுணர்கள் குழுவுக்கு எதிரான நிலைப்பாட்டுக்கு ஆதரவு தேடவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இராணுவ நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்றையும் இலங்கை அரசு தயாரித்து வெளியிடவுள்ளதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

விடுதலைப் புலிகளால் பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட உயிரிழப்புகள், தீவிரவாதம் அழிக்கப்பட்டதால் வடக்கு, தெற்கு மக்கள் அடைந்துள்ள பயன்கள், இறுதிக் கட்டப்போரின்போது எடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகள், குறிப்பாக வன்னி, முல்லைதீவு பகுதிகளின் நிலைமைகள் குறித்து இந்த வெள்ளை அறிக்கையில் விவரிக்கப்படவுள்ளது.

அதேவேளை, ஐ.நா பொதுச் செயலரின் அறிக்கையை ஆராய்ந்து அதற்கு எதிரான அறிக்கை ஒன்றை தயார் செய்யும்படி இலங்கையின் சட்டமா அதிபரை அரசு கேட்டுள்ளது.

சட்டமா அதிபருக்கு உதவுமாறு ஓய்வுபெற்ற வெளிவிவகாரச் செயலர்களான நிகால் றொட்றிகோ, பேனாட் குணதிலக, பாலிக்ககார ஆகியோர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று அந்தச் செய்திகள் மேலும் கூறுகின்றன. (ம)

## கல்விச்சாலைக் காட்சிகள்



காரைநகர் புதுவீதிச் சந்தியில் அமைந்துள்ள எம்.ஈ.சி. கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழாவில் ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி எம்.நடராசா மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார்.(201-250)



கொலம்பரம் சென்.ஜோசப் வித்தியாலயத்தின் 150 ஆவது நிறைவு விழாவை யொட்டி நடைபெற்ற ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியை அருட்தந்தை அந்தோனிமுத்து கொடி அசைத்து ஆரம்பித்து வைக்கின்றார். (201-23)



காரைநகர் திக்கரை திருச்செந்தூரன் பரிலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட காரைநகர் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் ரி.சசிகுமார் மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குகிறார். (250)



கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வேல்ட்விஷன் அதிகாரி பிரியவத்சலன் திலக நாயகம் போல் கொடியேற்றி போட்டியை ஆரம்பித்து வைக்கிறார். (121)

# மருத்துவ, உள ரீதியாக யாகங்கள் உயர்ந்த சக்தியையும் பயனையும் தருவன

யாழ்ப்பாணம்,ஏப்.18

ஆலயங்களில் யாகங்கள் மேற்கொள்ளப்படுவது மருத்துவ ரீதியாகவும் உள ரீதியாகவும் சிறந்த பயனைத் தருகின்றது.

இந்து சமயத்தின் கிரியை வழிபாட்டில் யாகங்களானது உயர்ந்த சக்தியையும் பலனையும் தரக்கூடிய ஓர் வழிபாடாகும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். வதிவிடத்துறவி பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய சுவாமிகள்.

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தின் பெருந் திருவிழாவில் யாகங்கள் (ஹோமங்கள்) எனும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தனது ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்தும்போது:-

ஆலய வழிபாடுகளின்போது இடம்பெறுகின்ற யாக பூசையானது பல்வேறு பலன்களையும் தேவைகளையும் இறைவனிடம் வேண்டி நடத்தப்படும்.

அதாவது கல்வியை வேண்டி வித்யா யாகமும் பிள்ளைப்பேறு வேண்டி புத்ர இஸ்தி யாகமும் நவக்கிரக தோஷங்களில் இருந்து விடுதலை பெறுவதற்காக தோயு யாகமும் நீண்ட ஆயுளை வேண்டி ஆயுசு ஹோமமும் நடத்தப்படும்.

இவ்வாறு யாக குண்டத்தில் ஆகுதிப் பொருள்களை இட்டு உரிய தேவதைக்கு அக்கினியாகச் சமர்ப்பிப்பார்கள்.

யாகத்தைச் செய்பவர் உரிய பலனை அடைய வேண்டும் என்பதற்காகத்தான் பெயர், நட்சத்திரம் கொண்டு அர்ச்சனை செய்யப்படுகின்றது.

இவ்வாறு யாகத்தை மேற்கொள்வதால் வெளிவரும் புகை மூலம் நோய் எதிர்ப்புசக்தி அதிகரிப்பதுடன் நம்மைச் சூழவுள்ள சுற்றாடல் சுத்தம் அடையும். அத்துடன் அர்ப்பணிப்புடன் கூட மனநிலை பக்குவப்படுத்தவும் பழக்கப்படுத்தலாம்.

நெருப்பு என்பதன் அர்த்தம் புனிதப்படுத்துவது என்பதாகும். எனவே ஆலயங்களில மேற்கொள்ளப்படுகின்ற யாக வழிபாடுகளில் நாமும் பங்குபற்றி பயன்பெறுவோம் எனவும் கேட்டுக் கொண்டார். (ஐ-313)

# மக்களுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்

யாழ்ப்பாணம்,ஏப்.18

பொதுமக்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

இவை திணைக்களங்கள் சார்ந்த தலைவர்களின் பொறுப்பு ஆகும்.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார்.

வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்தும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது:-

அரசினால் சட்ட திட்டங்கள் வரையறுக்கப்பட்டு அந்தச் சட்ட திட்டங்களுக்கேற்ப பொதுமக்களின் செயற்பாடுகள் முன்னெடுத்துவரும் திணைக்களங்கள் காலத்துக் கேற்ப நடைமுறைகளை மாற்றியமைத்து அவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தடுக்க வேண்டியது அவசியம்.

சங்கானைப் பண்டிகைக் குளத்துக்கு முன்னால் அமைந்துள்ள மதுபானசாலையில் மதுபானங்களை வாங்கி பிர்தான வீதியிலுள்ள மதகுகளில் இருந்து அருந்துவோர்மீது மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் மேலும் தொடர வேண்டும்.

அதனைப்போல வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வாகன வேகக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதற்கான வீதிச் சமிக்ஞைகள் அமைக்கப்பட வேண்டும். சங்கானைச் சந்தைப் பகுதியில் வீதியோரதெரு வியாபாரங்கள் இடம்பெறுவதைத் தடை செய்ய வேண்டும். இதனைப் பிரதேச செயலர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வலி.மேற்குப் பிரதேச கரையோரப் பிரதேசங்களில் நெல்லியான், கல்விளான் போன்ற இடங்களில் மண் அகழ்தல், சட்டவிரோதமாக மரங்களைத் தறித்தல் இவற்றைத் தடுக்க வட்டுக்கோட்டைப் பொலிஸார் அதிக கவனம் செலுத்தல் வேண்டும். எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலர் மற்றும் சங்கத் தலைவர்கள் ஆகியோரின் கோரிக்கைகளுக்கான தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (ஐ-313)

# அபிவிருத்திப் பணிகளில் பெண்கள் இன்று உயர் நிலையில் உள்ளனர்

போரின் பிடியிலிருந்து விடுபட்ட மக்கள், அவர்களது அபிவிருத்திப் பணிகள் என பல்வேறுபட்ட தேவைகள் அனைத்தையும் நிர்வகிக்கும் பொறுப்புக்கள் பெண்களிடமே உள்ளன.

இதற்குப் பெண்கள் அமைப்புக்களின் அயராத முயற்சிகளும் உத்வேகமான சிந்தனைப் புரட்சிகளும் படிப்படியாகப் பல மாற்றங்களைத் தந்தமையே காரணமாகும்.

இவ்வாறு பெண்களிடம் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களையும் கடமைகளையும் திறமையான வழிகளில் சேவைகளை வழங்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவி சரோஜா சிவசந்திரன்.

அண்மையில் யாழ்.பல்கலைக்கழக புதிய முதல் பெண் துணைவேந்தராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பேராசிரியர் வசந்தி அரசரத்தினத்துக்கு வாழ்த்துரை வழங்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். போரின் பின் பெண்களின் சமூக வாழ்வியலில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள், கருத்தியல் முரண்பாடுகள் யாவும் இன்று வாழ்வின் போக்கையே மாற்றியுள்ளன. இவற்றில் இருந்து வேறுபடக்கூடிய முறையில் பெண்கள் நன்மதிப்பைப் பெறக்கூடிய கௌரவமான பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அரச அதிபர் உட்பட வைத்திய சாலைப் பணிப்பாளர்வரை பெண்கள் உயர்ந்த பதவிகளில் யாழ். மாவட்டத்தில் உள்ளனர்.

இவ்வாறு மேன்மேலும் பெண்கள் பல்வேறு துறைகளுக்குள்ளும் உள்வாங்கப்படுதல் பெண்களின் உயர்ந்த நிலைக்கு சவால் மிக்க பாதைகளாக மாற்றுகின்றது - என்றார். (ஐ-313)

# வங்கிச் சேவைகளை இலகுபடுத்தவே புதிய கிளைகள் திறக்கப்படுகின்றன

வாடிக்கையாளர்களின் நலன்கருதியும் அவர்களது சிரமங்களைக் குறைத்து வங்கிச் சேவைகளை இலகுபடுத்துவதற்காகவும் புதிய கிளைகள் திறந்து வைக்கப்படுகின்றன.

மக்கள் வங்கியின் பீப்பிள்ஸ் லீசிங் கிளையின் நான்காவது கிளை கடந்த ஐந்தாந் திகதி சங்கானையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி டி.பி.குமாரகே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கிளை அலுவலகத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்தும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பீப்பிள்ஸ் லீசிங் ஆலோசகர் ஆர்.டி. வீரசிங்க; யாழ். மாவட்ட முகாமையாளர் ரி.கே. ஆனந்தராசா மற்றும் மக்கள் வங்கி முகாமையாளர்கள் வாடிக்கையாளர்கள் ஆகியோர் கலந்து கெண்டனர்.

இதன்போது லீசிங் முறையில் வாகனக் கொள்வனவு செய்த நான்கு பேருக்கு வாகனத் திறப்புக்களும் வழங்கப்பட்டன. (ஐ-313)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**

இன்று திட்டமிட்ட சில வேலைகளை செய்ய முடியாமல் போனாலும், நாளைய வேலை ஒன்றை முன்பே முடித்துக் கொள்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள நினைப்பர். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.



**இடபம்:**

கடந்த கால அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்த்து புதிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். வேண்டிய சிலரே முக்கியமான விடயங்களில் விரோதமாக செயற்படுவது கண்டு எரிச்சல் அடையலாம். சிவாலய வழிபாட்டின் மூலம் சிறப்புக்கள் கூடும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வயிறு உபாதை உண்டாகலாம்.



**மிதுனம்:**

தொலை பேசி வழிச் செய்திகள் தொல்லை தருவதாக அமையலாம். நண்பர்கள் உங்களிடம் வாங்கிய பணத்தைக் கொடுக்காமல் இழுத்தடிக்கலாம். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டு, அவதிப்படுவீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும்.



**கடகம்:**

செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிப்பீர்கள். பம்பரமாகச் சுழன்று பணியாற்ற நினைப்பீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். வெளியூரில் இருந்து வரும் நபர் முக்கியமான தகவல்களைச் சொல்லலாம். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சி நடக்கலாம்.



**சிங்கம்:**

கைவிட்டுப் போனதாக நினைத்த பொருள் ஒன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம். பிள்ளைகள் நலன் கருதி சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். அயலாருக்காக சில காரியங்களை செய்து கொடுப்பீர்கள். உறவினர்கள் சிலரின் அன்புக்கு கட்டுப்பட்டு நடக்க நேரிடலாம். சில வேலைகளில் தடை, தாமதம் ஏற்படும்.




**கன்னி:**

நண்பர் அல்லது குடும்ப உறுப்பனர் ஒருவர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கலாம். பொதுவிடயங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும். மறதியைத் தவிர்க்க எதிலும் முன்யோசனையுடன் செயற்பட வேண்டும். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு.



**துலாம்:**

மன உறுதியுடன் செயற்படும் நாள். விலகிச் சென்ற உறவுகள் விரும்பி வந்து சேரலாம். திட்டமிட்ட வெளியூர் பயணங்களை மாற்றி அமைக்கலாம். யாருக்கும் பிணை கொடுக்க வேண்டாம். சிலர் தங்களின் அனுபவம் ஒன்றை உங்களிடம் சொல்லலாம். வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். பக்தி நாட்டம் கூடும்.



**விருச்சிகம்:**

மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். கைமாத்தாக, கடனாக கொடுத்த பணம் திரும்பி வரலாம். சிலர் உங்களிடம் தந்திரமாகப் பேசி காரியம் சாதிக்கலாம். சண்டை போட்ட சிலரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். பொழுது போக்கு உல்லாச விஷயங்களில் நாட்டம் செல்லும். விருப்பமான உணவைச் சாப்பிடுவீர்கள்.



**தனுசு:**

மனக்குழப்பங்களைத் தவிர்க்க சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களின் வீடு தேடி வரலாம். பொருளாதார நிலைமை மேம்படும். திட்டமிட்ட காரியத்தை திடீரென மாற்றி அமைக்கலாம். நீங்கள் எதிர்பாராத வகையில் சில உதவி கிடைக்கலாம். இழுபறி காரியம் ஒன்று முடிவுக்கு வரும்.



**மகரம்:**

தன்னம்பிக்கை, தைரியத்துடன் செயற்படும் நாள். என்றோ வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்று திடீரென கைக்குக் கிடைக்கலாம். ஒரு விடயம் குறித்து பெரிய அளவில் மனக் கோட்டை கட்டி, அது நடக்காமல் போகலாம். தெய்வ வழிபாடுகள் மூலம் திருப்தி காண்பீர்கள். மற்றவர்களிடம் ஏமாறாமல் இருக்க எதிலும் எச்சரிக்கை அவசியம்.



**கும்பம்:**

குடும்ப உறுப்பினர்கள் உங்களிடம் கோபம், வேகமாக நடந்து கொள்ளலாம். சகோதரர் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மை தரும். பயணங்களின் போது, வாகனங்கள் பழுதாகி எரிச்சல் உண்டாக்கலாம். சில பொருள்களை ஆசைப்பட்டு வாங்கியும் அதில் திருப்தி இல்லாமல் போகலாம்.



**மீனம்:**

உங்களின் குடும்ப பெருமை பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். அடுக்கடுக்காக பல வேலைகளைச் செய்யும் சூழ்நிலை உருவாகலாம். நண்பர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிந்து பளிச்சென தோற்றம் அளிப்பீர்கள்.

# செய்வதறியாது சிக்கித் திணறும் கொழும்பு...!



இரண்டாம் உலகப் போரின் போது நாஸிப் படைகள் யூதர்களை (பொது மக்களை) கொத்துக் கொத்தாகக் கொன்று குவித்தன.

ஓர் இன அழிப்பையே மேற்கொண்டன ஜப்பானியப் படைகள். சிவிலியன்களையும் அரசியல் கைதிகளையும் இழிவான விதத்தில் நடத்தின, கொன்று குவித்தன. இரண்டாம் உலக யுத்தம் நேச நாடுகளால் முடிவுக்குக்கொண்டுவரப்பட்ட நிலையில், நேசநாடுகள் மேற்கூறிய யுத்தக் குற்றங்களை இழைத்ததாக நம்பப்படும் ஜேர்மனியப் படைத் தளபதிகளையும் ஜப்பானியப் படைத் தளபதிகளையும் கைது செய்து சட்டப்படி மரண தண்டனை நிறைவேற்றின.

1945 மற்றும் 1946 இல் இடம்பெற்ற நுரெம்பேர்க் விசாரணைகளின் பின்னர் 12 நாஸித் தளபதிகளுக்கு யுத்தக் குற்றம் இழைத்தமைக்காக மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதேபோன்று 1948 ஆம் ஆண்டு ஜப்பானின் ரோக்கியோவில் யுத்தக் குற்றம் இழைத்த 7 தளபதிகளுக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

இன அழிப்பு, சிவிலியன்களை இழிவான அல்லது முறையற்ற விதத்தில் நடத்துதல், போர்க் கைதிகளை முறையற்ற விதத்தில் நடத்துதல் போன்றன குறிப்பிடத்தக்க யுத்தக் குற்றங்களாகும்.

அதிலும் இன அழிப்பு என்பது பெரிய யுத்தக் குற்றமாகக் கருதப்படுகிறது. யுத்தக் குற்றங்களை வரையறுக்கும் சட்ட அதிகாரங்களாக ஜெனீவா மரபுகள் மற்றும் பழைமையான யுத்த தர்மச் சட்டங்களும் காணப்படுகின்றன.

4 ஆவது ஜெனீவா மரபின் 147 ஆவது சரத்து பின்வருமாறு யுத்தக் குற்றத்தை வரையறுக்கிறது. அதாவது மனவுறுதியுடன் உடல் ரீதியான அல்லது ஆரோக்கிய ரீதியான தீவிரமான காயங்களை அல்லது துன்பங்களை விளைத்தல், சட்டத்துக்குப் புறம்பான வலுக்கட்டாயமான நாடு கடத்தல், (இடம்பெயர்த்தல்) அல்லது சட்டத்துக்கு எதிரான வகையில் நபரொருவரைத் தடுத்து வைத்தல் அல்லது சிறைப்படுத்தல், நபரொருவரை வலுக் கட்டாயமாக எதிர்ப்புணர்வுமிக்க படைகளில் சேவையாற்றச் செய்தல், மனவுறுதியுடன் நபரொருவரது நியாயமான விசாரணைக்கான உரிமையை இல்லாது செய்தல், பயணக் கைதிகளாகப் பிடித்து வைத்திருத்தல், பெரிய அழிப்புக்கள் மற்றும் சொத்துக்களைச் சட்ட விரோதமாக அபகரித்தல் உள்ளிட்ட சட்ட விரோதமானதும் நியாயமான இராணுவத் தேவை என நிரூபிக்க முடியாததுமான கொலை, சித்திரவதை மற்றும் மனிதத் தன்மையற்ற நடத்துமுறைகள் யுத்தக் குற்றங்களாகும்.

4 ஆவது ஜெனீவா மரபின் 147 ஆவது சரத்து இவ்வாறு கூறுகிறது.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசு மேற்கொண்ட போரில் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றச்சாட்டு, ஊடக அணுகுமுறை மற்றும் அரசியல் பழிவாங்கல் போன்ற குற்றச்சாட்டுக்களைச் சர்வதேசம் இலங்கை அரசு மீது சுமத்துகிறது.

தற்போதைய நிலையில் அரசு இந்தக் குற்றச்சாட்டுக்கள் காரணமாக மேற்குலகில் தனிமைப்படுமளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது. தினந்தோறும் இலங்கை அரசை சங்கடத்தில் தள்ளும் போர்க்குற்ற செயல்களுடன் தொடர்புடைய ஒளிநாடாக்கள் மற்றும் புகைப்படங்கள் வெளிவந்த வண்ணமேயுள்ளன.

இலங்கை அரச படைகள் மீது போர்க்குற்ற ஆதாரங்கள் தொடர்ந்து வெளிவருவதை இலங்கை அரசினாலோ அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களினாலோ இதுவரை தடுக்க முடியவில்லை என்பதுதான் இங்கு கவனத் தில் எடுக்கப்பட வேண்டிய விடயமாகும்.

சர்வதேச மட்டத்தில் போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெற வேண்டுமென சர்வதேச அமைப்புக்கள் விடுக்கும் அழைப்புத்தான் இலங்கை அரசுக்குப் பெரும் தலையிடியாக உள்ளது.

பிரிட்டனில் இயங்கும் சனல்-4 வெளியிட்ட இலங்கை அரச படைகள் மேற்கொண்டதாகக் கூறப்படும் போர்க்குற்ற ஒளிப்படங்களை அடுத்து சர்வதேச மட்டத்தில் அது குறித்த வலியுறுத்தல் வெளியாகியுள்ளது.

அத்துடன் இலங்கைக்கு எதிரான போர்க்குற்றங்கள் தொடர்பான போதிய ஆதாரங்கள் வெளிவருகின்ற போதிலும் அவற்றை விசாரிப்பதற்கு இலங்கை அரசு தவறியிருப்பதானது நீதியான விசாரணையின் அவசியத்தை அதிகரித்திருக்கிறது எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியப் பணிப்பாளர் பிறட் அடம்ஸ் வாதிட்டுள்ளார்.

மொத்தத்தில் ஜனாதிபதி தலைமையிலான அரசு மீதும் அரச படைகள் மீதும் சுமத்தப்படும் போர்க்குற்றச்சாட்டுக்கள் என்பது மிகப்பெரும் சவால் மிகுந்ததாகவே அமைந்துள்ளன.

இந்தப் போர்க்குற்றச்சாட்டுக்கள் அதிகரித்துக் கொண்டு செல்வதால் உலக அரங்கில் இலங்கை பின்னடைவுகளைச் சந்தித்திருப்பதிலிருந்து விடுபட முடியாது போகும் என்பது உண்மை.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இலங்கைப் படையினர் வன்னியில் பொது மக்கள் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியமைக்கு மற்றும் ஒரு சான்று கிடைத்துள்ளது.

'த கிரிஸ்டியன் சயன்ஸ் மொனிடர்ஸ்' என்ற இணையத்தளம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க வாஷிங்டனில் அமைந்துள்ள AAAS எனப்படும் American Association For the Advance ment of Science நிறுவனத்தின்



புவியியல் ஆய்வாளரான புரொம்லி என்பவர் இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது செய்மதிகள் மூலம் யுத்த நிலவரங்களைச் சேகரித்துள்ளார்.

சுமார் 15 மணித்தியாலங்களாக இந்தத் தகவல்கள் மூலம் வன்னியில் ஏற்கனவே பொதுமக்கள் ஒன்று கூடிய இடங்கள், விடுதலைப்புலிகள், மயானங்கள், பொதுக்கட்டடங்கள் என்பவற்றின் மீது இலங்கைப் படையினர் தாக்குதல் நடத்தியமையை அவதானிக்க முடிகிறது.

இந்த நிலையில் செய்மதிப் படங்களின் மூலம் இலங்கைப் படையினர் பொதுமக்கள் பாதுகாப்பு வலயங்களின் மீதே தாக்குதல் நடத்தியதாக நம்புவதாகப் புரொம்லி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமது படையினர் பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடத்தவில்லை என்று இலங்கை அரசு மறுப்பு வெளியிட்டு வருகிறது.

எனினும் இந்தப் படங்கள் தெளிவாக இல்லாத போதும் புதிய தொழில் நுட்பங்களின் மூலம் இதனை ஒப்புவிக்க முடியும் என்று 'த கிரிஸ்டியன் சயன்ஸ் மொனிடர்ஸ்' என்ற இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

வன்னியில் இறுதி யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்கள் இலங்கைப் படைகளிடம் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த போது படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே.

இந்த விடயம் சம்பந்தமாக வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்தவர்களில் ரமேஸ் படையினரால் விசாரணை செய்யப்படுகின்ற ஒளிப்படமும் பா.நடேசன், எஸ்.புலித்தேவன் கொலை செய்யப்பட்ட நிலையில் புகைப்படங்களும் இணையத் தளங்களில் வெளியாகியிருக்கின்றன.

சர்வதேசம் இலங்கை மீதான போர்க்குற்றங்கள் தொடர்பான சாட்சியங்களில் நிரூபிக்கப்பட்ட சம்பவமாக இதனைக் கருதுகிறது.

சமீபத்தில் வெளிவந்த செய்திகளில் அடுத்தபடியாக இலங்கை அரசு மீதான போர்க்குற்றங்கள் தொடர்பில் வெளிவந்த செய்தியாக 2006 ஆம் ஆண்டு திருகோணமலையில் கொல்லப்பட்ட 5 மாணவர்களின் பிரச்சினை உள்ளது. இந்த மாணவர்களில் ஒருவரின் தந்தையான டாக்டர் மனோகரன் தனது மகனை இலங்கை படைகள் சுட்டுக்கொன்றது எனச் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆதரவுடன் பல போராட்டங்களை நடத்தி வருகிறார்.

இந்தக் கொலைக்கான நியாயம் தனக்கு கிடைக்கும் வரை இலங்கை அரசுக்கு எதிராகத் தொடர்ந்தும் போராட்டங்களில் ஈடுபடப் போவதாகக் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின்போது 70 ஆயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக அமெ

**இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசு மேற்கொண்ட போரில் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றச்சாட்டு, ஊடக அனுகுமுறை மற்றும் அரசியல் பழிவாங்கல் போன்ற குற்றச்சாட்டுக்களைச் சர்வதேசம் இலங்கை அரசு மீது சுமத்துகிறது.**

ரிக்க கருத்தரங்கில் தகவல் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலாக இறுதிக்கட்ட யுத்தத்தின்போது 13 ஆயிரத்து நூற்று முப்பது பேரளவிலானோர் காணாமற் போயுள்ளனர். இதற்கும் ஆதாரபூர்வமான புள்ளி விவரங்கள் சர்வதேச சமூகத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் மெக்ஸ்வல் கல்லூரியின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரிவின் ஏற்பாட்டில் ஸ்ரகியூஸ் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கு ஒன்றில் மேற்படி தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வன்னி இறுதி யுத்தத்தில் இலங்கைப் படைகள் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் பல சம்பவங்கள் நாளுக்குநாள் காணொளியாகவும் ஒலி,ஒளி படங்களாகவும் வெளிவந்து

## துன்னாலைச் செல்வம்

கொண்டிருக்கின்றன. இந்தச் சம்பவங்கள் அனைத்தையும் பதிவு செய்து கொண்டிருக்கும் சர்வதேசம் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் இறங்கி இருக்கும் விசாரணைக் குழு தனது நடவடிக்கையில் முழுப்பங்காற்றி வருகிறது.

அதற்கு இணைவாக இலங்கைப் போர்க்குற்ற ஆதாரங்களாகச் செய்திப்படங்கள் வெளி வருகின்றன.

மூன்று தசாப்த கால போரில் பல இழப்புக்களைச் சந்தித்த தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை சர்வதேசம் இவை மூலம் விரைவில் பெற்றுத் தரவுள்ளது.

வெளிவருகின்ற செய்திகள் இலங்கை அரசு மீதே அதிகமான அழுத்தத்தைப் பிரயோகிக்கும் சம்பவமாக இருக்கப் போகிறது என்பது உண்மை.

# அறிவு மடம் சான்றோர்க்கு அணி



''அறிந்தும் அறியாமலும் இரு'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது ஒரு பெரிய பண்பு. சான்றோர்கள் எல்லாம் அப்படித்தான் நடந்து கொள்வார்கள்.

''பழமொழி நானூறு'' என்னும் ஒரு சங்க இலக்கியத்தில் ஒரு பழமொழி உள்ளது. அதாவது ''அறிவுமடம் சான்றோர்க்கு அணி'' என்பதே அந்தப் பழமொழி.

அறிந்தும் அறியாதது மாதிரி நடந்து கொள்வது ஞானிகளின் சிறப்பு என்பது அந்தப் பழமொழிக்கு அர்த்தம்.

பக்தி அதிகமாக மேலிடுவதால் சிலபேர் பைத்தியம் மாதிரிக் கூட நடந்து கொள்வார்கள். அதை நாம் தம்பாகப் புரிந்து கொள்ளக் கூடாது.

ஒரு முல்லைக்கொடி வளர வேண்டும் என்பதற்காகத் தன்னுடைய தங்கத் தேரையே நிறுத்தியவர் பாரி. ஒரு மயில் குளிரினால் நடுங்கி அவதிப்பட்டபோது அதற்குத் தன்னுடைய பட்டுப் பீதாம்பரத்தையே போர்த்தியவர் பேகன். அவர்களையெல்லாம் பைத்தியம் என்று நினைத்து விடக் கூடாது.

வரகுண பாண்டியன் பக்தி அதிகமாகப் போனதால் ஒரு சமயம் வித்தியாசமாக நடந்து கொண்டார். திருவிடைமருதூர் என்னும் ஓர் இடத்தில் எள் காய வைத்திருந்தார்கள். கோயிலுக்கு எண்ணெய் தயாரிப்பதற்காக அந்த சமயத்தில் அந்தப் பக்கமாக அங்கு வந்த ஒருவர் காயப் போட்டிருந்த எள்ளைப் பார்த்து என்னவோ நினைத்துவிட்டு அந்த எள்ளில் ஒரு கை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்.

அங்கே காவல் காத்துக் கொண்டிருந்தவர்கள் இதைப் பார்த்துவிட்டார்கள். சுவாமிக்கு உபயோகப்படுத்துவதற்காகக் காயவைத்த எள்ளை இப்படி வாயில் போட்டால் அது சிவ அபராதம்! எனக் கூறி அவரைப் பிடித்துக் கொண்டுபோய் வரகுண பாண்டியன் முன் நிறுத்தினார்கள்.

வரகுண பாண்டியன் அவரை நிமிர்ந்து பார்த்தான். அவனுக்கு மிகவும் ஆச்சரியமாகப் போய்விட்டது. ஏனெனில் எள்ளை அள்ளி வாயில் போட்ட அவர் நெற்றியிலே திருநீறு, உடம்பெல்லாம் பக்தி மயம். இப்படிப்பட்ட சிவபக்தரா இந்த சிவ நிந்தையைப் புரிந்தார். ராஜாவால் இதை நம்பவே முடியவில்லை. அதனால் மிகுந்த அன்புடன் அவரைப் பார்த்து ''தாங்கள் ஏன் இப்படியொரு காரியத்தைச் செய்தீர்கள்? என்று கேட்டார். அதற்கு அந்த சிவபக்தர் ''நான் பசியின் காரணமாக அந்தக் காரியத்தைச் செய்யவில்லை. இந்த ஊர் எனக்கு மிகவும் பிடித்தவிட்டது. சிவ அபராதம் செய்தால் ஏழு ஜென்மங்களுக்கு இந்தக் கோயிலுக்கு செக்கு இழுக்கிற மாடாகப் பிறப்பேன் என்பது எனக்குத் தெரியும். அதற்காகத்தான் அப்படிச் செய்தேன்'' என்று கூறினார்.

அந்த ஊரில் பிறக்க வேண்டும். அதுவும் செக்கு மாடாகப் பிறக்க வேண்டும். இந்த ஆலயத்தில் தொண்டு செய்ய வேண்டும். அதற்கு ஒரு தவறு செய்தால்தான் அது சாத்தியம் என்பதைப் புரிந்து கொண்டே அவர் அப்படிச் செய்திருந்தார். எத்தகைய பெரிய பக்தி.

வரகுணபாண்டியன் அவர் வாயைக் கொஞ்சம் திறக்கச் சொன்னார். அந்த சிவபக்தர் வாயைத் திறந்தார். அங்கே கூடியிருந்தவர்கள் எல்லோரும் '' ராஜா அவருடைய வாயைக் கிழிக்கப் போகிறார்'' என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் ராஜா அவர் வாயில் ஒட்டியிருந்த ஓர் எள்ளை எடுத்துத் தன் வாயில் போட்டுக் கொண்டார். அதற்குப் பின்னர் சொன்னார். ''நீங்கள் செய்த அபராதத்தை நானும் செய்துவிட்டேன். உங்களோடு சேர்ந்து நானும் செக்கு இழுப்பேன்'' என்றார். இதுதான் சான்றோர்கள் இயல்பு.

இப்படி பக்தியினால் தப்புச் செய்பவர்கள் அந்தக் காலத்தில் அதிகம். புத்தியில்லாமல் தப்பு செய்பவர்கள்தான் இந்தக் காலத்தில் அதிகம்.


ஓர் அரிசி ஆலையில் நெல் காய வைத்திருந்தார்கள். அதைத் திருடிவிட்டு ஒருத்தன் ஜெயிலுக்கு வந்தான். ஜெயில் அதிகாரிகளிடம் நன்றாகப் பழகி, தண்டனைக் காலம் முடிந்து விடுதலையாகி வெளியே போகப் புறப்பட்டான்.

போவதற்கு முன் சிறைச்சாலை அதிகாரி அவனைப் பார்த்து ''வெளியில் போய் என்ன செய்யப் போகிறாய்? என் றார். அதற்கு அவன் மறுபடியும் எங்கேயாவது நெல் காய வைத்திருந்தால் அதைத் திருடலாம் என்று இருக்கிறேன்'' என்றான். ஏன் நீ கொஞ்சங் கூடத் திருந்தவில்லையா?'' என்றார் அந்த அதிகாரி.

''திருந்திவிட்டேன்தான். இருந்தாலும் எப்போதும் உங்களுடன் இருந்து தொண்டு செய்ய வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. அதற்கு இதுதான் வழி'' என்றான் அவன்.

**கோ. சுவாமிநாதன்.**

# இளம் சமூகத்தை... சரியான முறையில் பயன்படுத்துவோம்



## இளம் துறவி சுவாமி ஜாக்கிரத்சைதன்ய

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள யாழ்ப்பாணம்-சுன்னாகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட சின்மயா மிஷன் நிறுவனத்தின் இலங்கையின் வடக்குக்கான வதிவிட ஆச்சாரியராக நியமிக்கப் பட்டுள்ள பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய சுவாமிகள் வட மாகாணம் முழுவதும் சின்மயா மிஷன் ஊடாக ஆன்மீகத்தோடு பல்வேறு சமய, சமூகப் பணிகளை மேற் கொண்டு வருகிறார்.

இவரை உதயன் பேட்டி கண்டது. அவருடைய கருத்துக்களை தொகுத்துத் தருகின்றோம்.

கே. சின்மயா மிஷன் பற்றிக் கூறுங்களேன்?

ப. பூஜ்யகுருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களால் 1951 ஆம் ஆண்டு இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் புனைநகரில் சின்மயா மிஷன் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியா, இலங்கை, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, லண்டன், பிரான்ஸ், கொங்கொங் உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்ட நாடுகளில் சின்மயா மிஷனின் கிளைகள் பரந்து ஆன்மீகப் பணியாற்றுகின்றன.

1979 ஆம் ஆண்டு சுவாமி சின்மயானந்தா இலங்கைக்கு வருகை தந்த போது சின்மயா மிஷன் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் ஆரம்பிக்கப்பட்டது.

1981 ஆம் ஆண்டு நாடாளுமன்றச் சட்டத்தில் அது பதிவு செய்யப்பட்டது. தற்போது வடக்கில் நானும் கிழக்கில் பெண் இளந்துறவி மஹிமா சைதன்யா, கொழும்பில் சைதன் சைதன்ய ஆகியோர் வதிவிட ஆச்சாரியர்களாக இருந்து ஆன்மீகப் பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

கே: இளம் வயதினிலே துறவியானமை பற்றி.....?

ப:எனது ஆரம்பக் கல்வியை உடுவில் மகளிர் கல்லூரியில் கற்று, உயர்தரக் கல்வியை யாழ்.இந்து கல்லூரியில் கற்று, பொறியியல் பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று, 2005 ஆம் ஆண்டு பொறியியலாளராக வெளியேறினேன்.

விஞ்ஞான ரீதியாகப் பல்வேறு கண்டுபிடிப் புக்களை மேற்கொள்ள வேண்டும் என்கின்ற ஆர்வம் சிறு வயதிலிருந்தே எனக்குள்ளே இழையோடிப் போய் இருந்தது.

இதன் பிரகாரம் கடவுள் உண்மையில் இருக்கின்றாரா? எங்கே இருக்கிறார்? நாம் இறந்ததின் பின்னர் எமக்கு என்ன நடக்கும்? என்கின்ற கேள்விகளும் இந்த வானத்தைப் பார்த்து, எனக்குச் சிறகுகள் இருந்தால் பறக்கும்போது இந்த வானம் எங்கு சென்று முடிகின்றது? என்ற கேள்விகளும் எழுந்தன. இவற்றை விஞ்ஞான ரீதியாக விடை தேடுவோம் என்று பௌதிகவியலில் இருக்கக் கூடிய உயர்ந்த தத்துவங்களாகிய ''குவான்டம்மெக்கானிக்ஸ்'', ''அணுகுண்டு தத்துவம்'' போன்றவற்றை முழுமையாகக் கற்றேன். ஆனால் அவற்றுக்கு விடை தேடமுடியவில்லை. இதன் பின்னர்தான் மெய்ஞ்ஞானத்தில் காலடி எடுத்து வைத்தேன்.

2005 ஆம் ஆண்டு பொறியியலாளர் பட்டத்தைப் பெற்று இந்தியாவிற்குச் சென்றேன். அங்கு சின்மயா மிஷனின் ''சாந்தீபணி சாதனாலயம்'' என்கின்ற துறவிகள் பயிற்சி நிலையத்தில் இரண்டு வருடம் குருகுலக் கல்வியை முறைப்படி கற்று 2007 ஆம் ஆண்டு பிரமச்சார்ய தீட்சா நாமம் பெற்று நவம்பர் மாதம் இலங்கை வந்தேன்.

2008 ஆம் ஆண்டு முதல் மலையகத்தில் நுவரெலியாவிலுள்ள ஸ்ரீ பக்தஹனுமான் ஆலயத்தில் தங்கியிருந்து கண்டி, மாத்தளை உள்ளிட்ட பல பகுதிகளுக்குச் சென்று ஆன்மீகக் கருத்துக்களை விதைத்து வந்தேன்.

தற்போது யாழ்ப்பாணத்தில் இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் இருந்து பணிகளை மேற்கொண்டு வருகிறேன்.

கே: சின்மயா மிஷன் ஊடாக இங்கு எத்தகைய பணிகளை முன்னெடுக்கிறீர்கள்?

ப: ஆன்மீகப்பணி, சமூகப்பணி ஆகியவற்றை முன்னெடுக்கின்றோம். இதில் ஆன்மீகப்பணி பாடசாலைகள் தோறும் மற்றும் ஆலயங்கள், பொது நிறுவனங்கள், திணைக்களங்கள் ஆகியவற்றிக்குச் சென்று மன அமைதி, நேரக் கட்டுப்பாடு, தலைமைத்துவம், குழுச்செயற்பாடு ஆகிய விடயப்பரப்பில் மக்களை ஈடுபடுத்தி வருகின்றோம்.

அத்துடன், மாலைநேர ஆன்மீக வகுப்புக்களை அளவெட்டியிலும் கொக்குவிலியிலும் நடத்தி வருகின்றோம்.

சமூகப்பணியாகத் தாய் -தந்தையை இழந்த பிள்ளைகளைத் தெரிவுசெய்து அவர்களுக்கு கற்றற் செயற்பாடுகளுக்கான உதவிகளைச் செய்வதோடு உளவள செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றோம்.

இவற்றால் சுமார் 60 குழந்தைகள் பயன்பெறுகிறார்கள். மற்றும் கணவனை இழந்த குடும்பப் பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்பு முறைகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, அவர்கள் இந்த சமூகத்தில் உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு ஆன்மீகக் கருத்துக்களையும் எடுத்துரைக்கின்றோம். இத்தகைய பணிகளைக் கொக்குவில் , தாவடி, உயரப்புலம், மீசாலை, சங்கத்தானை, கோண்டாவில், கிளிநொச்சி, தர்மபுரம் ஆகிய இடங்களில் மேற்கொண்டு வருகின்றோம். இனிவரும் காலங்களில் இதனை விஸ்தரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கே: நீங்கள் யாழ்ப்பாணத்தில் இத்தகைய பணிகளை மேற்கொள்வதன் நோக்கம்?

சந்திப்பு: **கவிநேசன்**

ப: 30 வருட காலமாக இங்கு இடம் பெற்ற யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால், அந்த யுத்தம் ஏற்படுத்திய காயங்கள் எம்மக்களின் மனங்களில் ஆறாத வடுக்களாக நீண்டு செல்கின்றன.

இப்போது அவர்களுக்குத் தேவையானவையெல்லாம் மன அமைதி மட்டும்தான் அந்த அமைதியை எவராலும் கொடுக்கமுடியாது. அமைதியை- ஆறுதலை- ஆன்மீகத்தால் மட்டுமே கொடுக்க முடியும் என்று நான் நம்புகின்றேன்.

அந்த நம்பிக்கையில் சிதைந்து சின்னாபின்னமாகியுள்ள எம் மக்களின் மனங்களில் ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை-நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு ஆன்மீகம் சார்ந்த இறை நம்பிக்கைக் கதைகள் மூலமும் வகுப்புக்கள் மூலமும் குழுச்செயற்பாடுகள் ஊடாகவும் மேற்கொண்டு வருகின்றோம்.

இதனூடாக நிச்சயமாக எமது மக்களின் மன்ங்களில் அமைதித்தென்றல் வீசும் என்ற நம்பிக்கை இறைசாட்சியாக என் மனதில் உள்ளது.

என்னால் முடிந்தவரை என் மக்களுக்கு எவ்வளவு பணியாற்ற முடியுமோ அவ்வளவு தூரம் என்னை முழுமையாக அர்ப்பணிப்பேன்.

கே: யாழ்ப்பாணத்தில் ஆன்மீகக் கருத்துக்களை இளம் சமூகம் பெரிதும் ஆர்வம் காட்டுவதில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறதே. இதைப்பற்றி உங்கள் கருத்து.....? நீங்கள் சென்ற இடங்களில் எப்படி ... ?

ப:எம்முடைய இளம்சமூகத்தினர் வழி தடுமாறுகிறார்கள்; ஆன்மீகத்தில் ஆர்வம் இல்லை. என்கின்ற குற்றச்சாட்டை நான் முற்று முழுதாக மறுக்கின்றேன். இளம் சமூகத்திடம் வாழ்க்கை வேறு ஆன்மீகம் வேறு என்கின்ற மாயையை உருவாக்கியிருக்கின்றோம்.

ஆன்மீகம் என்கின்ற போர்வையில் வெறும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் இளைய சமுதாயத்திடம் திணிக்கின்றோம்.

ஆன்மீகக் கருத்துக்களையும் அதனுடைய தத்துவங்களையும் அவர்களுக்கு ஏற்ற விதத்தில்-அவர்களை கவரும் வகையில்-எடுத்துச் சொன்னால் அவர்களை ஆன்மீகப் பாதைக்கு இழுத்து வரலாம்.

நான் சென்ற இடங்களில் சிறந்த முறையில் ஆன்மீகக் கருத்துக்களைச் இளைஞர்கள் ஆர்வத்துடன் செவிமடுத்து வருகிறார்கள் என்பதை அவர்களுடைய முக பாவனை எனக்குச் சொல்லியது. எதிர் காலத்தில் இங்கு ஒழுக்கம், ஆன்மீகம் இரண்டும் நிறைந்த எதிர்கால சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதில் எல்லோரும் ஒன்றுபட்டு பாடுபட வேண்டும்.

இளைய சமுதாயத்தினர் பயன்பட மாட்டார்கள் என்ற கருத்தை விடுத்து அவர்களை நாம் சரியாகப் பயன்படுத்தவில்லை என்பதுதான் என்னுடைய ஆதங்கம்.

இனிவரும் காலங்களில் அவர்களை சரியான பாதையில் முறையாகப் பயன்படுத்துவோம்-என்கிறார்.

## 37 அரச வைத்தியசாலைகளில் டெங்கு நோயைப் பாதுகாக்கும் பிரிவு

கொழும்பு,ஏப்.18

37 அரச வைத்தியசாலைகளில் டெங்கு நோயாளர் தொடர்பான பாதுகாப்புப் பிரிவுகளை நிறுவுவதற்குச் சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய மருத்துவ மனையொன்றுக்கு 50 லட்சங்கள் செலவில் அந்தப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

போதனா வைத்தியசாலைகள் மற்றும் மத்திய வைத்திய சாலைகள் ஆகியன உள்ளடங்கும் 37 மருத்துவமனைகளில் இந்தப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.

எதிர்காலத்தில் டெங்கு நோய் பரவும் ஆபத்தைக் குறைப்பதற்காகவே இந்த நட வடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது. (ச-22)

## இயற்கை அனர்த்த வதந்திகளை பரப்புவோருக்கு சட்ட நடவடிக்கை

கொழும்பு,ஏப்.18

இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் வதந்திகளைப் பரப்புவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் போலியான பதற்றத்தை ஏற்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அண்மையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் சுனாமி அனர்த்தம் தொடர்பில் வெளியிடப்பட்ட தகவல் காரணமாக நாட்டின் கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் பீதியடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிர்களைக் காவுகொள்ளும் இயற்கை அனர்த்தங்களால் மக்கள் பயத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கையில், இவ்வாறான பொய்ப் பரப்புரைகளால் மக்களை பெரும் அவதிக் குள்ளாக்குவது சட்டப்படி குற்றமாகும்.

சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தற்போதைய சட்டங்களில் போதிய அவகாசம் இல் லாத பட்சத்தில் புதிய சட்டங்கள் உருவாக்கப்படும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச)

# கூட்டு வாழ்க்கை நெறியைப் பின்பற்ற வரம் தந்த அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன்

ஒருநாள் சிறுவர்கள் மாந்தைகளை மேயத்துக் கொண்டிருந்தபோது ஒரு அழகான பெண் தலைவிரி கோலத்துடன் வந்து நிற்க சிறுவர்கள் உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டனர். அப்போது அருகே வந்து தனது தலையைக் காட்டினாள்.


தலை முழுவதும் கண்கள் இருக்கக் கண்டு பயந்து திகைப்புற்றனர். வந்த பெண்ணே 'நாச்சியார் ஆலயம்' என்று கூறிக் கொண்டு மறைந்துவிட்டார்.

இந்தச் சம்பவம் காட்டுத் தீ போல ஊரெல்லாம் பரவியது. இது அம்மன் கோயில் கொண்டு எழுந்தருள சித்தங் கொண்ட காட்சியின் வெளிப்பாடு என்பதை உணர்ந்த பெரியோர்கள் ஆலோசித்து அப்பகுதியில் ஆலயம் அமைக்க முடிவெடுத்தனர். குளக்கரையில் இருந்த சின்னத்தம்பி உமையாச்சிக்குச் சொந்தமான காணியில் 1824 ஆம் ஆண்டு பங்குனி மாத பூச நட்சத்திரத்தன்று பனையோலையால் வேயப்பட்ட சிறு ஆலயம் ஒன்றை அமைத்து அம்மன் விக்கிரகம் வைத்து நாச்சியார் கோயில் என்று அழைத்து வழிபாட்டுக்குரிய தலமாக்கினர்.

விவசாயத்தில் ஈடுபட்டு வந்த கிராம மக்கள் தங்கள் விளைநிலங்களின் விளைச்சலைக் கொண்டு பொங்கலிட்டும் அன்னதானமிட்டும் அனைவரும் கூடி அம்பாளுக்குப் படைத்து வருடந்தோறும் திருவிழாக்களை மகிழ்வுடன் கொண்டாடி வந்தனர். விவசாயச் செய்கைக் காலங்களில் வானம் பொய்த்த போது மகாமாரி அம்மனிடம் வேண்டி நீர்க்கஞ்சி காய்ச்சிக் காணிக்கையாக்கி மழைப்பொழிவைப் பெற்றுக் கொண்ட வரலாறுகள் பலவுண்டு.

வயலும் வயல் சார்ந்த இடமான மருத நிலப்பகுதிகளில் உள்ள கோயில்களின் திருவிழாக்கள் அறுவடைக் காலத்தை அடுத்துவரும் காலங்களில் கொண்டாடப்படும் நன்றியின் விழாக்களாகவே அன்று தொட்டு நடந்து வருகின்றன. அல்லும் பகலும், மழையும் வெயிலும் காய்ந்து உழவுத் தொழிலாய் பெற்ற உயர்வின் மகிழ்ச்சிக்கு நன்றியாகவும் நீண்ட தொழிற்பாட்டுக்குப் பின் கிடைத்த ஓய்வு நாள்களை இறைவனோடு ஒன்றித்துக் கழித்து நற்பேறு அடையும் ஆன்மீகப் பாதையைச் செம்மைப்படுத்தவும் பக்தி உணர்வுடன் தமது இஷ்ட தெய்வங்களுக்கு விழா எடுப்பது தமிழர்களின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்ததாகும். அவ்வாறே ஓலைக் கோயிலில் குடிகொண்ட மஹா மாரி அம்மனையும் தங்கள் பாதுகாவலாளியாகப் பல்லாண்டுகள் வழிபட்டு ஆலயத்தைப் பராமரித்து வந்தனர் இந்த அரியாலை மக்கள்.

மாரிபோல அருள்வளங்களை அள்ளி வழங்கிவரும் அம்மனின் ஆலயம் சிறிதாகவும் வழிபடுவோருக்கு ஏற்ற வசதிகள் குன்றியும் இருப்பதைக் கண்ணுற்ற மக்கள் கற்கள் கொண்டு பெரிய அளவிலான ஆலயம் கட்ட விருப்பம் கொண்டனர். ஊர்ப் பிரமுகர்கள், பொது மக்களின் உதவி ஒத்தாசையுடன் கற்கோயில் கட்டும் பணி ஆரம்பமானது. ஆரம்பகால ஆலயத்துக்குப் பின்புறமாக ஸ்தூபி, மூலஸ்தானம், மண்டபம், மடப்பள்ளி, கிணறு ஆகியன அமைக்கப்பட்டன. புன்னை மரத்தடியில் வைரவர் சூலம் நாட்டப்பட்டது. கருங்கல்லினால் அம்பாளுக்குச் சிலை உருவாக்கிப் பிரதிஷ்டை செய்யப்பட்டுச் சகல



ஆகமக் கிரியைகளுடன் 1924 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. அன்றிலிருந்து நாச்சிமார் ஆலயம் என அழைக்கப்படலாயிற்று

இந்தக் கோயில் ஆரம்பமான காலந் தொட்டு காணியை அன்பளிப்புச் செய்த சின்னையா சின்னத்தம்பியின் வழிவந்தோரே ஆலயத்தைப் பராமரித்து வந்தனர். சின்னத்தம்பி- உமையாச்சியைத் தொடர்ந்து அவர்களின் பிள்ளைகளான சி.அருணாசலம், சி.இராமநாதன் ஆகியோர் 1965 ஆம் ஆண்டுவரை பராமரித்து ஆலயத் தேவைகளை நிறைவேற்றி வந்தனர்.

கோயில் முகாமையாளராகப் பொறுப்பு வகித்து வந்த சி.அருணாசலத்திடம் வழிபடுவோர் விடுத்த வேண்டுகோளுக்கமைய 30.07.1965 இல் அமைப்பு ரீதியாகப் பரிபாலன சபை உருவாக்கப்பட்டது. செயலாளராக வீ.கதிரவேலும், நா.நடராசா பொருளாளராகவும் செயற்பட்டனர். இந்த நிகழ்வு கோயில் நிர்வாக வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியது.

குறிப்பிட்ட சிலரின் நிர்வாகத்தில் இருந்து ஜனநாயக முறையிலான

**தொகுப்பு:யேசுதாஸ்**

தெரிவில் பலதரப்பட்டவர்களும் அதாவது உயர் தொழில் வகிப்போர், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் இடம்பெற்றமை ஆலயத்தின் பெருவளர்ச்சிக்கு அடிகோலியது.

(தொடரும்)

# உயிர்ப்பு ஞாயிறு காலங்களில் கொழும்புத்துறையில் இளைஞர்-சம்சாரிகளுக்கு சினேகபூர்வத் துடுப்பாட்டம்

மனிதனின் ஆற்றல்கள், திறமைகளை வெளிக்கொணரும் களமாகவும் உடல் ஆரோக்கியத்தைப் பேணி உறுப்புக்களின் சீரான தொழிற்பாட்டை விருத்திசெய்யும் துணைவனாகவும் விளையாட்டுத்துறை விளங்குகிறது. சமூக நல்லுறவுக்கும் ஒருமைப்பாட்டுக்கும் கைகொடுத்து நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளவும் விளையாட்டுப் போட்டிகள் உதவுகின்றன.

பாடசாலை, கிராமிய, பிரதேச, மாகாண, மாவட்ட, தேசிய மட்டங்களில் இன, மொழி, கலாசாரங்களை வெளிப்படுத்தும் வகையிலும் பாரம்பரியங்கள், தொன்மைத் தன்மை வாய்ந்த விளையாட்டுக்கள், கீழைத்தேய, மேலைத்தேய விளையாட்டுக்கள் என்பன போட்டி அடிப்படையில் நடத்தப்படுகின்றன.

விசேட விதமாகச் சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் தத்தமது கிராமங்களில் ஆண்டு விழாக்கள், பண்டிகைக் காலங்களில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி சிறுவர்கள், இளைஞர், யுவதிகளின் ஆளுமை, சமூக அக்கறை, சகிப்புத்தன்மை என்பவற்றை வளர்த்து வருகின்றன.

தமிழர் பிரதேசங்களில் பண்டைக் காலம் முதல் கிராமிய வளங்கள் தொழில்கள் கலை,கலாசாரங்களுடன் தொடர்புடைய பல போட்டிகள் நடைபெற்று வந்தன. அவற்றில் சில இன்றும் கூட சுவாரசியமாக நடைபெறுகின்றன. இந்த விளையாட்டுக்களில் நால்வகை நிலங்களான மருதம், முல்லை, நெய்தல், குறிஞ்சி நிலங்களுக்கென தனித்துவமான வெவ்வேறு பாரம்பரிய



போட்டிகள் அவ்வப் பிரதேச மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளித்தட்டு, வழுக்கு மரம் ஏறுதல், கிட்டி அடித்தல், பானை உடைத்தல், தலையணைச் சண்டை, மாட்டு வண்டிச் சவாரி, அம்பு எய்தல், சடுகுடு, சிலம்படி, வாச் ஓட்டம், கெந்தி அடித்தல், போர்த்தேங்காய் உடைத்தல், கிடுகு பின்னுதல், கயிறு திரித்தல், கயிறு இழுத்தல், கோலம் போடுதல், நீச்சல், படகோட்டம், பட்டம் ஏற்றுதல் போன்ற பல போட்டிகள் மண் வாசனையைப் பிரதிபலிக்கும் வண்ணம் பன்னெடுங்காலமாகப் பண்டிகைக் காலங்களையொட்டி நடத்தப்படுகின் றன.

அதேபோன்று மேலைத்தேய நாடுகளால் அறிமுகம் செய்யப்பட்ட உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிரிக்கெட் ஆட்டம் போன்ற போட்டிகளும் பெருமெடுப்பில் பல இடங்களிலும் நீண்டகாலமாக போட்டி அடிப்படையிலும் சிநேகபூர்வமாகவும் இடம்பெற்று வருகின்றது. இந்தப் புத்தாண்டு, உயிர்ப்பு ஞாயிறு காலங்களில் பரவலாக இந்தப் போட்டிகளில் இளையோர் பங்குபற்றி மகிழ்வைப் பரிமாறுவர்.

இதேபோன்று கொழும்புத்துறைக் கிராமத்தில் செபமாலை அன்னை ஆலய மக்களும் உயிர்ப்பு ஞாயிறு தினத்தன்று இளைஞர்- சம்சாரிகளுக்கிடையிலான சினேகபூர்வ கிரிக்கெட் துடுப்பாட்டப் போட்டியைச் சுமார் அரை நூற்றாண்டு காலமாக நடத்தி வருகிறார்கள். அன்றைய தினம் கிராமமே களைகட்டி மகிழ்ச்சியுடன் காணப்படும்.

தமது பிள்ளைகள், கணவர், சகோதரங்கள், உறவுகள் வயது வேறுபாடின்றிப் போட்டிபோடும் சுவாரசியமான நிகழ்வைக் கண்டு களிக்க கிராம மக்கள் அனைவரும் கூடிவருவர்.

மகன் பந்து வீச தந்தை எதிர்கொள்வதும் அண்ணன் தம்பியை வீழ்த்துவதும், சிறார்கள் மேள, தாள ஒலியெழுப்பித் தமது ஆதரவை வெளிப்படுத்தும் இனிமையான காட்சிகளாகும். இயேசு மனித குலத்தின் மீட்புக்காகப் பாடுகள் மரணத்தை ஏற்று சாவை வென்று உயிர்த்தெழுந்து என்றும் வாழும் உயிருள்ள இறைமகனாகக் காட்சி தந்த மகிழ்வை அன்பை பிறருடன் பகிர்ந்து வாழ்த்துக்களைப் பரிமாற வாய்ப்பை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தை இந்தப்போட்டி வழங்குகிறது.

அயற்கிராமம் ஒன்றில் சம்சாரிகள்- இளைஞர்களுக்கிடையில் நடைபெற்ற துடுப்பாட்டப் போட்டியொன்றைப் பார்த்துவிட்டு வந்த ப.பொனிப்பாஸ் என்பவர் ஊர்ப் பெரியவர்களை இணைத்து வழங்கிய ஆலோசனையும் ஊக்கமுமே இந்த விளையாட்டை 1963 ஆம் ஆண்டு கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய வளாகத்தில் ஆரம்பிக்க காரணமாக அமைந்தது. அப்போதைய இளைஞர்கள் கிரிக்கெட்டை ஆடி வந்த போதிலும் திருமணமான ஆண்களை இணைத்து போட்டி முறையில் ஆடும் வழக்கம் 1963ஆம் ஆண்டில் இருந்தே ஆரம்பிக்கப்பட்டது.


அப்போது ஆலய பங்குத் தந்தையாக இருந்த போலந்து நாட்டைச் சேர்ந்தவரான அருட் திரு வசன்பேர்க் O.M.I அடிகளாரின் முழு ஆதரவுடன் உயிர்ப்பு ஞாயிறு தினத்தன்று முதன் முதலாக மென்பந்து கிரிக்கெட் போட்டி ஆரம்பமானது.


(தொடரும்)

# கரவெட்டி நுணுவில் குளக்கட்டு விநாயகர் ஆலயம்

## புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக

### சிறப்புமலர் - 18.04.2011 திங்கட்கிழமை





*யாழ்ப்பாணத்தின் வடபுலத்தின் பாகமாய் வீரமும், விவேகமும் விளை நிலமும் விரிந்தோங்கும் வடமராட்சிப் பதியிலே சைவமும் தமிழும் சமய அனுட்டானமும் புராணபடல நியமமும் சிறப்புற்றோங்கி மிளிர்கின்ற கரவெட்டி துன்னாலை பதிகள் முதன்மையானவை. நிறைந்த ஆலயங்களும் தடாகங்களும் (குளம்) இவ்விரு ஊர்களின் பொக்கிஷங்கள். அவற்றில் கரவெட்டியில் பிரசித்தி பெற்ற நுணுவில் குளக்கட்டு விநாயகர், தச்சன்தோப்பு பிள்ளையார் யாக்கரு வரசித்தி விநாயகர் கீழ்கரவை கிழவிதோட்டம் விக்ன விநாயகர் ஆலயங்கள் முதன்மையானவை. அந்த வகையில் மிகவும் புராதனமான பழமைவாய்ந்த நுணுவில் குளக்கட்டு விநாயகர் ஆலய (ஸ்ரீ சித்தி விநாயகர்) புனராவர்த்தன திருப்பணி வேலைகள் சிறப்புற நடைபெற்று மஹா கும்பாபிஷேக பெருவிழாவை 18.04.2011 இன்று காண்கிறது. கோயில்கள் பற்றிய பதிவேட்டில் (பக்கம் 321) துன்னாலை வீரசுந்தர முதலியார் குறிச்சிக்குரிய கோயில் வரிசையில் 123 ஆம் இலக்கத்தில் இக்கோயில் பற்றிய விவரங்கள் பதியப்பட்டுள்ளன. அதன்படி இக்கோயிலுக்கு உரிய நிலம் 1830 ஆம் ஆண்டு சிதம்பரநாதர், கைலாயர் வேலர், கதிகாமர் ஆகியோரால் பகிரங்க நன்கொடையாக வழங்கப்பட்டதென்றும் இதற்கு முகாமையாளர் கைலாயர் சிதம்பரநாதர் கதிர்காமர் வேலர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓர் ஆலயத்துக்கு உரிய அழகிய இயற்கை சூழல் பூரணமாக பொழிந்து இருக்கும் சிறப்பு. இந்த ஆலயத்திற்கே உரிய தனித்துவமாகும். ஆலயத்தை சூழ்ந்த நெல் வயல், வில்வம், அரசு, கடம்பு போன்ற தெய்வத் தல விருட்சங்கள், திருக்குளதடாகம் எந்த ஆலயத்திலுமே இல்லாத தனித்துவச் சிறப்பாய் மூலமூர்த்தியின் நேர்பார்வையில் ஆலயச் சூழலை அழகுநிலைப்படுத்துகின்ற அற்புதங்களாக அமைகின்றன.*

*இவ்வாலயத்தின் மேற்குபுற பகுதியிலே ஸ்ரீவேதநாத ஈஸ்வரர் எனும் சிவாலயம் அமைந்திருந்தது. இதனை அக்காலம் இங்கு வந்த மிசனரிமார் அழித்து கட்டைவேலி 'மெதடிஸ் மிசன்' பாடசாலையையும் கிறிஸ்தவ தேவாலயத்தையும் அமைத்தனர் என்று அறியப்படுகின்றது. அதற்கான ஆதாரம் இன்றும் கட்டைவேலி மெதடிஸ்மிசன் பாடசாலையில் உள்ளது. கோயிலுக்கு முன் உள்ள குளத்தை ஆழமாக்கி துப்புரவு செய்தபோது அதிலிருந்து காது அறுந்த நிலையில் ஒரு பிள்ளையார் சிலை எடுக்கப்பட்டு அதில் ரத்தம் சிந்துகின்ற நிலைகண்டு அதை அத்துளு குளத்தில் கொண்டு சென்று போட்டதாகவும் அதன் பின்னர் வவுனிக்குளத்திற்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இங்கிருந்து சென்ற மக்கள் அங்கு ஒரு விநாயகர் ஆலயம் அமைக்க எண்ணி அத்துளு குளத்தில்போடப்பட்ட விநாயகரின் திருவுருவச் சிலையை கடின முயற்சியின் பின்னர் எடுத்து வவுனிக்குளத்தில் பிரதிஸ்டை செய்தனர் என்பது கர்ண பரம்பரை கூற்றாய் அறிகின்றோம். மிகப்பழமை வாய்ந்த நுணுவில் குளக்கட்டு ஸ்ரீ சித்தி விநாயர் ஆலயம் இன்று பூரணமான ஆகம நெறிகளுக்கு உட்படுத்தப்பட்ட ஆலயமாய் மிளிர்கின்றது. 1921 ஆம் ஆண்டு இவ்வாலயத்திற்கு அமைக்கப்பெற்ற சித்திரத்தேர் இன்றும் வைகாசி விசாக நன்னாளில் நடைபெறுகின்ற தேர் உற்சவத்தில் பவனி வருகின்றது. இவ்வாலயத்தின் பரம்பரை ஆதீன குரு அர்ச்சப் பணியை இந்தியாவிலிருந்து வந்த சிவத்திரு வேதையர் சிவத்திரு கண்ணப்பர் சந்ததியின் தொடராக சிவத்திரு தியாகராஜக் குருக்கள், சிவத்திரு சுப்பையாக் குருக்கள் போன்றோர் நீண்டகாலம் ஆற்றி தற்போதும் அவர்களின் சந்ததி தொடராய் சிவத்திரு லோகநாதக் குருக்கள், சிவத்திரு வேதமூர்த்திக் குருக்கள் ஆகியோர் சிறப்புற மேற்கொள்கின்றனர். தொடர்ந்து 5 முறைக்கு மேல் புனருத்தாரண மஹா கும்பாபிஷேகங்களை ஆலயம் கண்டபோதிலும் இவ்வருடம் ஆலயத் திருப்பணிகள் மிகச்சிறப்பாகச் செய்யப்பட்டு புதிய ஆலயங்களாக மகாலட்சுமி, பஞ்சமுகவிநாயகர் அமைக்கப்பெற்று அழகிய சிற்ப வர்ண திருப்பணிகள் மேலோங்கச் செய்தும் துன்னாலை சாரதாபீடம் சமஸ்கிருத குருகுல அந்தண சிரேஸ்ட சிவாச்சாரியார் சந்ததியின் வழித்தோன்றல் 'பிரதிஸ்டா' ஞானி கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள் தலைமையில் 25 இற்கும் மேற்பட்ட சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிக்கும் இக்கும்பாபிஷேக பெருவிழாவானது அனைவர் மனதிற்கும் ஆனந்தம் தருகின்ற அற்புத நிகழ்வாகும். இச்சந்தர்ப்பத்தில் 14.04.2011 கர வருஷப் பிறப்பன்று ஆரம்பமாகிய கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் 18.04.2011 கும்பாபிஷேக நன்நாள் வரை காலை, மாலை இருவேளை வேத, மந்திர, நாத, கீத, வாத்திய, திருமுறைப் பாராயணங்களோடு சிறப்புற நடைபெறுகின்றன. இந்த மகிழ்ச்சியான தருணத்திலே ஆலயகுருமார், கும்பாபிஷேக பிரதம குரு மற்றும் சிவாச்சாரியார்கள், மங்கல வாத்தியக் கலைஞர்கள், அறங்காவலர்கள், நிர்வாகசபை நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் வாரி வழங்கிய வெளிநாட்டு நமது ஊர், மக்கள் தொண்டர்கள், ஊக்கம் தந்தவர்கள் மற்றும் சகல வழிகளிலும் தொண்டும் உதவியும் ஊக்கமும் வாழ்த்தும் கொடுத்த கொடுக்கின்ற அனைவருக்கும் கணபதியின் கருணைக் கடாட்சம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.*

**'குளக்கட்டு விநாயகர் குவலயம் காக்கட்டும்'**

### கும்பாபிஷேகப் பிரதிஷ்டா குருவின் ஆசி



ஆலயம் ஆன்மாக்கள் லயப்படும் அற்புதக் கூடம். இங்கே அருஉருவத் திருமேனியாக இறைவனைப் பிரதிஸ்டை செய்து சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நாற்பாத நிலைகளையும் பெற்று ஆன்ம ஈடேற்றம் அடைகின்றோம். அந்தவகையில் அருவுருவ திருமேனிக்கு அருட்சக்தியை கொடுக்கின்ற யந்திரம், அஷ்ட பந்தனம், தூலலிங்கம் (தூபி) என்பன பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் ஸ்பரிச ஆகர்ஷண சக்தியை வலுக்கச்செய்து அருட்பூரணத்துவத்தைக் கொடுக்கவேண்டும் என்பது ஆகமநியதி. அதற்கு அமைய கரவையம்பதி நுணுவில் குளக்கட்டு ஸ்ரீ சித்திவிநாயக பெருமான் ஆலயம். பாலாலயம் செய்யப்பட்டு புனருத்தாரண பணிகள் மேற்கொள்ளப்பட்டு கருவறை கோபுரம் த்விதளமாக அமைக்கப்பெற்று புதிய மஹாலட்சுமி ஆலயம், ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் ஆலயம், அமைக்கப்பெற்று நாகதம்பிரான் முருகன், நவக்கிரஹம், வைரவர்தம்பம் மூஷிக பலிபீடம், ஸ்தம்ப கணபதி, வசந்தமண்டபம் என்பன வர்ண வேலை அலங்காரத்தாலும் மேற்கூரைகள் அலங்கார வளைவுகளாலும் மிகவும் சிறப்புற பூரணப்படுத்தி புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா 18.04.2011 அன்று சித்திரை மாத சித்திரை நட்சத்திர நன்னாளிலே விண்ணவரும் மண்ணவரும் போற்று பிரணவப்பெருமூர்த்தியாம் குளக்கட்டு ஸ்ரீ சித்திவிநாயகர் கும்பாபிஷேகம் நடைபெறும் தருணத்திலே மனிதப் பிறப்பின் மேன்மையை நிலைப்படுத்திட ஐம்புலன்களினாலும் இந்தக் காட்சியை கண்ணுற்று செவிமடுத்தி உணர்ந்து செயற்படுத்தி தொண்டாற்றி வாழ்வியல் பூரணங்கள் பெறுவோம், மகிழ்வோம். இப்பெரும் கைங்கரிய நிகழ்வை சிரமேற்கொண்டு செயற்படும். குருமார்கள், நிர்வாக உறுப்பினர், அறங்காவலர், தொண்டர்கள், கொடை வள்ளல்கள், சிற்பக்கலைஞர்கள், கிராம மக்கள், இசைக்கலைஞர்கள், ஊக்குவிப்பாளர்கள் அனைவருக்கும் ஆனைமுகன் அருள் நிறைவாகக் கிடைக்கும். சித்திகள் பலவும் நமைச்சார்ந்திட சித்தி விநாயகர் பாதம் தொழுவோம்.

*பிரதிஷ்டா குரு*

**துன்னையூர் ராம் தேவலோகேஸ்வரக் குரு**

### ஆன்மீக மனநிறைவை தருக்கின்ற அற்புதமான நிகழ்வு



நுணுவில் குளக்கட்டு விநாயகரின் திருவருளானது அனுபவரீதியாக நாம் கண்டு உணர்ந்து பூரித்து மகிழ்கின்ற விடயங்களை செயல்வடிவமாக்கி பூரணப்படுத்துபவர் நமது விநாயகப் பெருமான். பாலஸ்தாபனம் செய்து பதினொரு மாதங்கள் பூர்த்தி அடைவதற்குள் இவ்வளவு திருப்பணி வேலைகள் எல்லாம் செய்து இன்று (18.04.2011) மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது என்றால் எல்லாம் விநாயகப் பெருமானின் திருவருள்தான். இன்று நடைபெறுகின்ற இந்த மஹா கும்பாபிஷேகம் ஆலயத்தை புதிய பொலிவிலே கண்முன் காட்சியமைத்து நிறுத்துகின்றது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த மஹாகும்பா பிஷேகம் ஆனது முழுமையான திருவருளை அடியார்களுக்கு கொடுக்கும். ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் மஹாலட்சுமி நூதன பிரதிஸ்டையாக ஆலயத்திலே அமைய இருக்கின்றது. லக்ஷ்மி வாசம் செய்யும் இடம் லக்சுமி கடாட்சமாக அமையும். எனவே, ஆலய பரிபாலசபையினருக்கு ஆலயத்தைச் சார்ந்த அடியார்கள் அனைவருக்கும் ஸ்ரீ நுணுவில் குளக்கட்டு விநாயகர் பூரணமான நல்ல திருவருளை கொடுப்பார் என்பதில் ஐயமில்லை. நமது வாழ்வில் கும்பாபிஷேக பெரும் சாந்தி விழாக்கள் ஆன்மீக மன நிறைவைத் தருக்கின்ற அற்புதமான நிகழ்வுகளாகும். அனைவருக்கும் ஐங்கரப் பெருமான் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து மனநிறைவான ஆசிகளை வழங்கி மகிழ்கின்றேன்.

**சிவஸ்ரீ சிதம்பர லோகநாதக் குருக்கள்,**
**நுணுவில் குள்க்கட்டு விநாயகர்**
**தேவஸ்தான பிரதம குரு, கரவெட்டி.**


### விழாச் சிறப்புற வாழ்த்துவோர்

**அனுசியா மணப்பந்தல் சேவை**
நுணுவில் வீதி, கரவெட்டி.
தொ.பே: 0779599419

**அன்பு பல்பொருள் வாணிபம்**
கொடிகாமம் வீதி, கோயில் சந்தை.

**பாலன் மில்**
நுணுவில் வீதி, கரவெட்டி.

**தேவன் ஸ்ரோர்ஸ்**
சாவகச்சேரி வீதி, துன்னாலை

**கஜமுகன் ஹாட்வெயர்**
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே: 0773211276

**திருவருள் ஸ்ரோர்ஸ்**
தாமரைக் குளத்தடி, துன்னாலை.
தொ.பே: 0772879436

***Shriraam Civil Engineering Construction***
Transport Service & Materials Suppliers
No.64, School Lane, Kaddaivelly, Karaveddy.
T.P: 0777697185

***K.N.S. Construction & Materials Suppliers***
Pointpedro Road, Malusanthy, Karaveddy.
T.P: 0772241773

**மணியம் ஸ்ரோர்ஸ்**
கோவில் சந்தை, கரவெட்டி

**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
கோயில் சந்தை, கரவெட்டி.
தொ.பே: 0772208452

**கணேச ரவல்ஸ்**
கோயிற் சந்தை, கரவெட்டி
தொ.பே: 021 321 8576

**சக்தி தொலைத்தொடர்பகம்**
தாமரைக் குளத்தடி, துன்னாலை.
தொ.பே: 021 226 4697

# இரு தசாப்தங்களுக்குப் பின் மீள்குடியமர்வு காணும் குரும்பசிட்டிக் கிராமம்

*(16 ஆம் திகதிய தொடர்ச்சி)*

ஒவ்வொரு வருடமும் அடுத்தவருடம் கிராமத்துக்குச் செல்வோம் என்ற எதிர்பார்ப்புடன் இருபது வருடங்களைக் கழித்துவிட்ட மக்களுக்கு அண்மைய சில மாதங்களுக்கு முன்பாக வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தைக் கல்வி நடவடிக்கைகளுக்காக விடுவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை சிறிது நம்பிக்கையை ஊட்டுவதாக அமைந்ததெனலாம்.

இந்த நம்பிக்கைகளுக்கு வலுச்சேர்ப்பது போன்று உயர்பாதுகாப்பு வலய அரண் உள்நகர்த்தப்பட்டமையானது கிராமத்தின் ஒருபகுதியில் காலடிவைக்கக்கூடிய சந்தர்ப்பத்தை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இருபதாண்டுகளுக்கு முன் தாம் நடமாடிய கிராமத்தின் வீதிகளையும் கட்டடங்களையும் மனத்தில் நிறுத்தி அதற்கு மேல் சிந்திக்க முடியாதவர்களாக விடுவிக்கப்பட்ட கிராமத்தின் சிறுபகுதிக்குள் காலடிவைத்தவர்களுக்குத் தமது இருப்பிடங்களையோ நடமாடிய வீதிகளையோ இனங்காண முடியாதளவுக்கு கிராமத்தின் சிதைவுகள் தடுமாற்றத்தைக் கொடுத்தன.

என்றாலும் கூட முதலாவது இடப்பெயர்வின் பின்னர் கிராமத்தை மீளக் கட்டியெழுப்பும் பணியில் கிராம மக்களும் பொதுப்பணி மன்றங்களும் எந்தளவுக்கு முனைப்புடன் செயற்பட்டார்களோ அதேயளவுக்கு இன்றும் தளராத உறுதியுடன் கிராமத்தின் மீள்கட்டுமானப் பணிகளுக்குத் தயாராகக் கைகோர்த்து நிற்கின்றனர்.

ஏறத்தாழ 50 இலிருந்து 55 வயதுக்கு மேற்பட்ட வயதினர்தான் அன்றைய கிராமத்தின் அடையாளச் சின்னங்களை இனங்காணக்கூடியவர்களாக உள்ளனர். இவர்களின் வழிகாட்டல்களுடன் தமது பூர்வீக நிலபுலன்களை இனங்காணவும் மீள சீரமைத்துக் கொள்ளவும் பின்னால் நிற்கும் இளம்பரம்பரையினரின் பங்களிப்பு மீள்க்குடியமர்வு நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக அமைந்துள்ளன.

இந்தக் கிராமம் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசங்களைக் கொண்டதாகும். ஆனால், தற்போது விடுவிக்கப்பட்டுள்ள பகுதியானது ஒரு கிராம அலுவலர் பிரிவில் (ஜே/243) மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைவான பிரதேசமாகும்.

ஆனால், தற்போது விடுவிக்கப்பட்டுள்ள சிறுபகுதி எந்தவித அடிப்படைத்தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ளவோ அன்றிக் கிராமம் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டுவதற்கோ போதுமான பிரதேச நிலப் பரப்புக்களைக் கொண்டிருக்காமை வேதனைக்குரியது.

இருபது வருடங்களாக அகதி வாழ்க்கையையே நிரந்தர வாழ்க்கையாக்கிக் கொண்ட இந்த மக்களின் பிள்ளைகளினது கல்வி வசதிகள் மக்களின் வைத்திய சாலைத் தேவைகள் போன்ற அடிப்படைத் தேவைகள் யாவும் தற்போது இவர்கள் வாழ்ந்து வரும் இடங்களிலேயே பிணைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் இந்த வசதிகளுக்காக மாற்று வழிகளைத்தானும் ஏற்பாடு செய்யாமல் இவர்களை மீளக்குடியமரச் செய்தல் என்பதும் ஏற்புடைய விடயமல்ல.

இவ்வாறானதொரு விடுவிப்பு நடவடிக்கைகள் கிராம மக்களாலும் கிராமத்தில் நிலைத்து நிற்கும் பொதுப் பணி மன்றங்களாலும் மிகவும் வேத னையையும் பாதிப்புக்களையும் தரும் நடவடிக்கைகளாகக் கருதப்படுகின்றன. முள்பற்றைக் காட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் தம் சொத்துக்களை மீட்டிடப் பாடுபடும் மக்கள் தொடர்ந்தும் முட்கம்பி வேலிகளுக்குள் வாழும் மனோ நிலையில் வாழ விரும்பவில்லை என்பதே யதார்த்தமாகும்.

தற்போது விடுவிக்கப்பட்டுள்ள கிராமத்தின் இந்தச் சிறு நிலப்பரப்புக்களுக்குள் அடங்கும் வாழ்விடங்களுக்குரியவர்கள் தமது சிதைவுற்ற இல்லங்களைத் துப்புரவுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். பொதுப் பணிமன்றங்கள் என்ற ரீதியில் குரும்ப சிட்டிக் கிராம அபிவிருத்திச் சங்கம் இந்த நடவடிக்கைகளுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கி வருவதுடன், இந்த நடவடிக்கைகள் தொடர்பாக தேவையான விவரங்களையும் வேண்டு கோள்களையும் அவ்வப்போது பிரதேச செயலகம் மற்றும் மேல்மட்ட நிறுவனங்களுக்கு வழங்கிவருகின்றது.

இந்த மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்கு மக்களின் உணர்வுகளை மதித்து உடனுக்குடன் தேவையான ஆலோசனைகளையும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் வலி.வடக்கு பிரதேச செயலர் மற்றும் அரச அதிபரும் மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் துப்புரவாக்கல் பணிகளைப் பொறுத்த வரையில் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்காகப் போக்குவரத் துப் பாதைகளைச் செப்பனிடல், குழாய்க் கிணறுகள் மூலமாக குடிதண்ணீர் வசதிகளை

**அருண் சக்தி,** குரும்பசிட்டி

மேற் கொள்ளல், மலசல கூடங்களைச் சீரமைத்தல் என்பன உடனடித் தேவைகளாக இனங்காணப்பட்டுள்ளன.

குரும்பசிட்டிக் கிராமத்தில் ஒரு பூரணத்துவமான மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு வசதியாக கிராமத்தின் கணிசமான நிலப்பிரதேசங்கள் விடுவிக்கப்பட வேண்டும். இதற்காகப் பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காகவும் அரச நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசியல் கட்சிகள் என்பன தம்மாலான பங்களிப்புக்களையும் கரிசனைகளையும் காட்ட வேண்டும் எனக் கிராம மக்களும் பொதுப் பணிமன்றங்களும் கோரிக்கைவிடுக்கின்றன. *(முற்றும்)*

# பிறந்திருக்கும் 'கர' வருடம் - 2011 உங்களுக்கு எப்படி..?




பிறந்திருக்கும் கர ஆண்டில் உங்களின் சஷ்டம ராசியான ஆறாம் ராசியில் சஞ்சரிக்கும் குரு பகவானால் சுறுசுறுப்புடன் பணியாற்றுவீர்கள். உடல் சோர்வு முற்றிலும் மறையும். வருமானம் சீராகவே இருக்கும் என்றாலும் பேராசைக்கு இடம் கொடுக்காமல் பணியாற்றவும். நண்பர்கள் போல் பழகும் விரோதிகளிடம் கவனமாக இருக்கவும். அவர்கள் உங்களுக்கு எதிராகச் சில சமயம் சதி வேலைகளில் ஈடுபடலாம். ஆனாலும் கலங்க வேண்டாம். யாராக இருப்பினும் நன்கு யோசித்த பிறகே வாக்குக் கொடுக்கவும். கடன் தொல்லைகள் ஏற்படாது. தர்ம காரியங்களைச் செய்வீர்கள். தடங்கல்களைத் தாண்டி வெற்றியடைவதில் ஐயமேயில்லை. அனுகூலமில்லாத விடயங்களையும் உங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ளும் புத்தி சாதுர்யம் ஏற்படும். கடினமான சூழ்நிலைகளிலும் உங்களின் தனித் தன்மையை இழக்க மாட் டீர்கள். அடுத்தவர்கள் உங்களுக்கு அறிவுரை கூறும்படி நடந்து கொள்ள மாட்டீர்கள். நீண்ட தூரப் பயணங்களால் நன்மை உண்டாகும். கடுமையாக உழைத்துச் செய்யும் காரியங்களில் வெற்றிவாகை நிச்சயம்.

தார்மீகச் சிந்தனைகளை மேலோங்கும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். உங்கள் உழைப்பு வீண் போகாது. தேக ஆரோக்கியம் சீராக மாறும்.தாய் வழியில் இருந்துவந்த மன ஸ்தாபங்கள் மறைந்து சுமுகமான உறவு உண்டாகும். குடும்பத்திலும், உற்றார் உறவினர்களிடமும் உங்கள் செல்வாக்கு உயரும். வருடத்தின் ஐப்பசி மாதம், 28 ஆம் திகதிவரை லாப ஸ்தான ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவானால் உங்கள் செயல்களைப் புதிய உத்வேகத்துடன் செய்து முடிக்க வழி பிறக்கும். திட்டங்களைச் சரியாகத் தீட்டி அவைகளைப் படிப்படியாக, வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்; புதிய தொழில் களைத் தொடங்குவீர்கள். உங்கள் நண்பர்கள் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார் கள். பெரியோர்களின் ஆதரவு எப்போதுமிருக்கும். ஐப்பசி மாதம், 29ஆம் திகதியிலிருந்து ஏழரைச் சனி ஆரம்பிக்கிறதே என்று சஞ்சலப் பட அவசியமில்லை. சனி பகவான், குரு பகவானின் பார்வையில் இந்த ஆண்டு இறுதி வரை சஞ்சரிப்பதால் சமூகத்தில் நலிவடைந்தவர்களுக்கு சேவை செய்து புண்ணியம் ஈட்டும் வாய்ப்பு ஏற்படும். இதனால் தன்னலம் பார்க்காமல் உழைத்துப் புகழடைவீர்கள். கல்வி, கேள்விகளிலும் சிறந்து விளங்குவீர்கள்.

**உத்தியோகத்தர்கள்:** பயணங்களால் அனுகூலமான திருப்பங்களைக் காண்பீர்கள். சிலர், விரும்பிய வெளியூருக்கு மாற்றலாகிச் செல்வார்கள். மேலதிகாரிகள் சற்று பாரா முகமாகவே நடந்து கொண்டாலும் தொல்லைகள் கொடுக்கமாட்டார்கள்; ஆனால் சக ஊழியர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். உரிய நேரத்தில் பதவி உயர்வு கிடைக்கும். சோம்பலுக்கு இடம் கொடுக்காமல் உங்கள் வேலைகளைத் திட்டமிட்டு சரியாகச் செய்வது அவசியம்.

**விவசாயிகள்:** விளைச்சல் நன்றாக இருக்கும். பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். விவசாய உபகரணங்களுக்குச் சற்று கூடுதலாகச் செலவு செய்ய நேரிடலாம். புதிய நிலங்கள் குத்தகைக்கு வந்து சேரும்.

**பெண்கள்:** கணவரின் பாராட்டுகளை எளிதில் அடைவீர்கள். புதிதாக ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். இல்லத்தில் நிம்மதியைக் காண்பீர்கள். சுப காரியங்களில் கலந்து கொள்வீர்கள். உடல் நலத்தில் மட்டும் சற்று கவனமாகவே இருக்கவும்.

**மாணவர்கள்:** நல்ல மதிப்பெண்களை வாங்க வழி வகையுண்டு. பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். அவர்களால் உங்கள் எதிர்காலத் திட்டங்கள் எளிதில் நிறைவேறும். சக மாணவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவீர்கள். அவர்களிடம் அனாவசிய சண்டை சச்சரவுகளைத் தவிர்க்கவும்.




பிறந்திருக்கும் 'கர' ஆண்டில் பூர்வபுண்ய, புத்தி மற்றும் புத்திர ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்யும் குரு பகவான் உங்களை எதிலும் நிதானமாகவும், அளவெடுத்துச் சிறப்பாகவும் செயற்பட வைப்பார். இதனால் சூழ் நிலைக்கு ஏற்றவாறு பேசி, காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். இல்லத்தில் திருமணம், குழந்தைப் பிறப்பு போன்ற சுப காரியங்கள் நடக்கும். பூர்வீக சொத்துக்கள், சிரமமில்லாமல் கை வந்து சேரும். வருமானம், எதிர்பார்ப்பிற்கும் அதிகமாகக் கிடைக்கும். நல்லது - கெட்டது இரண்டையும் பகுத்து ஆராய்ந்து செயற்படுவீர்கள். தேக ஆரோக்கியம் சீராக இருக்கும். சமூகத்தில் உயர்ந்தவர்களின் நட்பும், ஆதரவும் கிடைக்கும்.

உங்களின் சுய முயற்சியின் அடிப்படையில் செயற்கரிய காரியங்களைச் செய்வீர்கள். உங்களால் சகோதர, சகோதரிகளுக்கும் நன்மை உண்டாகும். எதிலும் விவேகத்துடன் செயற்படுவீர்கள். உங்களின் கருத்துக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மீது சுமத்தப் பட்ட வீண் பழிகளில் இருந்தும், அவ்வப்போது ஏற்படும் மனச் சோர்வை நீக்கிக் கொள்ள, உங்களுக்கு, சில சந்தர்ப்பங்களில் அவசர புத்தியைக் குருபகவான் கொடுப்பார்; எதிர்பாராத விதத்தில் தீயவர்களின் தொடர்பும் ஏற்படும். இதற்காக அஞ்சத் தேவையில்லை. சிவபெருமான் துணையினால் தீமைகளிலிருந்தும் தீயவர்களிடமிருந்தும் எளிதில் மீளலாம். வருடத்தின் ஐப்பசி மாதம், 28ஆம் திகதி வரை உங்களின் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானால் நீங்கள் ஓய்வெடுக்காமல் உழைத்துக்கொண்டே இருப்பீர்கள். அதனால் நற்பலன்களும் உள்ளன; செய்தொழிலில் தினமும் வருமானம் வந்துகொண்டே இருக்கும். இந்த ராசிக்காரர் சிலருக்குப் புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். ஐப்பசி மாதம், 29ஆம் திகதியிலிருந்து ஆண்டு இறுதி வரையில், குரு பகவானின் பார்வையில் உங்கள் லாபஸ்தான ராசியில் சஞ்சரிக்கிறார் சனி பகவான். இவர், உங்கள் உழைப்புக்கு மேல் இரு மடங்கு வருமானத்தைத் தருவார்; மற்றவர்களைத் தலைமை தாங்கி வழி நடத்திச் செல்லும் அளவிற்கு உயர்வீர்கள். கல்வி, கேள்விகளில் அரிய சாதனைகள் புரிய வாய்ப்பு கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். செல்வத்தோடு செல்வாக்கும் உயரும். எதிர்பாராத இடங்களிலிருந்து தக்க உதவிகளைப் பெறுவீர்கள். உங்களின் தன்னம்பிக்கை உயரும். உங்களின் செயல்களை முறைப்படுத்திச் செய்வீர்கள்.

**தருபவர் – வித்தியா**

**உத்தியோகத்தர்கள்:** அனைத்து வேலைகளையும் குறித்த காலத்திற்குள் முடித்து, மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். பதவி உயர்வு பெறுவதற்கு உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்வீர்கள். பண வரவு நன்றாக இருக்கும். சக ஊழியர்களுக்கும் உதவி செய்வீர்கள்.

**விவசாயிகள்:** அறுவடையால் லாபம் அதிகரிக்கும். கால்நடைகளால் நல்ல வருமானம் கிடைக்கும். எனவே புதிய கால்நடைகளை வாங்குவீர்கள். புதிய முயற்சிகளிலும் ஈடுபடுவீர்கள். பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்துவீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப காரியங்கள் நடக்கும்.

**பெண்கள்:** குடும்பத்தில் அனுகூலமான சூழ்நிலையைக் காண்பீர்கள். உங்கள் உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உற்றார், உறவினர்கள் பாசத்தோடு பழகுவார்கள். பெரியோரின் ஆலோ சனைப்படி நடந்துகொண்டு, குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டாலும் தப்பித்துக்கொள்வீர்கள்.

**மாணவர்கள்:** படிப்பில் சிறப்பான கவனம் செலுத்துவீர்கள். பாடங்களை முன்னதாகவே படித்து முடித்து, ஆசிரியர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்; எதிர்பார்த்த மதிப்பெண்களை அள்ளுவீர்கள். விளையாட்டுகளில் புதிய விடயங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

உதயன்
18 ஏப்ரல் 2011 திங்கட்கிழமை

# ஆழிப்பேரலை எச்சரிக்கை விடுக்கும் பல நூற்றாண்டுகால கல் வெட்டுகள்

மியாகோ, ஏப். 18

இன்றைய யுகத்தில், விஞ்ஞான வளர்ச்சியை நாம் பெருமளவில் நம்பினாலும், முன்னோர் அறிவுரைக்கும் முக்கியத்துவம் தரவேண்டும். இல்லையெனில், நமக்கு பேரிழப்புகள் ஏற்படக்கூடும் என்பதற்கு சமீபத்திய உதாரணம் ஜப்பான்.

உலகில் முதியவர்கள் அதிகம் உள்ள நாடு ஜப்பான். இங்கு, சமீபத்தில் ஏற்பட்ட பூகம்பம், ஆழிப்பேரலை ஆகியவற்றால் நாட்டின் வடகிழக்குப் பகுதி கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இதுவரை 12 ஆயிரத்து 500 பேர் இறந்துள்ளனர். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக மாறியுள்ளனர். நாட்டின் வடகிழக்கில் மியாகோ நகரம் உள்ளது. இதைச் சுற்றியுள்ள கடலோரப் பகுதிகளில், பல நூற்றாண்டுகளாக, ஆழிப்பேரலைத் தாக்குதல் ஏற்படுவது வழக்கம்.

இது குறித்து எதிர்கால மக்களை எச்சரிக்கும் நோக்கில், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அங்குள்ள அனேயாசி கடற்கரையில் கல்வெட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. அதன்படி நடக்காதது எவ்வளவு பெரிய தவறு என அப்பகுதி மக்கள் தற்போது சிந்திக்க ஆரம்பித்துள்ளனர்.

பல்வேறு உயரங்களில், வடிவங்களில் இருக்கும் இந்தக் கல்வெட்டுகளில், இங்கு ஆழிப்பேரலை பாதிப்பு உண்டு. பூகம்பம் வந்தால் ஆழிப்பேரலையும் வரும். எச்சரிக்கையாக இரு.

உயர்ந்த பகுதியில் வசிப்பதே, அமைதியான வாழ்வுக்கு உகந்தது, கல்வெட்டு அமைந்துள்ள இடத்தை தாண்டி, குடியிருப்பை ஏற்படுத்தினால் பேராபத்து நேரிடும்.

இவ்வாறு வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

அதுபோல், எந்தெந்தப் பகுதியில் ஆழிப்பேரலை தாக்கக்கூடும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், எந்த பகுதியில் வசித்தால், பாதுகாப்பாக இருக்கலாம் என்பது பற்றி குறிப்பிடவில்லை.

இதுகுறித்து அப்பகுதியைச் சேர்ந்த, 12 வயது சிறுவன் யூது கிம்யூரா கூறுகையில், ''இந்தக் கல்வெட்டுகள் பற்றி நாங்கள் பாடங்களில் படித்துள்ளோம். இவை 600 ஆண்டுகள் பழமையானவை. எங்கள் பகுதி சிறுவர்கள் அனைவருக்கும் இதுபற்றித் தெரியும்'' என்றான்.

அதே பகுதியில் வசிக்கும் ஐசாமு என்பவர் கூறும்போது, கடந்த 1896ஆம் ஆண்டு பெரும் ஆழிப்பேரலை தாக்கியதைத் தொடர்ந்து, எங்கள் முன்னோர், மேட்டுப் பகுதியில் குடியேறினர். நாங்களும் அவர்கள் வழியையே பின்பற்றுகிறோம்.

என்றாலும், கல்வெட்டில் கூறியுள்ளதையும் மீறி, இங்குள்ள சிகெய் கடற்பகுதியில் ஏராளமான பாடசாலைகள், குடியிருப்புக் கட்டடங்கள் நிறுவப்பட்டன. அனைத்தும் தற்போது தரைமட்டமாகி, ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுதான் மிச்சம்.

கல்வெட்டு வாசகங்கள் குறித்து எவரும் கவலைப்படுவதில்லை. இன்னும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் மீண்டும் புதுப்புதுக் கட்டடங்கள் இப்பகுதியில் நிறுவப்பட்டு விடும் - என்றார்.




லிதுவேனியா, வில்னியஸ் பூங்காவில், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, ஜனாதிபதி டாலியா கிரைபஸ்கய்டி சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

# ஒன்லைன் சீட்டாட்டத்தில் மோசடி: 3 நிறுவனங்களுக்கு அமெரிக்கா தடை

பொஸ்டன், ஏப். 18

போக்கர் எனப்படும் சீட்டாட்டத்தை இணையதளம் மூலம் நடத்தி வரும் 3 அமெரிக்க நிறுவனங்களுக்கு அந்நாட்டு புலனாய்வு அமைப்பான எவ்.பி.ஐ. தடை விதித்துள்ளது.

சட்டவிரோதமான சூதாட்டம், வங்கி மோசடி உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் அந்த நிறுவனங்களின் மீது கூறப்பட்டுள்ளன. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் போக்கர் எனப்படும் சீட்டாட்டம் மிகவும் பிரபலம். இதனை ஒன்லைனிலும் ஆட முடியும்.

இதுபோன்ற வசதியை போக்கர் ஸ்டார்ஸ், புல் டில்ட்போக்கர், அப்சலூட் போக்கர் ஆகிய நிறுவனங்கள் அளித்துள்ளன. இந்த நிறுவனங்கள் முறையே ரேமண்ட் பிடார், நெல்சன் பர்ட்னிக், ஐசை ஷைன்பெர்க் ஆகியோரால் நடத்தப்பட்டு வந்தன.

அமெரிக்காவின் சட்டவிரோத இணையதள சூதாட்டத்துக்கு எதிரான சட்டத்தின் கீழ் இந்த 3 நிறுவனங்கள் மீது இப்போது எவ்பிஐ குற்றஞ்சாட்டியிருக்கிறது.

இந்த நிறுவனங்கள் கையாண்ட 75 இற்கும் அதிகமான வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்க வங்கிகள், கிரெடிட் கார்ட் நிறுவனங்கள் ஆகியவற்றை இந்த 3 சூதாட்ட நிறுவனங்களும் தந்திரமாக ஏமாற்றியிருக்கின்றன என எவ்பிஐ தெரிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டில் இந்த மோசடிகளை சில பெரிய வங்கிகள் கண்டுபிடித்து இதுபோன்ற நிறுவனங்களின் கணக்குகளை முடக்கின.

பூவுலகில் மலர்வு
21.08.1939

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

விண்ணுலகில் இணைவு
21.04.2008

அமரர் டாக்டர்

## வயிரமுத்து பூபாலசுந்தரம்

திதி: பிரதமை (18.04.2011)



ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
வேதனைகள் எமைச் சூழ நித்தம்
உம் நினைவுகளுடன்
நகர்த்துகின்றோம் நாள்களை
மீண்டும் மானிடப் பிறவி உண்டெனில்
பிறந்திடல் வேண்டும் உம் பிள்ளைகளாய்
பிரியமான உம் துணையாள்– அம்மா உம்
நினைவுகளைச் சுமக்கின்றாள் எக் கணமும்
பாசமிகு அப்பாவே! எம் கண்ணீரை உம்
பாதக்கமலத்தில் சமர்ப்பிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா ஆண்டவனின் பாதங்களில்
சாந்திபெற அருள வேண்டி அரன் பாதம் பணிகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

என்றும் உம் நினைவுகளுடன் வாழும்:
குடும்பத்தினர்.

(3254) (38)

# ஜனாதிபதி முபாரக் கட்சி கலைப்பு பணம், சொத்துகள் பறிமுதல்

## இராணுவ அரசு நடவடிக்கை

கெய்ரோ, ஏப். 18

எகிப்தில் ஜனாதிபதியாக விருந்த ஹோஸ்னி முபாரக்கிற்கு எதிராகப் போராட்டம் நடத்தி அவரைப் பதவியிலிருந்து மக்கள் விரட்டியடித்தனர்.

தற்போது இராணுவ ஆட்சியாளர்களால் கைதுசெய்யப்பட்டுள்ள அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அதிகார துஷ்பிரயோகம், ஊழல் குற்றச்சாட்டுகள் ஆகியவற்றில் சிக்கியுள்ளார்.

அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரணதண்டனை கிடைக்க வாய்ப்பு உள்ளது. அவர் ஜனாதிபதியாக இருந்தபோது தேசிய ஜனநாயகக் கட்சி என்ற பெயரில் ஒரு கட்சியை நடத்தி வந்தார்.

அந்தக்கட்சியின் தலைவராகவும் முபாரக் பதவி வகித்து வந்தார். நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களின் போதெல்லாம் இக்கட்சியே தொடர்ந்து அமோக வெற்றிபெற்று வந்தது.

ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியுள்ள நிலையில் அவரது தேசிய ஜனநாயகக் கட்சி சனிக்கிழமை கலைக்கப்பட்டது. அதற்கான உத்தரவை உயர்மட்ட நிர்வாக நீதிமன்றம் பிறப்பித்தது.

இக்கட்சிக்கு எகிப்து முழுவதும் பல கோடி மதிப்புள்ள சொத்துகளும் ரொக்கப்பணமும் உள்ளன. அவற்றையும் பறிமுதல் செய்ய உத்தர் விடப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கையை இராணுவ அரசு மேற்கொண்டது.

அக்கட்சி கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த அன்வர் சதாத் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. அவரிடமிருந்து முபாரக் கட்சியைக் கைப்பற்றினார்.

மக்கள் புரட்சியால் முபாரக் பதவி விலகியதைத் தொடர்ந்து அக்கட்சியின் தலைவராக அன்வர் சதாத்தின் மைத்துனர் தலாத் சதாத் பொறுப்பேற்றிருந்தார்.

எங்களது கட்சி கலைக்கப்பட்டது பற்றி வருத்தப்படவில்லை. ஜனாதிபதித் தேர்தலின்போது மீண்டும் புதிய தேசிய ஜனநாயகக் கட்சி என்ற பெயரில் புதிய கட்சியை ஆரம்பிப்போம். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவோம் என அவர் அறிவித்துள்ளார்.

# வேற்று கிரக விண்கலத்திலிருந்து ஒலித்த பெண் குரலால் பரபரப்பு

சைபீரியா, ஏப். 18

வேற்று கிரக விண்கலம் ஒன்றிலிருந்து ஒருபெண், பூனையின் குரலை போல 'மியாவ்' என்று பேசியதை தான் கேட்டார் என ரஷ்யாவின் சைபீரியா பகுதியைச் சேர்ந்த வான்வெளி போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் கூறியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவில் பனி பிரதேசமான சைபீரியா அருகே உள்ள நகரம் யாகுட்ஸ்க். இங்குள்ள விமான நிலைய கட்டுப்பாட்டறையில், ஒரு போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் பணியிலிருந்தபோது, கண்காணிப்பு திரையில், வேற்றுக்கிரக விண்கலம் ஒன்று திடீரென தோன்றியதைப் பார்த்தார்.

அந்த விண்கலம் 6 ஆயிரம் கி.மீற்றருக்கும் அதிகமான வேகத்தில் பறந்து வந்தது. கடல் மட்டத்திலிருந்து 64 ஆயிரத்து 895 அடி உயரத்தில் காணப்பட்டது.வேற்றுக் கிரக விண்கலம் திடீரென ஊடுருவியதால், அந்த நேரத்தில் மற்ற விமானங்களுடன் தொடர்பு கொள்வதில் தடை ஏற்பட்டது.

அந்த விண்கலத்துடன் தொடர்புகொண்டு பேச வான்வெளிகட்டுப்பாட்டாளர் முயற்சி செய்தார். அப்போது, அந்த விண்கலத்திலிருந்து ஒரு பெண் பேசினார்.

அப்பெண் பேசியது, ஒரு பூனையின் மொழிபோல் இருந்தது. பின், திடீரென அந்த விண்கலம் தன் திசையை மாற்றிக்கொண்டு கண்காணிப்புத் திரையிலிருந்து மறைந்துவிட்டது.

இது குறித்து வான்வெளி கட்டுப்பாட்டாளர் கூறுகையில், ''விண்கலத்திலிருந்து வந்த சப்தம் பெண்ணின் குரல் போல் இருந்தது. அந்த சப்தம் பூனையின் 'மியாவ், மியாவ்' என்பதை போல தொடர்ந்து வந்து கொண்டிருந்தது'' என்றார்.


# அமெரிக்காவில் புயல்; 22 பேர் பலி

அமெரிக்காவில் தென் பகுதியிலுள்ள கரோலினாவில் உள்ள கடலில் புயல் கிளம்பியது. பின்னர் அது வலுவடைந்து வாஷிங்டனை தாக்கியது. கடுமையான சூறாவளி காற்றுடன் பலத்த மழை கொட்டியது. பலத்த காற்று வீசியதால் வீடுகளின் கூரைகள் பறந்தன. வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. வீதிகளில் மரங்கள் சாய்ந்தன. மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

கடும் சூறைக்காற்று வீசியதால் வீதிகளில் வாகனங்கள் செல்ல முடியவில்லை. அவை ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டன. இதனால் பொது மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

வாஷிங்டனைத் தொடர்ந்து வேர்ஜீனியா, மேரிலேண்ட் ஆகிய மாகாணங்களையும் புயல் கடுமையாகத் தாக்கியது. அலபாமா, ஆர்கன்சாஸ், ஒகலாமா, மிஸ்சிசிப்பி ஆகிய இடங்களில் பெருமளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

புயல் மழையில் சிக்கி இதுவரை 22 பேர் பலியாகி உள்ளனர். இந்தப் புயல் மழை 3 நாள்கள் நீடித்தது. தற்போது, நிலைமை ஓரளவு சீரடைந்துள்ளது. எனவே, மீட்புப் பணி ஆரம்பமாகியுள்ளது.



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில், நடந்த பத்திரிகையாளர்கள் கூட்டத்தில், ஜனாதிபதி ஹமித் கர்சாய் (வலது), பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி ஆகியோர் கலந்துகொண்டு பேசுகின்றனர்.

# டைட்டானிக் கப்பல் மூழ்கிய சம்பவம்; 99ஆம் ஆண்டு நினைவுதினம் அனுஷ்டிப்பு

லண்டன், ஏப். 18

பிரிட்டனுக்குச் சொந்தமான பிரமாண்டமான டைட்டானிக் கப்பல் கடலில் மூழ்கிய சம்பவத்தின் 99ஆம் ஆண்டு நினைவு தினம் அமெரிக்க கடற்படை சார்பில் வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

டைட்டானிக் கப்பலில் பயணம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், சர்வதேச கடல் ரோந்துப் படையினர் தெற்கு அட்லாண்டிக் கடலின் நியூபவுண்ட்லாந்து பகுதியில் மலர்வளையங்களை நீரில் இறக்கினர். டைட்டானிக் மூழ்கிய சம்பவத்தையடுத்து, கடலிலுள்ள பனிப்பாறைகளைக் கண்காணிக்கும் வகையில் சர்வதேச கடற்பகுதியில் லண்டனைச் சேர்ந்த படைப்பிரிவினர் ரோந்து நடவடிக்கைகளை இப்போதும் மேற்கொண்டு வருகின்றனர்.

1912ஆம் வருடம் ஏப்ரல் 15ஆம் திகதி லண்டனிலிருந்து புறப்பட்ட டைட்டானிக் கப்பல் தனது முதல் பயணத்திலேயே பனிப்பாறையில் மோதி கடலில் மூழ்கியமை குறிப்பிடத்தக்கது. இதில், அந்தக் கப்பலில் பயணம் செய்த 1,522 பேர் இறந்தனர்.

# இஸ்லாமியர்களுக்கு விரைவில் தனி இணையம்

தெஹ்ரான், ஏப். 18

உலகம் முழுவதும் வசித்து வரும் இஸ்லாமியர்களுக்கு என தனி இணையதளம் விரைவில் உருவாக்கப்படும் என ஈரான் அறிவித்துள்ளது.

தற்போது 'வேர்ல்ட் வைட் வெப்' என்றழைக்கப்படும் இணையதளம் மூலம் அனைத்து மக்களுக்கும் அனைத்துத் தகவல்களும் உடனுக்குடன் கிடைத்துவருகின்றன.

இந்த இணையதளத்தில் அமெரிக்கா முக்கியமான பங்கை வகிக்கிறது. பெரும்பாலான சைட்டுகள் அமெரிக்காவை மையமாகக் கொண்டே செயற்பட்டு வருகின்றன.

இணையதளத்தில் அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஈரான் அரசு இஸ்லாமிய மக்களுக்கு என தனியான இணையத் தளத்தை உருவாக்க உள்ளது.

இந்த இணையதளத்தில் இஸ்லாமின் கொள்கைகள், சர்வதேச தகவல் பரிமாற்றத்திற்காக பார்ஸி மொழியை மேம்படுத்துவது ஆகியவை உட்பட பல்வேறு தகவல்கள் இடம்பெறும் என ஈரான் அரசின் பொருளாதார பிரிவைச் சேர்ந்த அலி அக்வ மொகம்மதி தெரிவித்துள்ளார்.

# ஜப்பானில் மீண்டும் நிலநடுக்கம்; நியூஸியும், ஆஸியும் குலுங்கின

டோக்கியோ, ஏப். 18

கடந்த மாதம் 11ஆம் திகதி ஜப்பானில் சக்திவாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து ஆழிப்பேரலை ஏற்பட்டது. இச்சம்பவத்தில் 28 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

புகுஷிமாவிலுள்ள அணு மின் நிலையத்தின் அணு உலைகள் வெடித்துச் சிதறி கதிர்வீச்சை வெளிப்படுத்தி வருகின்றன. அவற்றை சீரமைக்கும் பணி இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஜப்பானில் தொடர்ந்து அடுத்தடுத்து பூகம்பம் ஏற்பட்டு வருகிறது. சனிக்கிழமை அங்கு மீண்டும் பூகம்பம் ஏற்பட்டது.

காண்டோ மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் காலை 11.19 மணியளவில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டது. இதனால், அங்கு வீடுகளும் கட்டடங்களும் குலுங்கின. இதைத் தொடர்ந்து அதிர்ச்சி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் ஓட்டம் பிடித்தனர்.

இந்தப் பூகம்பம் ரிச்டர் அளவுகோலில் 5.9 புள்ளிகளாகப் பதிவானது என அறிவிக்கப்பட்டது. தெற்கு இப்ராகி பகுதியில் பூமிக்கு அடியில் 79 கி.மீற்றர் ஆழத்தில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டது என ஜப்பானின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

கடந்த 11ஆம் திகதி பூகம்பத்தின்போது புகுஷிமாவின் அணுஉலைகள் வெடித்து கதிர்வீச்சு பாதிப்பை ஏற்படுத்தின. அதுபோன்று தற்போது நடைபெறாமல் தடுக்க ஜப்பானிலுள்ள 13 அணுஉலைகளின் உற்பத்தி நிறுத்தப்பட்டது.

ஜப்பானில் பூகம்பத்தைத் தொடர்ந்து ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளிலும் பூகம்பம் ஏற்பட்டது. அங்கு வீடுகளும் கட்டடங்களும் குலுங்கின. பீதி அடைந்த மக்கள் வீதிகளில் ஓட்டம் பிடித்தனர்.

நியூஸிலாந்திலுள்ள கிறிஸ்ட் சர்ச் நகரில் மின்சாரம் விநியோகம் துண்டிக்கப்பட்டது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் அவதிப்பட்டனர். ஆழிப்பேரலை எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை.

உதயன்
18 ஏப்ரல் 2011 திங்கட்கிழமை

# வன்முறைகளைத் தடுக்க தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - விஜயகாந்த் வேண்டுகோள்

திமு.க.வினரின் வன்முறை களைத் தடுக்க, தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தி ருப்பதாவது:

தே.மு.தி.க. தொண்டர்கள் பல இடங்களில் குறிவைத்துத் தாக்கப்படுகின்றனர். திருவாரூர் மாவட்டம் வேப்பம்பட்டு கிராமத்தில், தே.மு.தி.க.வைச் சேர்ந்த தங்கவேலு குடும்பத்தைச் சேர்ந்தோர் தாக்கப்பட்டு படுகாயம் அடைந்துள்ளனர்.

வேடசந்தூர் தொகுதியில், தி.மு.க.வினர் தாக்கியதில், தே.மு.தி.க.வைச் சேர்ந்த மூன்று தொண்டர்கள் காயமடைந்துள்ளனர். சோழிங்கநல்லூர் தொகுதியில், தே.மு.தி.க.கிளைச் செயலரின் ஓட்டோவை, தீ வைத்து கொளுத்தியுள்ளனர். காரைக்கால் தெற்கு தொகுதி வேட்பாளர் அசனா வீட்டை, தி.மு.க.வினர் தாக்கியுள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இந்தநிலை நீடித்தால், வாக்கு எண்ணிக்கை தினமான மே 13ஆம் திகதி, தி.மு.க.வினரின் வன்முறைச் செயல்கள் ஊகிக்க முடியாத அளவுக்கு அதிகரித்து விடும்.

எனவே, வன்முறையில் ஈடுபடும் தி.மு.க.வினர் மீது நடிவடிக்கை எடுக்க வேண்டும்.



தே.மு.தி.க.தொண்டர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும். இந்த நேரத்தில், பொலிஸார் தைரியமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் உத்தரவாதம் அளிக்க, தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பிக்க வேண் டும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார். (வ)

## சத்தியசாயி பாபா விரைவில் ஆசிரமத்துக்கு

சாயிபாபாவை 2 வாரத்திற்குள் ஆச்சிரமத்திற்குக் கொண்டு வருவோம். அவருக்கு அங்கேயே அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்று அமைக்கப் படுகிறது. இதற்கான பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. என்று சத்ய சாயிபாபா அறக் கட்டளை நிர்வாகிகள் கூறியுள் ளனர்.

மேலும் ஆஸ்பத்திரியில் சாயிபாபா இருப்பதால் பலத்த பாதுகாப்பு போடப் பட்டுள்ளது. இதனால் ஏனைய நோயாளிகள் பாதிக் கப்படுகிறார்கள். இதனால் பாபாவை ஆசிரமத்துக்குக் கொண்டு வந்து சிகிச்சை அளிக்க முடிவு செய்துள்ளோம் என்றனர்.

ஆந்திர மாநிலம் புட்ட பர்த்தியில் ஆசிரமம் அமைத்து ஆன்மீகப் பணியில் ஈடுபட்டு வருபவர் சத்யசாய்பாபா. இவர் கடந்த மாதம் 18ஆம் திகதி உடல்நலக்குறைவு காரணமாக அங்குள்ள சத்யசாயி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார்.

அவருக்கு நேற்று முன்தினம் தொடக்கம் 20 ஆவது நாளாக சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மூச்சுத்திணறல் இருப்பதால் தொடர்ந்து செயற்கைச் சுவாசம் அளிக்கப்படுகிறது.

மருந்து களைஉடல் உறுப்புகள் ஏற்றுக் கொள் வதால் ஓர ளவு முன் னேற்றம் ஏற்பட்டுள்ளது.



இதுபற்றி வைத்தியசாலை இயக்குனர் டாக்டர் சபயா கூறுகையில்:

சாயிபாபாவின் உடல் நிலையைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். அவரது சுவாசக் கோளாறை நீக்குவ தற்காக நோய் எதிர்ப்பு மருந்துகள் அளித்து வருகிறோம்.

இந்தக் கோளாறு குணமானால் செயற்கை சுவாசக் கருவியை அகற்றி விடலாம் என்றார்.

சாய்பாபா விரைவில் நலம் பெற வேண்டி புட்டபர்த்தி ஆசிரமத்தில் தொடர் பஜனைகள் இடம்பெறுகின்றன.

ஆந்திரா முழுவதிலும் பல்வேறு இடங்களில் சிறப்பு யாகங்கள் நடைபெறுகின்றன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## சீமானின் ஆசையை நிறைவேற்ற தங்கபாலு முயற்சி - எஸ்.வி. சேகர் கருத்து

கும்பகோணம், ஏப்.18

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 63 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிக்க முயற்சிப்பேன் என்று சீமான் பிரசாரங்களின் போது கூறினார். அவரது ஆசையை நிறைவேற்ற தங்கபாலு தற்போது முயற்சிக்கிறார் என்று எஸ்.வி. சேகர் சாடியுள்ளார்.

கும்பகோணத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியின்போது மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

சீமானின் ஆசையை நிறைவேற்ற தங்கபாலு முயற்சிக்கிறார்.

மக்களிடம் அதிக விழிப்புணர்வை உண்டாக்கி, பெரும் பாலானோரை வாக்களிக்கச் செய்த தேர்தல் ஆணையத்தைப் பாராட்ட வேண்டும். இந்தத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிவெற்றிபெற்று மீண்டும் 6 ஆவது முறையாக கருணாநிதி முதல் வராகப் பதவியேற்பார். காங்கிரஸ் கட்சியிலிருந்து முதலில் நீக்கப்பட வேண்டியவர் தங்கபாலுவே.

மயிலாப்பூர் தொகு தியில் கொல்லைப் புற வழியாக வந்து வேட் பாளரர்கப் போட்டியிட்டார். அவருக்கு பெரும்பான்மை கூட கிடைக்காது என்ற பயத்தில்தான் காங்கிரஸ் நிர்வாகிகளை நீக்குவதாக அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் பல குழுக்களாக காங்கிரஸார் செயற்படுகின்றனர் என்ற கருத்து நிலவி வரும் நிலையில், தங்கபாலு எங்களை நீக்கியதன் மூலம், அனைத்து குழுவினரும் ஒற்றுமையாகச் செயற்படச் செய்தமைக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். நடிகர் ரஜினிகாந்த் இரு தவறுகளைச் செய்துவிட்டார்.

அந்தவகையில் அனைவரையும் வைத்துக்கொண்டு வாக்குப் பதிவு செய்தமை, வாக்குப் பதிவு செய்தவுடன் மாற்றம் தேவை என மக்கள் முடிவு எடுத்துள்ளதாக கருத்துத் தெரிவித்தமை ஆகியனவே இரண்டு தவறுகளுமாகும். தேர்தலுக்கு முன்னதாகவோ அல்லது தேர்தல் முடிவு வந்த பிறகோ இந்தக் கருத்தை அவர் தெரிவித்திருக்கலாம் என்றார். (வ)

## 2011 இல் மிஸ் இந்தியா அழகியாக மும்பை கனிஷ்தா

மிஸ் இந்தியா-2011 அழகியாக மும்பை அழகி கனிஷ்தா தன்கர் தெரிவு செய்யப் பட்டுள்ளார். 2 ஆம் இடத்துக்கு மும்பையைச் சேர்ந்த மற்றொரு அழகி அன்சிதா ஷோரி தேர்வானார். டில்லி அழகி ஹஸ்வின் கவுர் 3ஆவது இடத்தைப் பெற்றார்.

இந்தியா முழுவதிலும் இந்த போட்டிக்காக ஏற்கனவே தேர்வு சுற்றுப் போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன.

அதில் இருந்து தேர்வான அழகிகளுக்கு இறுதிப் போட்டி நடத்தப்பட்டது.

கனிஷ்தா, அன்சிதா, ஹஸ்வின் கவுர் மூவருக்கும் கடந்த ஆண்டு பட்டம் பெற்றவர்கள் மகுடம் சூடி வாழ்த்து தெரிவித்தனர்.

வெற்றிபெற்ற அழகிகளுக்கு ஸ்கோடா கார் பரிசாக வழங்கப்பட்டது. (வ)


## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 04 . 07 . 1973

மறைவு 10 . 05 . 2009

சுப்பிரமணியம் உதயதாஸ்

திதி: 18.04.2011

ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ
ஐயா உந்தன் முகம் கண்டு
ஆறவில்லையே எம் மனது
அனலாய் தகிக்குது உன் நினைவு
பார்புகழனே உன் பாலகனை
எப்படி மறந்தாய் நீ அன்று
பக்கம் இருந்த உன் துணையை

எப்படிப் பிரிந்தாய் மனம் துணிந்து
பாசம்கொண்ட உன் உறவுகளை
பரிதவிக்க ஏன் விட்டாய்
உள்ளம் எல்லாம் உனை நிறைத்து
எங்கு சென்றாய் எமை மறந்து
பாச விழிகளில் நீர் சொரிந்து
ஏங்குகிறோம் உன் நினைவுகளில்.

நீர்வேலி மேற்கு, நீர்வேலி. (39) குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.
முத்துராஜா இரவீந்திரன்
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றிப் பதவியுயர்வு பெற்று கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இன்று (18.04.2011) அதிபராகக் கடமையேற்கும்

திரு.முத்துராஜா இரவீந்திரன் அவர்களை வாழ்த்திப் பாராட்டுகின்றோம். மேலும் பல உயர்வு பெற்று முன்னேற ஆசிகள் கூறுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

(40-23-25)(3224)

## மனமார வாழ்த்துகின்றோம்

வடமராட்சியின் புலோலி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

**நாகேசர் இராசலிங்கம்**



அவர்கள் 1978 ஆம் ஆண்டு சமூக சேவைகள் உத்தியோகத்தராக மத்திய அரசின் கீழ் நியமனம் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒரு சமூக சேவைகள் உத்தியோகத்தராகச் செயல்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆதரவற்ற மக்களுக்குச் சேவையாற்றி 1990 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்துக்கு மாற்றம் பெற்று வந்து பருத்தித்துறை பிரதேச செயலகப் பகுதி கோப்பாய் பிரதேச செயலகப் பகுதி ஆகியவற்றில் சமூக சேவைகள் உத்தியோகத்தராகக் கடமையாற்றி பின் யாழ்.மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தராக இருந்து 2006 ஆம் ஆண்டிலிருந்து கைதடியிலுள்ள அரச முதியோர் இல்லமான சாந்தி நிலையத்தின் அத்தியட்சகராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் எமது அன்புள்ளம் கொண்ட அத்தியட்சகர் அவர்கள் ஏப்ரல் 18 ஆம் திகதி தனது அகவை அறுபதினை பூர்த்தி அடைவதனால் சாந்தி நிலையத்தின் வாழ். மூத்தோர்களும் உத்தியோகத்தர்களும் பணியாளர்களும் அவரை மனமார வாழ்த்தி அவரின் சேவை மேன்மேலும் எமக்குக் கிடைக்க எல்லாம் வல்ல இறைவன் அவருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி நிலைய வாழ் மூத்தோர்களும்
உத்தியோகத்தர்களும்,
பணியாளர்களும்

ஊழியர் நலன்புரி சங்கம்
சாந்தி நிலையம், கைதடி.

(41,25,25)

# மீன்பிடித் தடைக்காலங்களில் சர்வதேச மீன்பிடிக் கப்பல்களை கண்காணிக்குக!

சென்னை, ஏப். 18

45 நாள்கள் மீன்பிடித் தடைக்காலங்களில் பன்னாட்டு மீன்பிடிக் கப்பல்கள் தடையை மீறி மீன்பிடிக்காமல் இருக்கும் வகையில் கண்காணிக்கப்படுவது மிகவும் அவசியம் என்று ம.தி.மு.க. பொதுச்செயலர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

மனிதர்களைத் தவிர உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் இனப் பெருக்கம் செய்ய பருவகாலங்கள் உண்டு. தமிழகத்தில் ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் மே 29 ஆம் திகதி வரை 45 நாள்கள் மீன்களின் இனப்பெருக்கக் காலம்.

வசந்தத்தை வரவேற்கும் சித்திரை முதல் நாளில் நெய்தல் நில மக்கள் வறுமையை வரவேற்பதாக இந்த 45 நாள்கள் அமைகின்றன.

45 நாள்கள் மீன்பிடி தடைக் காலத்தில் அரசு தரப்பில் தரப்படும் உதவித் தொகை என்பது விலைவாசி உயர்ந்துள்ள இக்காலகட்டத்திற்குப் போதுமானதாக இல்லை. குடும்ப அட்டையைக் கணக்கில் கொண்டு உதவித் தொகை வழங்கப்படுவதால் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தந்தை, மகன்கள் என்று கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் இதில் ஏமாற்றம் அடைகின்றனர்.

வட தமிழ்நாட்டில் மீன்பிடித் தொழிலில் குறைந்தபட்ச வருமானத்திற்கு உத்தரவாதம் இல்லை. தென் தமிழ் நாட்டில் கடலில் மீன்பிடிக்கச் சென்று உயிரோடு கரை திரும்புவோம் என்ற உத்தரவாதம் இல்லாத நிலையை இலங்கை இராணுவம் உருவாக்கியுள்ளது.

இதனால் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் திருமணமாகாத இளைஞர்களுக்குப் பெண் கொடுக்க மறுக்கும் நிலை உருவாகியுள்ளது.

மேலும் கடல் கடந்து பிற நாட்டுப் பட்டினங்களில் வாணிபம் செய்து செல்வச் செழிப்போடு வாழ்ந்து வந்த பட்டினத்தவர்களான நெய்தல் நில மக்கள் இன்று பட்டினி கிடக்கும் நிலையும் உருவாகியுள்ளது. கடலாளிகளான பருவதரா ஜகுல மக்களுக்கு கடல் சொந்தமாக உள்ளதோ, இல்லையோ, அவர்கள் கடனாளியாக உள்ளார்கள் என்பது மட்டும் உண்மை.



இந்த நிலை மாறி, மீன்பிடித் தொழிலை ஊக்குவித்திட இயற்கை முகத்து வாரங்கள் அருகில் மீன்பிடித்துறைமுகங்களை மத்திய - மாநில அரசுகள் அமைத்துக் கொடுக்கவேண்டும்.

இந்த 45 நாள்கள் மீன்பிடித் தடைக் காலங்களில் பன்னாட்டு மீன்பிடிக் கப்பல்கள் தடையை மீறி மீன் பிடிக்காமல் இருக்க கண்காணிப்பது மிகவும் அவசியம்.

ஊதியம் பெறாமல் பரந்துபட்ட 1,076 கி.மீ. கடல் எல்லையைப் பாதுகாத்து வரும் தமிழக மீனவர்களைப் பாதுகாப்பது மத்திய - மாநில அரசுகளின் கடமையாகும்.

-இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## இராமேஸ்வரத்தில் காணாமல்போன 4ஆவது மீனவரின் சடலமும் மீட்பு

இராமேஸ்வரம், ஏப். 18

கடலில் மீன் பிடிக்கச் சென்று மர்மமான முறையில் கொல்லப்பட்ட இராமேஸ்வரத்தைச் சேர்ந்த நான்காவது மீனவரின் உடலும் கிடைத்துள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில், கோடியக்கரை அருகே மாரிமுத்து என்னும் அந்த மீனவரின் உடல் கண்டெடுக்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற இராமேஸ்வரத்தைச் சேர்ந்த விக்டஸ், அன்ரனி ஜோன்போல், மாரிமுத்து ஆகியோர் கரை திரும்பவில்லை. இவர்களில் 3 மீனவர்களின் உடல்கள் ஏற்கனவே மீட்கப்பட்டுவிட்டன. இந்நிலையில், மாரிமுத்துவின் உடலும் கிடைத்துள்ளது.

இந்த மீனவர்களை இலங்கைக் கடற்படை சுட்டுக்கொன்றுள்ளனர் என தமிழக மீனவர்களும், ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோவும் கூறியுள்ளனர். உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியிடம் இலங்கை தோற்றுவிட்டதால், அந்த ஆத்திரத்தில் இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்களை கொன்றுள்ளது என்று வைகோ கூறியுள்ளார். இதனிடையே, தற்போது 4 தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளது குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவிடம், பா.ஜ.க. மூத்த தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் முறைப்பாடு தெரிவித்துள்ளார். (வ)

பிரசாரம்...



ஊர்வலம்: மேற்கு வங்கத்தில் ஆறு கட்டமாக நடைபெற உள்ள தேர்தலில், கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும், திரிணாமுல் காங். கட்சியினருக்கும் இடையே கடுமையான போட்டி நிலவுகிறது. சிலி குரியில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கட்சியின் ஊர்வலத்தில் பங்கேற்ற தொண்டர்கள்.

## மேற்கு வங்காளத் தேர்தலுக்காக மம்தா ரூ.100 கோடி கறுப்புப் பணம் பயன்பாடு

கம்யூ. மந்திரி குற்றச்சாட்டு

கொல்கத்தா, ஏப். 18

மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தல் தேர்தலில் மம்தா பானர்ஜி கறுப்பு பணத்தை பயன்படுத்துவதாக மம்தா பானர்ஜி மீது மாநில வீட்டு வசதித்துறை மந்திரி கௌதம் தேவ் குற்றம் சாட்டி உள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தல் 5 கட்டமாக நடத்தப்படுகிறது.

முதல் கட்ட வாக்குப்பதிவு இன்று இடம்பெறவுள்ளது. இறுதிக் கட்ட வாக்குப்பதிவு மே 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆளும் இடதுசாரிக்கும், திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

இந்தநிலையில் தேர்தல் பிரசாரத்துக்காக மம்தா பானர்ஜி கறுப்புப் பணத்தை பயன்படுத்துகிறார். தேர்தலுக்கு 100 கோடி ரூபா செலவழிக்கப்படுகிறது. ஒரு வேட்பாளருக்கு 15 லட்சம் ரூபா வீதம் திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர்கள் 226 பேருக்கு 34 கோடி ரூபா வழங்கப்படுகிறது.

மத்திய மந்திரி சுகுல்ராய் தேர்தல் பிரசாரத்துக்காக இதை வழங்கி உள்ளார். மம்தா பானர்ஜியின் மேற்பார்வையில் வழங்கப்பட்டுள்ளது.

தன்னை ஊழலற்ற அரசியல்வாதி போன்று மம்தா காட்டிக் கொள்கிறார். விரைவில் தேர்தல் ஆணையத்திடம் இது குறித்து முறைப்பாடு செய்யப்படும். இதற்கான அனைத்து ஆதாரங்களும் எம்மிடம் உள்ளது.

இதேபோல தொலைக்காட்சியில் விளம்பரம் செய்வதற்கு திரிணாமுல் காங்கிரஸ் 20 கோடி ரூபா முதல் 30 கோடி ரூபா வரை செலவழித்துள்ளது. 10 கோடி ரூபாவில் 2 ஹெலிகொப்டர்கள் வாங்கப்பட்டுள்ளன என்று அவர் கூறி உள்ளார். (வ)

# தங்கபாலுவை பதவி விலகக்கோரி இளைஞர் காங்கிரஸார் போராட்டம்

தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவை பதவி விலகக் கோரி, ஈரோரோடு காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில், காந்தியடிகள் படத்துக்கு முன் மெழுகுவர்த்தி ஏந்தி, இளைஞர் காங்கிரஸார் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர்.

காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு எதிராகவும், கட்சித் தலைமைக்கு எதிராகவும், எதிர்க்கட்சிகளுக்கு சாதகமாகவும் செயற்பட்டதாக, அந்தக்கட்சியை சேர்ந்த, 19 பேரை கட்சியில் இருந்து, தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு நீக்கினார்.

இதற்கு, மாநிலத்தின் பல்வேறு பகுதியில், தங்கபாலுவுக்கு கடுமையான எதிர்ப்பு எழுந்துள்ளது. லோக்சபா தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர்கள் ஈரோடு சுரேஷ், திருப்பூர் ஜவகர் பாபு ஆகியோரும் நீக்கப் பட்டுள்ளனர்.

ஈரோடு காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில், நேற்றுமுன்தினம் காலை, இளைஞர் காங்கிரஸார் திரண்டனர். காந்தியடிகள் படத்துக்கு முன், மெழுகுவர்த்தி ஏந்தியபடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ் கட்சியை காப்பாற்ற வேண்டும், தங்கபாலு என்ற தனி மனிதனிடம் இருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியை மீட்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டது.

ஈரோடு லோக்சபா இளைஞர் காங்கிரஸ் தலைவர் சுரேஷ் கூறுகையில்:

தங்கபாலுவின் செயற்பாடு, தமிழகத்தின் மிகச்சிறந்த நகைச்சுவையாக உள்ளது. தனது மனைவியின் பெயர், வாக்காளர் பட்டியலில் உள்ளதா, இல்லையா என்று கூட தெரியாதவர் தங்கபாலு. ஈரோடு சட்டசபை தொகுதியில், எனது சொந்தச் செலவில் களப்பணி செய்துள்ளேன்.

காங்கிரஸ் வேட்பாளர்கள் மொடக்குறிச்சி பழனிசாமி, காங்கேயம் விடியல் சேகர், ஈரோடு மேற்கு யுவராஜா ஆகியோரில் யாராவது ஒருவர், என் மீது தலைமைக்கு முறைப்பாடு தெரிவித்திருந்தால், அரசியலை விட்டு விலகத் தயாராக உள்ளேன். மூன்று வேட்பாளர்களும் முறையீடு கூறாத நிலையில் தங்கபாலு அரசியலை விட்டு விலக வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தங்கபாலு தனிப்பட்ட முறையில் காங்கிரஸ் நிர்வாகிகளை நீக்கிய விவகாரம் கண்டனத்துக்குரியது. ஈரோடு எம்.பி., தொகுதி தலைவர் சுரேஷ், திருப்பூர் எம்.பி., தொகுதி ஜவஹர்பாபு ஆகியோரை கட்சியில் சேர்க்க வேண்டும்.

இந்தப்பிரச்சினையில் உடனடியாக அகில இந்திய தலைவர் சோனியாவும், பொது செயலர் ராகுலும் தலையிட்டு, தங்கபாலுவை நீக்க வேண்டும். தமிழகத்தில் இந்தக்கட்சியை நடத்தக்கூடிய பொறுப்புள்ள தலைவரை நியமிக்க வேண்டும். சட்டசபைத் தேர்தலில் பிரசாரத்துக்கே செல்லாத தங்கபாலுவை கட்சியில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும்' என, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (வ)

## மேற்கு வங்காளத்தில் முதல் கட்டத் தேர்தல்; 54 தொகுதிகளில் இன்று வாக்களிப்பு

மேற்கு வங்காளத்தில் மொத்தம் உள்ள 294 சட்டசபை தொகுதிகளுக்கும் 6 கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.முதல் கட்டமாக இன்று திங்கட்கிழமை 54 தொகுதிகளுக்கு வாக்களிப் பதிவு நடைபெறவுள்ளது.

2ஆவது கட்டமாக 50 தொகுதிகளுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதியும், 3ஆவது கட்டமாக 75 தொகுதிகளுக்கு 27ஆம் திகதியும், 4ஆவது கட்டமாக 63 தொகுதிகளுக்கு மே மாதம் 3ஆம் திகதியும், 5ஆவது கட்டமாக 38 தொகுதிகளுக்கு மே 7ஆம் திகதியும், 6ஆவது கட்டமாக 14 தொகுதிகளுக்கு மே 10ஆம் திகதியும் வாக்குப்பதிவு இடம்பெறவுள்ளது.

35 ஆண்டுகளாக மேற்கு வங்காளத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சி நடந்து வருகிறது. கம்யூனிஸ்ட் கூட்டணியை எதிர்த்து காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் கூட்டணி அமைத்து போட்டியிடுகிறன. (வ)



கொழும்பு முகத்துவாரம் அருள்மிகு ஸ்ரீ பூமிநீளா பத்மாவதி ஸமேத
ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு தேவஸ்தானம்

# வசந்தோற்சவம் இரதபவனி திருவிழா

## 19.04.2011 செவ்வாய்க்கிழமை முதல்
## 01.05.2011 ஞாயிற்றுக்கிழமை வரை திருவிழா நடைபெறும்.

பரந்தாமன் அடியார்களே!

கொழும்பு மாநகரின் முகத்துவாரம் என்னும் ஸ்ரீயப்பதியில் அழகு லாவண்யங்களுடன் கூடிய ஸ்ரீ வைகுண்ட விரக்தனாய் ஸ்ரீ ஆனந்த கருட விஷ்வக்ஷேன பரிவார ஸமேதனாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பூமிநீளா பத்மாவதி கோதாநாயகி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு சுவாமிக்கு வசந்தோற்சவம் பெருவிழா நிகழும் மங்களகரமான கர வருஷம் சித்திரை மாதம் வெவ்வாய்க்கிழமை 06ம் நாள் (19-04-2011) சுவாதி நட்சத்திரமும், பிரதமை திதியும், சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் பின்வரும் அட்டவணைப்படி திருவிழா நடைபெற பெருமாள் திருவருள் கூடியுள்ளது. அவ்விழா காலங்களில் காலை, மாலை ஆகிய இருவேளைகளிலும் மூலவர், உற்சவர், விசேட அலங்காரங்களில் காட்சியளிப்பார். இவ்விழாக்காலங்களில் பக்தகோடிகள் அனைவரும் கலந்து கொண்டு எம்பெருமானின் திருவருளை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

19-04-2011 செவ்வாய்கிழமை காலை 8.30 மணிக்கு மகா கணபதி ஹோமமும், மாலை 6.00 மணிக்கு விஷ்வக்ஷேனர் வழிபாடு, எஜமான் சங்கல்பம், புண்ணியாக வாசனம், அனுக்ஞை, வாஸ்து சாந்தி என்பன நடைபெறும்.

| திகதி | கிழமை | நாள் | காலை | மாலை |
|---|---|---|---|---|
| 20.04.2011 | புதன் | 1ம் நாள் | கையேந்தல் | கருட வாகனம் |
| 21.04.2011 | வியாழன் | 2ம் நாள் | சர்ப்ப (சேஷ) வாகனம் | அன்ன வாகனம் |
| 22.04.2011 | வெள்ளி | 3ம் நாள் | யானை வாகனம் | முத்துப் பல்லக்கு |
| 23.04.2011 | சனி | 4ம் நாள் | சிம்ம வாகனம் | அன்ன வாகனம் |
| 24.04.2011 | ஞாயிறு | 5ம் நாள் | கற்பகவிருட்சக வாகனம் | கருட வாகனம் |
| 25.04.2011 | திங்கள் | 6ம் நாள் | மோகினி அவதாரம் | சர்ப்ப (சேஷ) வாகனம் |
| 26.04.2011 | செவ்வாய் | 7ம் நாள் | அனுமான் வாகனம் | யானை வாகனம் |
| 27.04.2011 | புதன் | 8ம் நாள் | சூரியப்பிரபை | சந்திரப்பிரபை |
| 28.04.2011 | வியாழன் | 9ம் நாள் | குதிரை வாகனம் | தங்கதேர் உள்வீதி வலம் |

### 29-04-2011 வெள்ளிக்கிழமை காலை 7.05 மணிக்கு இரதோற்சவம்

தேர்பவனி ஆலயத்திலிருந்து ஆரம்பித்து, முகத்துவார வீதி, எட்டியாவத்தை, கொச்சிக்கடை, செட்டியார்த்தெரு, மெயின்வீதி, மூன்றாம் குறுக்குத்தெரு, கெய்சர்வீதி, இரண்டாம் குறுக்குத்தெரு சென்று அதுவழியாக திரும்பி, கெய்சர் வீதி, மல்வத்தை வீதி, மெயின்வீதி, செட்டியார்த்தெரு, வழியாக வந்து, அன்று இரவு ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தில் எம்பெருமான் தேரில் எழுந்தருளியிருப்பார்.

### 30-04-2011 சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு இரதோற்சவம்

ஆலயத்திலிருந்து விசேட பூஜைகளை தொடர்ந்து தேர்பவனி ஆரம்பித்து ஜம்பட்டா வீதி, சங்கமித்த மாவத்தை, மகாவித்தியால மாவத்தை, ஜோர்ஜ் ஆர். சில்வா மாவத்தை, கொட்டாஞ்சேனை வீதி, கொலேஜ் வீதி, அலுத்மாவத்தை வீதி வழியாக ஆலயத்தினை வந்தடையும்.

01-05-2011 ஞாயிறு காலை 8.30 மணிக்கு மஹா தன்வந்திரி ஹோமம்
01-05-2011 ஞாயிறு காலை 11.30 மணிக்கு மஹா சுதர்ஷன தீர்த்தோற்சவம்
01-05-2011 ஞாயிறு மாலை 5.30 மணிக்கு ஸ்ரீ ஆஞ்சநேயர் விடையாற்றி

**20.04.2011 முதல் 01.05.2011 வரை தினமும் பகல் 12.30 மணிக்கு ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்படும்.**

இங்ஙனம் : ஆலய அறங்காவளர்கள்.

---

# LAUGFS LANKA GAS PLC
## லா'.ப்ஸ் லங்கா காஸ்

நிறுவனம் வழங்கும் புத்தாண்டு சலுகை

புதிதாக
5kg அல்லது 12.5kg காஸ் சிலிண்டர்
கொள்வனவு செய்பவர்களுக்கு

**காஸ்குக்கர் இலவசம்**



இச்சலுகை 07.05.2011 வரை

குறிப்பு:- எந்தவொரு லாப் காஸ் முகவரிடமும் பெற்றுக்கொள்ளமுடியும்.

பிரதம விநியோகத்தர்:
**பிள்ளையார் டிஸ்றிபியூட்டர்**
**31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**
T.P: 0772640715.

---



# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 25.12.1925
மறைவு: 18.03.2011

## முத்துப்பிள்ளை நாகலிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

கடந்த 18.03.2011 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்புத் தாயின் மறைவையறிந்து எங்களுக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் ஆறுதல் செய்தி அனுப்பியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும் எம்முடன் கூட இருந்து இறுதிச் சடங்கிலும் ஊர்வலத்திலும் பங்கு கொண்டவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (18.04.2011) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் பம்பலப்பிட்டி அரச தொடர்மாடி Welfare Association Community Centre Hall இல் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

21A, 3/1 Vandervert Place,
Dehiwala. T.P: 0112738978 (48,23,24)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

# கிருஸ்ணா அடகு சேவை

இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
பதிவு இல. : J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி (28.02.2010) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2011 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி (15.05.2011) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் தற்போதைய சந்தைப் பெறுமதிப்படி அடைவுத் தொகையைக் கூட்டிப் பெற்றுக்கொள்ளவும். அல்லது ஒரு பகுதிப் பணத்தைக் கட்டி புதுப்பித்துக்கொள்ளவும். இரண்டும் செய்யத்தவறின் 15.05.2011 ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இல.370, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5046 (48,20,25)

உரிமையாளர்

---

## சிகை ஒப்பனையாளர் சங்கக் கூட்டம்

வடமராட்சி, ஏப். 18

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் வடமராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடியில் உள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(ஒ-236)

---

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 20.04.2011 விநியோகிக்கப்படும்.

- ✱ றாஜீவ், நவாலி வீதி, ஆனைக் கோட்டை.
- ✱ பிள்ளையார் கால்நடைத் தீவன விற்பனை நிலையம் NO-27 பிரதான வீதி, நெல்லியடி.

T.P.NO. 2222867,
0776090926

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் பிரம்மஸ்ரீ பாஸ்கரக் குருக்கள் பஞ்சநத சர்மா



மண்ணில் மைந்தனாய் 29.09.1932
வானுறை தெய்வமாய் 29.04.2010

விகிர்தி சித்திரை வியாழன் பதினாறாம் நாள்
அபரபட்ச பிரதமைத் திதியில் - பன்னலஞ்சேர்
பஞ்சநத சர்மன் பார்வாழ்வை விட்டந்த
ஐயாறன் தாளடைந்தார் காண்.

'கணேச வாசம்',
அம்பலவாணர் வீதி, உடுவில்,
சுன்னாகம். (3243)

குடும்பத்தினர்.

---




---

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 27.07.1982
மறைவு: 17.04.2008

## அமரர் சிறில் சிறிமலா

அன்பு மகளே எங்கள் சிறிமலாக்குட்டியே
ஆண்டுகள் மூன்று கழிந்தாலும் ஆறவில்லையம்மா
- எங்கள் துயரம்

அழகான நேரங்களை வாழ்நாளில் எமக்களித்து
அழியாத சோகங்களை தந்ததேனோ
நீர் எம்முடன் வாழ்ந்த காலங்களை எண்ணி மகிழ்கையில்
மறைந்த உன் நினைவுகளே எம்மை கலங்க வைக்கின்றது
எல்லோருக்கும் இளையவளாய் பிறந்த கடைக்குட்டியே
எம் எல்லோருக்கும் முன் சென்ற மாயமென்ன!
உன் ஆன்மா சாந்திபெற நிதம் இறைவனை வேண்டுகின்றோம்

இல.01, 2 ஆம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம். (48,20,25)

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்

# கொழும்புத்துறை றொசாறியன் கேடயம் சுவிகரித்தது

கொழும்புத்துறை,ஏப்.18

சித்திரைப் புத்தாண்டையொட்டி கொழும்புத்துறை ஜெற்லைனேர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் கொழும்புத்துறை றொசாறியன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று வெற்றிக் கேடயத்தைச் சுவிகரித்தது.

கொழும்புத்துறை ஜெற்லைனேர்ஸ் அணிக்கும் கொழும்புத்துறை றொசாறியன் அணிக்கும் இடையில் இறுதிப்போட்டி நடைபெற்றது.

இரு அணிகளும் 6ஓவர் முடிவில் 52 ஓட்டங்களைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையானது. நடுவர்களால் விசேட மேலதிகப் பந்து பரிமாற்றம் (சுப்பர் ஓவர்) வழங்கப்பட்டது.

ஜெற்லைனேர்ஸ் அணி 6 பந்துகளில் 15 ஓட்டத்தைப் பெற்றது. றொசாறியன் அணி 5 பந்துகளில் 16 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

16 கழகங்கள் பங்குகொண்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் சிறந்த துடுப்பாட்ட வீரராக றொசாரியன் அணி வீரர் அ.சி.றொசானும் சிறந்த பந்து வீச்சாளராக ஜெற்லைனேர்ஸ் அணி வீரர் சி.நிரோசனும் தெரிவு செய்யப்பட்டார். (ஐ-135)

# சிறந்த வீரர்கள்

வலி.வடக்கு,ஏப்.18

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அபிவிருத்திக்குழு அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்திய 'ருவன்றி-20 கிரிக்கெட் போட்டி ஆட்டங்களில் கலந்துகொண்ட பாடசாலை அணிகள் ரீதியாக இடம்பெற்ற சிறந்த வீரர்கள் தெரிவில் 15 பேர் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

அவர்களின் விவரம் வருமாறு:

1.காலி வித்தியவேலாகக் கல்லூரி-நிமேஸ்கிறங்கா.

2.அனுராதபுரம் மத்திய கல்லூரி-ஹசன் வீரங்கா.

3.கொழும்பு இசப்பத்தான கல்லூரி-ரி.டனுஸ்ஹா.

4. மன்னார் சென்சேவியர் கல்லூரி-கே.தனராஜா.

5.வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி-எஸ்.புருசோத்தமன்.

6.யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி-எரிக்பிரதாப்.

7.கொக்குவில் இந்துக் கல்லூரி-கே.இராகுலன்

8.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி-ரி.அஜித்.

9.மானிப்பாய் இந்துக் கல்லூரி-கே.சேந்தன்.

10. கைதடி நவீல்ட் பாடசாலை-இ.பிரசாந்.

11.சுன்னாம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி-எஸ்.சஞ்சயன்.

12.யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி-எஸ்.சஞ்சீவன்.

13.அரியாலை கனகரத்தினம் மகா வித்தியாலயம்- கே.விதுசன்.

14.யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி-ரி.தர்சன்.

15.யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி-கே.நிருஜன். (த-86)



அரியாலை 92 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் வினோத உடைப் போட்டியில் கலந்துகொண்ட முன்பள்ளிச் சிறார்களின் வினோதத் தோற்றங்கள். (த-135)

# பயிற்சி முகாம் மாத இறுதியில்

யாழ்ப்பாணம்,ஏப்.18

தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையே வலயமட்ட மெய்வன்மைப் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றவர்களுக்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 25, 26, 27 ஆம் திகதி களில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் இதனைக் கவனத்தில் கொண்டு பயிற்சி முகாமுக்கு வீரர்களை அனுப்பி வைக்குமாறு சாவகச்சேரி உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் த.சிவகுமார் அறிவித்துள்ளார். (த-23)

# இணுவில் பொதுநூலகம் நடத்திய விளையாட்டுப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம்,ஏப்.18

இணுவில் பொது நூலகத்தின் ஒன்பதாம் ஆண்டு புனருத்தாரண நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**கரம் மகளிர் ஒற்றையர் பிரிவு:**

எஸ்.வித்தியராணி (முதலாமிடம்), எம்.எஸ்.ஷஹாமா (இரண்டாமிடம்), எல்.ஜதுகுலா (மூன்றாமிடம்).

**மகளிர் இரட்டையர் பிரிவு**

திருமதி ஜெ.ஜெயகாந்தன் வித்தியராணி -(முதலாமிடம்), எல்.யதுகுலா ஜெயமோகன் (இரண்டாமிடம்).

**ஆண்கள் ஒற்றையர் பிரிவு**

ஆர்.பாலமுரளி (முதலாமிடம்), எஸ்.செந்தூரன் (இரண்டாமிடம்), ஜெ.ஜெயகாந்தன் (மூன்றாமிடம்).

**ஆண்கள் இரட்டையர் பிரிவு**

ஆர்.பாலமுரளி- ஜெ.ஜெயகாந்தன் (முதலாமிடம்), எஸ்.செந்தூரன்-பீரதீப் (இரண்டாமிடம்), ரி.காந்தன்- ரி.அனுராம் (மூன்றாமிடம்).

**சதுரங்கம் பெண்கள்**

கு.மாதுமை (மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை), தி.மிதுஷா (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**ஆண்கள்**

ஜே.நிறோஜன் (யாழ்.இந்துக் கல்லூரி), அ.ஜெஸ்ரைன் (யாழ். இந்துக் கல்லூரி)

**மரதன் ஓட்டம்**

ம.மயூரன் (முதலாமிடம்), ந.சுகந்தன் (இரண்டாமிடம்), ர.லக்வின் (மூன்றாமிடம்).

**துடுப்பாட்டம்**

காந்தி நியூஸ்ரார் வி.க. (முதலாம் இடம்), திருக்குமரன் வி.க. (இரண்டாமிடம்)

(த-23)

# தென்மராட்சி வலய மென்வன்மைப் போட்டி; வெற்றிபெற்ற பாடசாலைகளின் வீரர்கள்

தென்மராட்சி,ஏப்.17

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற வலயமட்ட மெய்வன்மைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

**11 வயதுப் பிரிவு- 75 மீற்றர் ஓட்டம்**

சி.சிலக்ஷன் (போக்கட்டி அ.த.க பாடசாலை), ச.சங்கீத் (மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை), பா.சிந்துஷன் (கொடிகாமம் திருநாவுக்கரசு.ம.வி).

**11 வயது பிரிவு- 100 மீற்றர் ஓட்டம்**

சி.சிலக்ஷன் (போக்கட்டி அ.த.க பாடசாலை), ச.சங்கீத் (மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை), ப.கஜீத்தனன் (மட்டுவில் சந்திர மௌலீச வித்தி.).

**17 வயது பிரிவு- நீளம் பாய்தல்**

க.சாரங்கன் (சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.), க.சங்கீத் (மட்டுவில் தெற்கு அ.த.க. பாடசாலை), சி.ஜீவிந்தன்- (கைதடி முத்துகுமாரசாமி வித்தி.).

**11 வயது பிரிவு- உயரம் பாய்தல்**

சி.யதுசன்-கைதடி (முத்துகுமாரசாமி வித்தி), கு.லக்ஷன் (மட்டுவில் சரஸ்வதி வித்தி), ப.கஜீத்தனன் (மட்டுவில் சந்திர மௌலீச வித்தி).

**13 வயது பிரிவு ஆண்கள் 100 மீற்றர்**

சி.லோஜிதன் (சாவகச்சேரி இந்து கல்லூரி), சி.இராஜாஜி (வரணி ம.வி), உ.சுலெக்சன் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி).

**13 வயது பிரிவு- 200 மீற்றர்**

சி.இராஜாஜி (வரணி ம.வி), ச.விந்துஜன் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), கு. அகிலன் (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி).

**13 வயது பிரிவு (ஆண்கள்) நீளம் பாய்தல்**

ம.ஆதித்தன் (சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரி) , த.அபிதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தி.யோகாணந்தம் (சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி).

**13 வயதுப் பிரிவு(ஆண்கள்) - உயரம் பாய்தல்**

க.கேசவன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கு.நீயூர்சன் (கைதடி முத்துகுமாரசாமி வித்தி), என்.துவாகரன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), செ.கரிதரன் (மீசாலை விக்னேஸ்வர ம.வி).

**4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, நாவற்குழி ம.வி.

**15 வயதுப் பிரிவு(ஆண்கள்) 100 மீற்றர் ஓட்டம்**

தி.பிரகலாதன் (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), ஞா.றோகன் (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), செ.மிரோஜன் (வரணி ம.வி).

**15 வயதுப் பிரிவு - 200 மீற்றர் ஓட்டம்**

ஞா.றோகன் (சாவகச்சேரி டிறிபேர் கல்லூரி), கு.லக்ஜன் (சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி), தெ.யதுர்சன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**15 வயதுப் பிரிவு - 400 மீற்றர் ஓட்டம்**

கு.லக்ஜன் (சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி), தெ.யதுர்சன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), உ.விதுசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**15 வயதுப் பிரிவு தடை தண்டல்**

தெ.யதுர்சன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எம்.ஸ்ரிபன்ராஜ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எம்.முரளிதரன் (நாவற்குழி ம.வி).

**15 வயதுப் பிரிவு- நீளம் பாய்தல்**

எம்.முரளிதரன் (நாவற்குழி ம.வி), தி.பிரகலாதன் (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), கு.லக்ஷன் (சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி).

**15 வயதுப் பிரிவு- உயரம் பாய்தல்**

ஞா.றோஜான் (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), தெ. அனுஜன் (குடமியன் அ.த.க பாடசாலை), சி.ஜீவிசாந் (கைதடி குமாரசாமி வித்தி), சி.இளங்குமரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**15 வயதுப் பிரிவு குண்டு போடுதல்**

தி.பிரகலாதன் (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), ர.கோபிகரன் (மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்), பா.ஜெனன் (மட்டுவில் கமலாசனி ம.வி).

**15 வயதுப் பிரிவு தட்டு ஏறிதல்**

பா.ஜெனன் (மட்டுவில் கமலாசனி ம.வி), சி.கருப்பிரியன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), து.துசிபன் (மறவன் புலோ சகலகலாவல்லி வித்தி).

**15 வயதுப் பிரிவு ஈட்டி ஏறிதல்**

ம.ஸ்ரீபன்ராஜ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.நிரோஜன் (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), இ.கோபிகரன் (மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்).

**4X100 மீற்றர் அஞ்சல் ஓட்ட நிகழ்வு**

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கச்சாய் அ.த.க பாடசாலை.

**4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கச்சாய் அ.த.க பாடசாலை.

(த-23-207) *(தொடரும்)*

# பெண்களுக்கான கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.18

தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட விளையாட்டுப் போட்டித் தொடரின் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி நாளை திங்கட்கிழமை இன்று 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது என உடற்கல்வி உதவிப்பணிப்பாளர் த.சிவகுமார் அறிவித்துள்ளார். (த-23)

# யாழ்.வலயக் கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ்.வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி இன்று திங்கள், நாளை செவ்வாய் ஆகிய இரு தினங்களும் ஆவரங் கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.


பங்குபற்றவிருக்கும் பாடசாலைகள் உரிய நேரத்துக்கு மைதானத்தில் சமுகம் கொடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-23)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மண் மகிழ 20 • 02 • 1952

கண் நெகிழ 15 • 05 • 2006



**அமரர் சிதம்பரப்பிள்ளை கிருஷ்ணசாமி**
திதி: பிரதமை

அன்பான எங்கள் அப்பாவே
ஆண்டு ஐந்து கடந்து விட்டாலும்
சொல்விட முடியாத துயரம் அப்பா
உங்களைப் பிரிந்து அநாதையானோம் அப்பா
கண்ணீரோடு காலமெல்லாம்
காத்திருப்போம் அப்பா
வரவேண்டும் மீண்டும் எங்கள் அப்பாவாக.

நிரந்தர முகவரி-
ஐங்கரன் காடிவளை, இளவாலை.
தற்காலிக முகவரி-
லவ்லேன், உடுவில். (3275)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 • 07 • 1942

மறைவு 29 • 04 • 2010



**அமரர் கணேசு தேவராசா**
திதி: பிரதமை (18.04.2011)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து-இன்று
வானுறையும் தெய்வமாகி விட்ட
அன்புத் தந்தையே!
எம் இல்லத்துப் பேரொளியே
நீங்கள் மறைந்தாலும் உங்கள்
நினைவுகள் என்றும் மறையாது
என்றும் பரமன் பாதத்தில்
உங்கள் ஆத்மா அமைதி கொள்ளப்
பிரார்த்திக்கின்றோம்.

சுதுமலை வடக்கு,
ஈஞ்சடி வைரவர்கோயிலடி,
மானிப்பாய். (3271)

என்றும் நினைவில்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### *சின்னத்தம்பி நேசம்மா*



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட நேசம் என்று அன்பாக அழைக்கப்படும் சின்னத்தம்பி நேசம்மா 12.04.2011 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், அப்பையா(J.P), காலஞ்சென்ற மாகாலிங்கம் (யாழ் மாநகர சபை ஊழியர்) மற்றும் ரவி (பிரான்ஸ்), ஜெயம் (கொலண்ட்), சுரேஸ் (பிரான்ஸ்), அஜந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற விமலாதேவி மற்றும் மகேஸ்வரி(பட்டு) செல்வராணி (பிரான்ஸ்), சுகந்தினி (கொலண்ட்), நித்தியா (பிரான்ஸ்), பாலபாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான அப்பையா, ராமுப்பிள்ளை, தங்கம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தர்மராசா, ராசாத்தி மற்றும் தேவா, சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2011) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி மகாலிங்கம் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

மணி மண்டபம்,
நவாலி தெற்கு, மானிப்பாய். (3257)

தகவல்:
வே.தேவா (பெறாமகன்)

# நாய் குறுக்கே ஓடியதில் மோ.சைக்கிள் மோதி இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 18

மோட்டார் சைக்கிளில் சென்றவர் குறுக்கே நாய் ஓடியதால் அதனைத் தவிர்ப்பதற்காக வீதியின் மறுபக்கம் நகர்த்திய சமயம் அந்த வழியே சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இருவர் மீது மோதுண்டார். அவர்கள் இருவரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் கோண்டாவில் பகுதியில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் இணுவில் கந்தசுவாமி கோயிலடியைச் சேர்ந்த லோ.இந்துசன் (வயது-19), பி.சுரேஷ்(வயது-19) ஆகியோருக்கே கால்களில் காயம் ஏற்பட்டது.

விபத்தையடுத்து உடனடியாக இணுவில் வைத்தியசாலைக்குச் சென்ற போது அது மூடப்பட்டு இருந்ததால் அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெற்றனர். (ஒ-4)

## விபத்தில் காயம்

கிளிநொச்சி, ஏப். 18

முரசுமோட்டை செல்லையா கடைச் சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் தலையில் படுகாயமடைந்த நிலையில் ஒருவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் மருதங்குளம் பகுதியிலிருந்து மண் ஏற்றி வந்த 'டிப்பர்' வாகனம் ஒன்றுடன் விசுமடுப் பகுதியிலிருந்து பரந்தன் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த புளியம்பொக்கணை நாகேந்திரபுரத்தைச் சேர்ந்த ராஜதுரை சந்திரமௌரீசன் (வயது-42) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-6-323)

## மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லையாம்

**தேரர் கூறுகின்றார்**

கொழும்பு, ஏப். 18

நாட்டின் பிரஜைகளைப் பாதுகாப்பதற்கான மனிதாபிமான நடவடிக்கையை இலங்கை மேற்கொண்டதாகவும் அந்த நடவடிக்கையின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை என்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் தேரர் உடகம புத்தரகித்த தேரர் கூறியுள்ளார்.

பயங்கரவாத அமைப்பொன்று நாட்டு மக்களைப் படுகொலை செய்யும் போது பொறுப்புள்ள அரசு செயற்படாமலிருக்க முடியாது. இவ்வன்முறைச் சக்திகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஏனைய அரசுகளைப் போலவே இலங்கை அரசும் நடவடிக்கை மேற் கொண்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஏப்.18

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியில் இன்று திங்கட்கிழமை நடைபெற விருந்த பெற்றோர் மாணவர் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் இ.ராஜமகேந்திரன் அறிவித்துள்ளார். (14-72)

## உடன் ஆள் சேர்ப்பு

உணவு உற்பத்தி நிறுவனத்துக்கு ஆண்-பெண் இருபாலாரும் உடன் தேவை.

பெண்கள் சிறுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்களாகவும், ஆண்கள் நீர்வேலி, சிறுப்பிட்டி, உரும்பிராய்ப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

எதிர்வரும் 19.04.2011 திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் மட்டும் நேர்முகப் பரீட்சை இடம்பெறும்.

இடம்: HEMA INDUSTRY சிறுப்பிட்டி மேற்கு,
(ஞானவைரவர் கோயில் அருகில்)
தொடர்பு: 0779594326

(இ/577715)(34)

## இந்தியா வீசா விண்ணப்பம்
(Online Visa Application)

இந்தியா வீசா பெறுவதற்கான Online விண்ணப்பப் படிவங்களை உடனுக்குடன் அனுப்பிக்கொள்ளலாம்.

ARRUL GLOBAL EXPRESS
T.P : 0212226113
01, பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.
இந்திய வீசா அலுவலகத்திற்கு அருகாமை

## காணவில்லை



விளானை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட **காலஞ்சென்ற V.C. சிவஞானத்தின்** அன்புத் தாய்

**திருமதி தங்கம்மா சுப்பிரமணியம்**

கடந்த 15.04.2011ஆம் திகதி தொடக்கம் காணவில்லை. இவர் இறுதியாக வெள்ளை நிறச் சேலையும், வெள்ளை நிறச் சட்டையும் அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல்களினை அறிந்திருப்பின் கீழ்க் கண்ட தொலைபேசி எண்களுடன் தொடர்புகொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

விளானை, களபூமி,
காரைநகர். (3273)

தகவல்:
சிவஞானம் கபிலன்-
0778329499, 0771520647

## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் பிரதேச செயலக சமூக சேவைகள்
உத்தியோகத்தர் **வே. தயேந்திரன்**
அவர்களின் அன்புத் தந்தை
**வேலுப்பிள்ளை வேதநாயகம்**
[ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், வடபிராந்திய போக்குவரத்துச் சபை-ஆளணி லிகிதர்]

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
வலி.கிழக்கு பிரதேச செயலகம், கோப்பாய்.
(C/577713)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 05 • 10 • 1947

இறைவன் அடியில் 18 • 04 • 2004



**அமரர் சூசைமுத்து அன்ரனி**

ஆண்டுகள் ஏழு சென்றாலும் அழியவில்லை
அப்பா உங்கள் அன்பு மொழிகள்!
தரணியில் இன்று உம்மை இழந்து தவிக்கின்றோம்
உங்கள் நினைவுகளை இன்றும் எங்கள்
நெஞ்சங்களில் சுமந்து விழிநீர் சொரிகின்றோம்.

இல.5, இராசாவின் தோட்டம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (3272)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 26 ஆவது பிறந்தநாள் நினைவும் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



முத்தாக 18.04.1985

வித்தாக 02.01.2009

செல்வி
**பிறிந்தாஜினி வல்லிபுரநாதன்**

எமது பிருந்தாவனத்தின் மலரே!
சூடுமுன் வாடிவிட்டதேனம்மா?
தினமும் கண்ணீரில் கரைகின்றோமே- பிறிந்தாக் குட்டியே
எம் சோகம் தீர்க்க வாராயோ?
சிந்தும் விழிகளுடன்
குடும்பத்தினர்

(3270)

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை

72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்

விசேட சலுகை



லண்டன், சுவிஸ் 450/=
கனடா 500/=

லண்டன் 1Kg 750 /=
கனடா, அமெரிக்கா, பிரான்ஸ்,சுவிஸ், டென்மார்க்
ஜேர்மனி, இத்தாலி, நோர்வே
1Kg 900 /=

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service
இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். T.P : 021 222 6113

### வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும்

# கூட்டமைப்பு வேட்பாளர்களின் வீடுகளில் தேடுதல்; அத்துமீறல் நடவடிக்கைகளுக்குக் கடும் கண்டனம்

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்.18

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களின் வீடுகளில் படையினர் தேடுதல் நடத்துவதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த ஒருவாரகாலமாக வேட்பாளர்களில் அறுவரின் வீடுகளுக்குச் சென்ற படையினர் அங்கு சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் வேட்பாளர்கள் மத்தியில் அச்சநிலை தோன்றியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக விசேட கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் தலைவர்களான சி.வி.கே. சிவஞானம், எப்.எக்ஸ். குலநாயகம், தொகுதிக் கிளைத் தலைவர் க. கௌரிகாந்தன், செயலாளர் எஸ்.கஜதீபன் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

படையினர் மேற்கொள்ளும் இந்த அத்துமீறல் நடவடிக்கையைக் கண்டிக்கும் அதே சமயம், இந்தத் தேடுதல் நடத்துவதன் நோக்கம் குறித்து தெளிவுபடுத்துவது என்று அங்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கவனத்துக்குக் கொண்டு வருவது என்றும் முடிவு செய்யப்பட்டது. (ஒ-ஐ)

# மன்னாரில் பொலிஸ் காவலில் இருந்தவரை பலவந்தமாக இழுத்துச் சென்றாராம் அமைச்சர்

மன்னார், ஏப்.18

பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் மன்னாரைச் சேர்ந்த இளைஞரை பொலிஸார் கைது செய்த போதும் அமைச்சர் ஒருவர் இதில் தலையிட்டு அவரை அழைத்துச் சென்றுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

மன்னார் நகரில் ஓட்டோ சாரதியாக உள்ள 25 வயது நிரம்பிய அந்த இளைஞர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவரெனக் கூறப்படுகிறது.

இவரை நீதி மன்றத்தின் உத் தரவின் பிரகாரம் மன்னார் பொலி ஸார் தேடி வந்தனர். இந்த நிலை யில் நேற்று முன்தினம் மாலை இவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் இன்றுதிங்கட்கிழமை முன்னிலைப்படுத்துவதற்காக மன்னார் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதேசமயம் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் குறிப்பிட்ட அமைச்சர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அவரை விடுவிக்குமாறு கேட்டுள்ளார்.

ஆனால், இதற்குப் பொலிஸார் மறுப்புத் தெரிவித்தனர். இதனால் ஆத்திரமடைந்த பொலிஸாரைத் தகாத முறையில் ஏசியதோடு குறித்த நபரையுரையும் பொலிஸாலின் அனுமதியின்றி அழைத்துச் சென்றுள்ளார் அமைச்சர். இந்தச் சம்பவம் மன்னாரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. (ஒ-க-601)

# பர்மா நாட்டு மீனவர் பதினொருவர் திருமலைக் கடற்பரப்பில் தத்தளிப்பு

### காப்பாற்றப்பட்ட அவர்கள் கடற்படையிடம்

திருகோணமலைக் கடற் பரப்பில் 150 கடல் மைல் தூரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 11 பர்மா நாட்டு மீனவர்கள் கடும் காற்றில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்த போது அவர்களை நீர்கொழும்பு மீனவர்கள் காப்பாற்றினர்.

நேற்றுமுன்தினம் பர்மியா மீனவர்கள் தொழில் செய்து கொண்டிருந்த போது திடீரென வீசிய கடும் காற்றில் சிக்கிய அவர்களது படகுகள் சேதமடைந்தன. அவர்கள் தத்தளித்துக் கொண்டிருந்த போது இதனைக் கண்ட நீர்கொழும்பு மீனவர்கள் அவர்களைக் காப்பாற்றி கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

கடற்படையினர் தமது வைத்தியசாலையில் வைத்து அவர்களுக்குச் சிகிச்சை அளித்த பின் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் திருகோணமலை நீதிவான் யு.எல். ஏ அங்கர் முன் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் அவர்களை பர்மிய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். இதன்படி பர்மிய தூதரகஅதிகாரிகள் அவர்களை நேற்றுப் பொறுப்பேற்றனர். (ஒ-ஐ-150)

# மாணவரின் கல்விச் சுற்றுலாவுக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஏப்.18

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்களின் நாடளாவிய ரீதியிலான கல்விச் சுற்றுலாவுக்கு ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஒரு லட்சத்து 12 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவ, மாணவிகள் நாடளாவிய ரீதியில் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# மீண்டும் வீறுகொண்டு எழுவாரா வைகோ?

இந்தியாவில் தமிழ்நாடு மாநில அரசு தேர்தல் முடிவடைந்த நிலையில் எந்தக் கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றப் போகிறது என்பது தெரியாத நிலையில் உள்ளது.

மாநிலத்தின் முக்கிய அரசியல் கட்சிகளான ஆளும் தி.மு.க, அ.தி.மு.க என்பன கூட்டணிகளை அமைத்துத் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைகளையும் பூர்த்தியாக்கி தேர்தலும் முடிவடைந்துள்ளது.

**தேர்தலில் போட்டியில்லை**

ஜெயலலிதா அணியில் முக்கிய இடம்பெற்றி ருந்த வைகோவின் ம.தி.மு.க தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கியுள்ளதாக அறிவித்திருந்தது. இந்தத் திடீர் அறிவிப்பானது பலரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்திருந்தது. ஆனால் வைகோவின் நிலைப்பாடுகள் இதனை விடுத்து எந்த முடிவுக்கும் வர முடியாது என்பதுதான் யதார்த்தம் ஆகும்.

காங்கிரஸ் கூட்டணியில் ம.தி.மு.க ஒருபோதுமே இடம் பெறமாட்டாது. மூன்றாவது அணிக்கும் வாய்ப்பில்லை. இனிமேல் ஜெயலிதாவுடன் எந்த உறவும் இல்லை என்ற ம.தி.மு.க செயற்குழுவின் தீர்மானம் வேறு. தனித்துப் போட்டியிட்டால் கட்சியின் எஞ்சியிருக்கும் மரியாதையும் காற்றில் பறந்து விடும் என்ற அச்ச உணர்வு. இவை யாவற்றையும் ஆற அமர யோசித்து வைகோ எடுத்த முடிவுதான் நல்லது. உண்மையில் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இதை ஒரு நல்ல முடிவென்றே கூற வேண்டும்.

**தி.மு.கவின் போர்வாள்**

ஒரு காலத்தில் கலைஞர் கருணாநிதியின் செல்லப்பிள்ளையாக வலம் வந்தவர் வைகோ. தி.மு.க.வின் 'போர்வாள்' என்று இவர் அழைக்கப்பட்டார். அதற்கேற்றாற்போல அவரது செயற்பாடும் அனல்பறக்கும் பேச்சுக்களும் அமைந்திருந்தன. கலைஞரின் பிள்ளைகள் அப்போது அரசியலில் போதிய முதிர்ச்சி பெற்றிருக்கவில்லை. முரசொலி மாறன் மட்டும் டெல்லி அரசியலைக் கையாண்டு வந்தார். வைகோவும் 'குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்ட' விரும்பாது டெல்லி அரசியலிலேயே தனது முத்திரையைப் பதித்து வந்தார். அவரது சரளமான நாடாளுமன்ற உரைகள் அனைவரையும் கவர்ந்தன. ஒரு வழக்கறிஞரான வைகோ தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த புலமையுடையவராகத் திகழ்ந்தார்.

வைகோவின் வளர்ச்சி கருணாநிதி குடும்பத்தினரின் கண்களை உறுத்தியது. எங்கே இவன் தமக்குப் போட்டியாக வளர்ந்து விடுவானோ என்ற அச்ச உணர்வு அவர்களை ஆட்டிப் படைத்தது. இவரை எப்படியாவது ஓரம் கட்டவேண்டும் என்ற எண்ணம் அவர்களின் மனங்களில் உதயமாகியது.

**வைகோவுக்குக் கடிவாளம்**

டெல்லியில் முகாமிட்டிருந்த முரசொலிமாறன் வைகோவுக்குக் கடிவாளமிட ஆரம்பித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வெளிநாட்டுப் பயணங்களின் போது வைகோ திட்டமிடப்பட்டு ஒதுக்கப்பட்டார். மாறனின் கைங்கரியமே இது வென்பதை வைகோ பின்னாளில் அறிந்துகொண்டார்.

கருணாநிதிக்குப் பிறகு வைகோதான் கட்சியின் வாரிசாக வருவாரென்ற ஊகங்களும் அப்போது நிலவின. அதற்கான திறமைகளும் அவரிடம் இருந்தது. ஆனால் கருணாநிதி விரித்த வஞ்சக வலையில் தான் சிக்குவாரென்பதை வைகோ ஒருபோதும் எண்ணியிருந்ததில்லை.

**பிரபாகரனுடன் சந்திப்பு**

இலங்கையில் கொடிய யுத்தம் நடந்து கொண்டிருந்த போது வைகோ இரகசியமாக வன்னிக் காட்டுக்குள் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார் எனத் தகவல்கள்வெளியாகின. இதைக் கருணாநிதி தமக்குச் சாதகமாக்கிக் கொண்டார். தன்னைக் கொல்வதற்கு விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளனர் என ஒரு புரளியைக் கிளப்பினார். இத்தகைவர்களைக் கட்சியினதோ அல்லது தனதோ அனுமதியில்லாமல் வைகோ தொடர்பு கொண்டமை மாபெரும் துரோகம் என நாடகமாடினார்.

இதன் விளைவாக வைகோ தி.மு.கவிலிருந்து தூக்கி வீசப்பட்டார். ம.தி.மு.க. உருவானது. உண்மையில் பிரபாகரனுடன் தமக்குள்ள மனக்கசப்புக் காரணமாகவே கருணாநிதி புலிகளை வெறுத்தார். முன்னாள் தமிழக முதலமைச்சர் எம். ஜீ. ஆர். புலிகளுக்கு முழு ஆதரவு வழங்கியமையே கருணாநிதியின் புலிகள் எதிர்ப்புப் போருக்குக் காரணமாகியது. இவையெல்லாம் பழைய கதைகள். ஆனால் இதற்குப் பின்னர் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் எனக் கூறி ஜெயலலிதாவால் வைகோ சிறையில் அடைக்கப்பட்ட போது கருணாநிதி நேரில் சென்று சுகம் விசாரித்தார். இதனால் கருணாநிதிக்கும் வைகோவுக்கும் இடையே நிலவிய மனக்கசப்பு சிறிது மறைந்தது. ஆனால் ம.தி.மு.கவை உடைப்பதற்கு கருணாநிதியால் தோண்டப்பட்ட புதைகுழிதான் இதுவென்பது வைகோவுக்குப் பின்னாளில் தான் தெரியவந்தது.

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது ம.தி.மு.க வுக்கு ஒதுக்குவதாகத் தெரிவித்த தொகுதிகளின் எண்ணிக்கையைக் கடைசி நேரத்தில் வேண்டுமென்றே கருணாநிதி குறைத்தார். இதன் மூலம் வைகோவுக்குக் கடுப்பேற்ற வேண்டுமென்பதே அவரது சூழ்ச்சித் திட்டம். அவர் எண்ணியதே நடந்தது. வைகோ தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகினார். ம.தி.மு.கவிலிருந்த பலர் தி.மு.க. பக்கம் தாவினர். இது வைகோவைப் பலவீனப்படுத்துவதில் கருணாநிதி பெற்ற முதல்வெற்றி. இதன் விளைவாக விருப்பமில்லாமலேயே வைகோ ஜெயலலிதாவுடன் கைகோர்த்தார். இப்போது பிரிந்து சென்று விட்டார்.

**ஈழத் தமிழரின் ஆதரவாளர்**

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அன்றிலிருந்து இன்றுவரை வைகோ அவர்கள் மீது தீராத அக்கறை காட்டுபவர். தமது சொந்த இலாப நட்டங்களை ஒதுக்கிவிட்டு ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பவர். பக்கபலமாக நிற்பவர். விடுதலைப்புலிகள் மீது தீராத பாசமுடையவர். இலங்கையில் தமிழ் மக்களுக்கென ஒரு நாடு அமைய வேண்டும் எனக் கனவு கண்டு வந்தவர். எத்தகைய இடர்கள் வந்தபோதிலும் தாம் கொண்ட இலச்சியத்திலிருந்து இம்மியளவும் விலகாதவர். புலிகளின் தலைவர் பிரபாகரன் இறந்துவிட்டதாகச் செய்திகள் வெளிவந்த போது அவர் தீராத சோகத்துடன் கதறி அழுதார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய ஓர் இலட்சியவாதி, நேர்மையாளன் அரசியலிலிருந்து ஓரம்கட்டப்படுகின்றமை இந்திய அரசியலில் ஒன்றும் புதுமையானதல்ல.

**ராஜராஜன்**

**வீறுகொண்டு எழுவாரா?**

ஆனால் இந்திய அரசியலில் வைகோவின் தளர்ச்சியானது இந்தியாவிலுள்ள ஈழ ஆதரவாளர்களின் எழுச்சியில் ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இந்தத் தேர்தலுக்குப் பிறகு வைகோ மீண்டும் வீறுகொண்டு எழுவாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




யாழ். மாவட்டத்தில் தெளிவான வானிலையும் ஏனைய மாவட்டங்களில் மழை பெய்வதற்கான சாத்தியமும் உள்ளது.

# மன்னார் அரிப்பு பகுதி மீனவர்களுக்கு கடற்படையினரால் புதிய நிபந்தனைகள்

கொழும்பு, ஏப்.18

மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அரிப்பு கிராம மீனவர்கள் மீது கடற்படையினர் தற்போது புதிய நிபந்தனைகளை விதித்துள்ளனர் என மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 14 ஆம்திகதி முதல் வீச்சு வலை, தங்கூசி வலை, சுருக்கு வலை போன்ற வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் மேற்படி வலைத் தொகுதிகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த மீனவர்கள் தொடர்ந்து அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

கடலுக்குள் செல்லும் மீனவர்களுக்கு கடற்படையினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ''பாஸ்' நடைமுறையிலும் புதிய மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக வழங்கப்பட்டு வந்த பாஸ், மீனவர் ஒருவர் ஒரு நாள் முழுவதும் அதனை வைத்து தொழிலில் ஈடுபட முடியும். ஆனால், தற்போது நடைமுறைப்படுத் தப்பட்டுள்ள புதிய பாஸ் நடைமுறையின் படி ஒரு நாளைக்கு மீனவர் ஒருவர் எத்தனை தடவை கடலுக்குச் சென்றாலும் அத்தனை தடவையும் கடற்படையினரிடம் சென்று பாஸ் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் தாங்கள் உரிய நேரத்திற்குத் தொழிலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது மட்டும் இன்றி அல்லிராணிக் கோட்டை அமைந்துள்ள பகுதிக்கு மீனவர்கள் செல்ல முடியாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தவறி அப்பகுதிக்குச் செல்லும் மீனவர்களைக் கடற்படையினர் தாக்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை மட்டுமே கடலில் சென்று மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நேரக் கட்டுப்பாட்டை மீறும் மீனவர்கள் மறுநாள் காலை கரை திரும்ப வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கெடுபிடிகளால் மீனவர்கள் தொடர்ந்தும் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இரவில் மீனவர்களுக்குக் கடலில் திடீர் சுகவீனம் ஏற்பட் டால் கரைக்கு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேநேரம், தென்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையின மீனவர்களுக்கு எந்த நேரமும் அரிப்புக் கடலில் எவ்வித தடங்கலுமின்றி மீன்பிடிக்க கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யுத்தம் முடிவடைந்து நாட்டில் மீனவர்கள் எதுவித தடைகளும் இன்றித் தமது தொழிலைச் செய்து வருகின்றனர் என அரசியல் வாதிகளும், அமைச்சர்களும் கூறிவரும் போது தமக்கு ஏன் இந்தக் கெடுபிடிகள் என மீனவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை அநாகரிகமானது

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கண்டனம்

கொழும்பு, ஏப்.18

இலங்கையின் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. அறிக்கை விடுத்திருப்பது அநாகரிகமான செயலாகும். ஐ.நாவின் இந்தச் செயலுக்கு எதிராக நாளை தீர்க்கமான முடிவு ஒன்று எடுக்கப்படும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதாகும்.

போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் எனக் கூறிக் கொண்டு எமது நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவது எமது நாட்டின் இறையாண்மையைப் பாதிக்கும்.

இதற்கு இடம் அளிக்க முடியாது. இந்த விடயத்தில் ஐ.நா. சபைக்கு எதிராகத் தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டியது அவசியமாகும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவிக்கின்றார். (ஒ-சி)

## சீரணி நாகபூஷணி அம்மன் தேரில் பவனி: கொட்டும் மழைக்கு மத்தியிலும் வடம் பிடித்து இழுத்த அடியார்கள்



வலி.வடக்கு, ஏப். 18

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்தக் தேர்த் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு கொட்டும் மழையிலும் மிகவும் விமரிசையாக இடம்பெற்றது. காலையில் இடம்பெற்ற பூசைகளைத் தொடர்ந்து வசந்தமண்டபப் பூசையும் யாகபூசையும் இடம்பெற்றதுடன் சுவாமி தேரில் ஆரோகணித்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

சங்கானை, மானிப்பாய், சண்டிலிப்பாய் எனப் பல இடங்களில் இருந்தும் காவடிகள், தூக்குக் காவடிகள், பறவைக்காவடிகள் அடுத்தடுத்து ஆலயம் நோக்கி வந்தன. பெண்கள் பால் குடம் மற்றும் கரகம் எடுத்து தமது நேர்த்திகளை நிறைவேற்றினர்.

மூன்று அழகிய தேர்களில் பிள்ளையார், முருகன் - வள்ளி தெய்வானை மற்றும் நாகபூஷணி அம்பாள் வீதியுலா வந்து அடியவர்களுக்குக் காட்சியளித்தனர். திடீரென ஆரம்பித்த மழை தொடர்ந்து பெய்தமையால் தேர்த்திருவிழாவில் கலந்துகொண்ட அடியவர்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது 'அரோஹரா' கோஷத்துடன் தேர் வடம் பிடித்து இழுத்தனர். (ஒ-86)

## புத்தளம் நகரின் மத்தியில் பொழுதுபோக்கு கடற்கரை

புத்தளம், ஏப். 18

புத்தளம் நகரின் மத்தியில் சிறந்த பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய கடற்கரைப் பிரதேசமொன்றை அமைக்க புத்தளம் நகரபிதாவும், சுதந்திரக் கட்சி அமைப்பாளருமான கே.ஏ.பாயிஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என நகரசபை பேச்சாளர் எஸ்.எச். நியாஸ் தெரிவித்தார்.

இந்தக் கடற்கரைப் பகுதி புத்தளம் மத்தியிலிருந்து கொழும்பு வீதியில் சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்துக்கு அமையும் என்றும், இதற்கான பணிகள் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், மாவட்ட மக்களுக்குப் பொழுது போக்கு அம்சங்களுடன் கூடிய கடற்கரைப் பிரதேசம் இல்லாத குறை தீர்த்து வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## சங்கானை தும்புத் தொழிற்சாலை மீது மலக்கழிவுகளை வீசிய ஐவர் கைது!

வலி.மேற்கு, ஏப். 18

சங்கானை பட்டின சபை வீதியில் அமைந்துள்ள அரச தும்புத் தொழிற்சாலைக்குள் மலக்கழிவுகளை வீசி எறிந்த ஐந்து பேரை மானிப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

இந்தக்கட்டடத்துக்கு அருகில் வலி. மேற்கு கலாசார மண்டபம் அரை குறை நிலையில் உள்ளது. இந்தக் கட்டடத்தில் இரவு 7 மணிக்குப் பின்னர் தினமும் மது அருந்தும் சிலர் அவ்வழியால் வருவோர் போவோரை கேலி, சேஷ்டை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது வழமையான நிகழ்வாகிவிட்டது.

இவர்களது இந்த நடவடிக்கை தொடர்ந்து வந்ததால் இதுபற்றி மானிப்பாய் பொலிஸாருக்கு வலி. மேற்கு பிரதேச செயலர் மூலம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இடையிடையே பொலிஸார் வந்து இவர்களை எச்சரித்துச் செல்வார்கள்.

இந் நபர்கள் குறிப்பிட்ட தொழிற்சாலையில் வேலைசெய்யும் இளம்பெண்களுடனும் பகல் வேளைகளில் தொந்தரவு செய்து வந்துள்ளனர். அவர்கள் தமது எதிர்ப்பைக்காட்டி இதுபற்றி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்வோம் எனவும் கூறியுள்ளார்கள்.

இதனால் ஆத்திரமுற்ற இந்த நபர்கள், இந்தத் தொழிற்சாலைக்குள்ளும் உட்செல்லும் வாசலிலும் மலக்கழிவுகளைப் போட்டு விஷமத்தனம் செய்துள்ளனர். அதை அடுத்தே சந்தேகத்தின் பேரில் ஐவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஒ-ஐ)

## கிராம அலுவலர் மூவருக்கு விருது

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். மாவட்டத்தில் வினைத்திறனாகச் செயலாற்றிய கிராம அலுவலர்கள் மூவருக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

மறைந்த கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜா நினைவாக மாவட்ட மட்டத்தில் சிறந்த கிராம அலுவலருக்கான 2010 ஆம் ஆண்டுக்கான விருதுக்கு 15 பிரதேச செயலாளர் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து மூன்று கிராம அலுவலர்கள் போட்டி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான விருதும் சான்றிதழும் விரைவில் வழங்கப்படவுள்ளன.

மாவட்ட மட்டத்தில் 2009 ஆம் ஆண்டில் இருந்து ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த விருது வழங்கப்பட்டு வருகின்றது.

2010 ஆம் ஆண்டில் இரண்டாவது தடவையாக இந்த ஞாபகார்த்த விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள கிராம அலுவலர்கள் மூவரின் விவரம் வருமாறு:-

முதலாமிடம் - உடுவில் பிரதேச செயலக கிராம அலுவலர் இ.எயூஜின் மசனட்.

இரண்டாமிடம் - கரவெட்டி பிரதேச செயலக கிராம அலுவலர் பா.லலித்.

மூன்றாமிடம் - தெல்லிப்பழை பிரதேச செயலக கிராம அலுவலர் கே.பூபாலசிங்கம்

விரைவில் விருது வழங்கும் இடம் காலம் என்பன அறிவிக்கப்படும். (ஒ-302)

## புத்தாண்டு கால வீட்டு விபத்துகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

தமிழ், சிங்கள புதுவருட காலத்தில் வீட்டு விபத்துகளின் எண்ணிக்கை கடந்த வருடத்தை விட 14 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதம தாதியான புஷ்பா ரம்யணி சொய்ஸா தெரிவித்துள்ளார்.

இதன்படி ஏப்ரல் 14ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதிவரையிலான காலப்பகுதிக்குள் சுமார் 114 பேர் வீட்டு விபத்துகளினால் ஏற்பட்ட காயங்களுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர் என்று அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

சித்திரைப் புத்தாண்டு காலத்தில் மொத்தமாக 706 பேர் காயங்களுக்காக சிகிச்சை பெற்றனர். இந்த எண்ணிக்கை கடந்த வருடத்தில் இதே காலப்பகுதியில் காயங்களுக்காக சிகிச்சை பெற்றோரின் எண்ணக்கையை விட 7 சதவீதம் குறைவாகும். பாதுகாப்பான முறையில் பட்டாசு கொளுத்துவது தொடர்பாக தேசிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் காரணமாக பட்டாசு விபத்துகளால் காயமடைந்து சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி காணப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் வீதி விபத்துகளின் எண்ணிக்கை 32 சதவீதத்தால் குறைவடைந்துள்ளன. சுமார் 106 பேர் மாத்திரமே வீதி விபத்துகளால் காயமடைந்து சிகிச்சை பெற்றனர் - என்றார்.

இதேவேளை, களுபோவில போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜயசிங்க கூறுகையில், புத்தாண்டு நாட்களில் 399 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றனர் என்றும், 82 பேர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றனர் என்றும் தெரிவித்துள்ளார். (05)

# சர்வதேச கண்காணிப்புடனான அதிகார அலகு வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கவேண்டும்

**ஐ.நா. நிபுணர் குழு பரிந்துரை**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு சர்வதேச கண்காணிப்பிலான அதிகார அலகொன்று வழங்கப்பட வேண்டும் என்று ஐ.நா. நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் உட்பட முறையற்ற சம்பவங்கள் அனைத்துக்கும் அதிகார சமப்பகிர்வின்மையே காரணம் என்பதைக் கண்டறிந்துள்ள ஐ.நா. நிபுணர் குழு அதனை எதிர்காலத்திலும் தொடரவிடாமல் தடுக்கும் வகையில் சில பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

அதில் முக்கியமானது தமிழ் மக்களுக்குத் திருப்திப்படத்தக்க வகையில் அதிகாரப் பகிர்வொன்றை வழங்கி, தமிழ் மக்கள் உள்ளடங்கும் அதிகார அலகு தொடர்பில் சர்வதேசத்தின் கண்காணிப்பு அவசியம் என்று அது பரிந்துரைத்துள்ளது.

அதன் பிரகாரம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு கணிசமான அதிகாரங்களுடன் கூடிய அதிகார அலகொன்று வழங்கப்படுவதுடன், அதன் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தை விட சர்வதேசத்தின் கண்காணிப்புக் குழுவொன்றுக்கு தலையிடுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பது நிபுணர் குழுவின் பரிந்துரையின் சாராம்சமாகும்.

அத்துடன் அங்கு அமையும் உருவாக்கப்படும் அதிகாரப் பிரிவு (மாகாண சபை அல்லது சமஷ்டி அரசாங்கம்) சர்வதேசத்துக்குப் பொறுப்புக் கூறுவதாக அமைந்திருக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

(தமிழ்வின்) (ஒ-10)

## அரச ஆதரவுக் கூட்டம் முடக்கப்பட்டது

இலங்கை அரசுக்கு ஆதரவு தெரிவித்து பிரான்ஸில் நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்வை நாடுகடந்த தமிழீழ அரசுப் பிரதிநிதிகள் இடைநடுவில் முடக்கியுள்ளனர்.

''போருக்குப் பின்னரான இலங்கையைக் கட்டியெழுப்ப வாருங்கள்'' என்றவகையில் இடம்பெற்ற அந்தக் கருத்தரங்கில் தமிழ்மக்கள் தொடர்பில் பொய்யான பிரசாரங்கள் அங்கு முன்வைக்கப்பட்டன.

இதனால் அங்கு கூடியிருந்த நாடுகடந்த அரசுப் பிரதிநிதிகள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை விளக்கி கருத்தரங்கை முடக்கினர்.

## சிங்களப் படையினரால் தமிழ் மக்கள் கொல்லப்படவில்லை என்கிறார் கருணா

இறுதிபோரில் இலங்கை அரச படைகளால் தமிழ் மக்கள் எவரும் கொல்லப்படவில்லை என்று கூறியுள்ளார் புலிகளின் முன்னாள் கிழக்குமாகாண தளபதியும் இலங்கையின் தற்போதைய் பிரதி அமைச்சருமான கருணா அம்மான் எனப்படும் முரளிதரன்.

போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை அரசபடைகளால் பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை. ஆனால் புலிகள் தான் தப்பிச் சென்ற பொதுமக்களைக் கொலை செய்தனர். புலிகளிடம் இருந்து பாதுகாப்பாக பொதுமக்களை மீட்டது இலங்கை இராணுவம் தான். பொதுமக்களுக்குப் பாதிப்பு இல்லாமல் போரை நடத்தும் கொள்கை அரசாங்கத்தினால் முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் இலங்கையின் உள் விவகாரங்களில் அதிகமாகத் தலையிடுகிறார் அவருக்கு எந்த உரிமையும் கிடையாது. இலங்கை ஓர் இறைமையுள்ள நாடு என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்' என்றும் 600 பொலிஸ் ஊழியரை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கருணா அம்மான் மேலும் கூறியுள்ளார்.

(தமிழ் சி.என்.என்.)(ஒ-10)

## புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் கைதுசெய்யப்பட வேண்டும்-இராணுவப் பேச்சாளர்

புலம்பெயர் நாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் தமிழ் அமைப்புகளின் முக்கியஸ்தர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இராணுவப் பேச்சாளர் உபய மெதவல வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறான நபர்கள் இலங்கை தொடர்பிலான தப்பான அபிப்பிராயத்தை தாம் வாழும் நாடுகளில் உருவாக்க முனைவதன் மூலம் தொடர்ந்தும் அந்த நாடுகளில் வசதியாக வாழ முயற்சிப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் உபய மெதவல குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் அவர்கள் இலங்கையில் தொடர்ந்தும் முரண்பாடுகளும் மோதல் நிலைகளும் தொடர்வதாகப் போலிப் பிரசாரமொன்றை மேற்கொள்வதுடன், அவ்வாறான போலிச் சாட்சியங்களை உருவாக்கி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே சட்டத்துக்குப் புறம்பாக போலியான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள அவர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நாடுகள் அவதானமாக இருக்க வேண்டுமென்பதுடன், அவர்களைக்கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(தமிழ்வின்)(ஒ-10)

## இலங்கை மீனவர்கள் ஆந்திராவில் கைது

இந்தியாவின் ஆந்திர பிரதேச கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.


மேற்கு கோதாவரி மாவட்டத்தின் நரசபூர் கரையோரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இரு படகுகளில் இவர்கள் மீன்பிடித்தனர் என்று இந்திய கரையோர காவல் படை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த மீனவர்கள் 20-40 வயதுக் கிடைப்பட்டவர்களாவர். விசாரணைகளின் பின்னர் விசாகப் பட்டினம் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(தமிழ்மிரர்)(ஒ-10)

இணையச் செய்திகள்

## கிராமத்துக்குள் திடீரெனப் பிரவேசித்த யானைக்கூட்டம்




*அனுராதபுரம் தலாவ பிரதேசத்திலுள்ள கிரிலோகம கிராமத்துக்குள் நேற்றுக் காலை திடீரென சுமார் 30 யானைகள் ஒரேயடியாகப் புகுந்தன. இதனால் கிராமவாசிகள் பலர் அச்சத்தினால் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தனர்.*

*சுமார் 6 மணித்தியாலங்கள் இந்த யானைகள் கிராமத்துக்குள் அங்கும் இங்குமாக அலைந்து திரிந்ததாகக் கிராமவாசிகள் தெரிவித்தனர்.*

*பின்னர் கடும் சிரமத்தின் மத்தியில் பொலிஸாரின் உதவியுடன் கிராமவாசிகள் யானைகளைத் துரத்தினர். யானைகளை விரட்டுவதற்காக வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் பலத்த சத்தங்களை எழுப்பியதாகவும் கிராமவாசிகள் கூறினர்.*

# கடற்படையினர் நால்வர் காணாமற்போன சம்பவம் மஹிந்தவின் உறவினருக்கு பதவி வழங்க நாடகம்

வடபிராந்தியக் கடற்பரப்பில் நான்கு கடற்படைச்சிப்பாய்கள் காணாமற் போன சம்பவம் அரசாங்கத்தின் திட்டமிட்டதொரு நாடகம் என்பதாக தற்போது தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

கடற்படையின் அடுத்த தளபதியாக ராஜபக்ஷ குடும்ப உறவினர் ஒருவரை நியமிக்கும் திட்டத்துக்கு அமைவாகவே குறித்த நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது. அதன் மூலம் கடற்படையின் உள்வீட்டு மோதல் சம்பவத்தின் எதிரொலியாகவே நான்கு கடற்படைச்சிப்பாய்களும் காணாமற் போயுள்ளனர்.

தற்போதைய கடற்படைத் தளபதி சோமதிலக்க திசாநாயக்க பதவியேற்றுக் கொண்டபின் கடற்படையின் சிரேஷ்ட பணிநிலை அலுவலர் பதவி கடந்த சில மாதங்களாக காலியாகவே காணப்படுகின்றது. அப்பதவிக்கு நியமிக்கப்படுபவரே கடற்படையின் அடுத்த தளபதியாக நியமிக்கப்படும் தகுதி கொண்டவர் என்பது சம்பிரதாயமாகும்.

அந்த வகையில் கடற்படையின் சேவை மூப்பு அடிப்படையில் தற்போதைய தளபதிக்கு அடுத்த இடத்தில் இருந்தவர் வடபகுதி கடற் பிராந்தியக் கட்டளைத் தளபதியாக இருந்த துசித வீரசேகர ஆவார். அவருக்கு அடுத்த இடத்தில் இருப்பவர் தற்போது அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார் ஜயந்த பெரேரா.

ஆயினும் துசித வீரசேகரவும் ஜயந்த பெரேராவும் ஒரேயளவான தகுதிகளைக் கொண்டிருப்பதுடன், சமமான சேவைக் காலத்தையே கொண்டிருக்கின்றனர். இருந்தும் துசித வீரசேகர கடற்படையின் சேர்வுத் தொடரிலக்கத்தில் ஜயந்த பெரேராவை விட முன்நிலையில் இருக்கின்றார்.

அவ்வாறான தருணத்தில் என்னதான் சமமான தகுதிகளைக் கொண்டிருந்தாலும் சேர்வுத் தொடரிலக்க அடிப்படையிலேயே பதவியுயர்வு வழங்கப்படும். பிரஸ்தாப நபருக்கு எதிராகக் கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் மாத்திரமே அவருக்கு அடுத்த இடத்தில் இருப்பவருக்கு வாய்ப்பளிக்கப்படும்.

அந்த வகையில் தனக்குக் கீழ் இருந்த நான்கு கடற்படைச் சிப்பாய்கள் காணாமற்போன சம்பவத்தைப் பயன்படுத்தி துசித வீரசேகரவின் பதவி பறிக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக தற்போது சிரேஷ்ட பணிநிலை அலுவலர் பதவிக்கும் கடற்படையின் அடுத்த தளபதி பதவிக்கும் நியமிக்கப்படக்கூடிய வாய்ப்பு ஜயந்த பெரேராவைத் தேடி வந்துள்ளது. அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உறவுக்காரர் மட்டுமன்றி அவருடன் ஒன்றாகக் கல்வி கற்றவருமாவார்.

காணாமற்போன கடற்படையினரில் சிலர் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்படும் பிரிவினைச் சாராதவர்கள் என்பதுடன், அவர்கள் பயணித்த படகு சேதமின்றிக் கரையொதுங்கியுள்ளமை, அதில் பொருத்தப்பட்டிருந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்படாத மற்றும் எதுவித சேதமுமற்ற நிலையில் காணப்படுகின்றமை போன்ற விடயங்களைக் கொண்டே அவர்கள் அரசாங்கத்தின் இரகசிய திட்டத்துக்கு ஏற்ப காணாமற்போகச் செய்யப்பட்டுள்ளனர் என்ற சந்தேகம் பலமாக எழுந்துள்ளது.

(தமிழ்வின்)(ஒ-10)

# ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு வைக்கக்கூட அரச தரப்பினர் இன்னமும் தயாரில்லை

## சுரேஷ் எம்.பி. இப்படிக் கூறுகிறார்



கொழும்பு, ஏப். 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்குமிடையில் இன விவகாரத் தீர்வு தொடர்பாக நடைபெறும் பேச்சு மிகவும் சுமுகமாக நடைபெறுவதாகக் கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கின்றார்.

பேச்சில் கலந்துகொள்ளும் அரசாங்கத் தரப்பினர் இன விவகாரத்தீர்வில் எவ்வித அக்கறையும் இன்றியே பேச்சில் கலந்துகொள்கின்றனர்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை இன விவகாரத் தீர்வு விடயத்தில் தீர்வு குறித்த எவ்வித சிந்தனையும் இன்றி இருப்பதையே இது காட்டுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

''ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தீர்வையே நாம் நாடி நிற்கின்றோம்.

ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வைத் தர அரசாங்கம் தயாரா என்பது குறித்து அவர்கள் வெளிப்படையாகப் பேசுகின்றார்கள் இல்லை.

பேச்சுவார்த்தையின் போக்கையும் அரசாங்கத்தரப்பினரின் நடவடிக்கைகளையும் பார்க்கும் போது இழுத்தடிப்பை மேற்கொள்வதையே நோக்கமாகக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

தொடர்ந்தும் இழுத்தடிப்பதில் பிரயோசனம் இல்லை.

அரசாங்கம் ஒரு தீர்க்கமான முடிவை முன்வைக்க வேண்டும்.

இல்லையேல் தொடர்ந்தும் பேச்சு நடத்துவதில் பயனில்லை'' என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## அரசு பதில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் பதிலுக்கு முன்னதாக எமது கட்சியின் உறுப்பினர்கள் எவரும் பதிலளிக்கப்போவதில்லை என்று நாம் அனைவரும் இணங்கியிருக்கின்றோம்.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அந்த அறிக்கையை ஆராயாமலும் அது தொடர்பிலான அரசின் பதிலை அறியாமலும் நாம் பதில் அளிப்பது சரியல்ல.

இந்த அறிக்கை தொடர்பிலான எமது கருத்து நாட்டுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். எமது நாட்டுக்குச் சிக்கல் ஏற்படும் வகையில் எம்மால் செயற்பட முடியாது - என்றார்.

(ஒ-சி)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிடம் கையளிக்கப்பட்ட தினமான 12ஆம் திகதி அன்று சில இணையதளங்கள் வெளியிட்டுள்ளன. இவை முன்னெப்போதும் வெளியிடப்படாதவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சர்ச்சைக்குரிய சனல் - 4 தொலைக்காட்சி நேற்று முன்தினம் யுத்தக் குற்றங்களை வெளியிடும் புதிய வீடியோவை ஒளிபரப்பி சர்வதேச ரீதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஒ-சி)

## நிபுணர்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் இன்று பங்களாதேஷ் செல்கின்றனர்.

ஜனாதிபதி நாடு திரும்பியதும் பான் கி - மூனின் நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து விரிவாக சகல மட்டங்களிலும் ஆராயப்படும். இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இலங்கையிலுள்ள வெளிநாடுகளின் தூதுவர்களுக்கு எதிர்வரும் 21ஆம் திகதி விளக்கம் அளிப்பார்.

நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் ஊடகங்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட உள்ளது என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பான் கி - மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டபோதும், அறிக்கையின் முக்கிய பகுதிகள் சர்வதேச இணையதளங்கள் சிலவற்றிலும் ஒரு சில உள்ளூர் பத்திரிகைகளிலும் வெளியானமை சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

வெளிநாடுகள் பல இந்த அறிக்கையை வெளியிடும்படி கோரிக்கை விடுத்துள்ளன. இன்று 18ஆம் திகதி இந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் என ஐ.நா. வட்டாரங்களை மேற்கோள்காட்டி சில இணையத்தளங்கள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன. (ஒ-சி)

## நிபுணர் குழு அறிக்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்று ஐ.நா. நிபுணர் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ள நிலையில் ஜனாதிபதி மேற்கண்ட அழைப்பை விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையின்படி நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு தான் அனுமதிக்காததால் சர்வதேச சமூகத்தில் ஒரு பகுதியினர் இலங்கைக்கு எதிராகப் பிரசாரம் மேற்கொள்வதுடன் பொறாமை கொண்டிருக்கின்றனர் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் சுமத்தப்பட்ட போர்க் குற்றச்சாட்டுகள் புதியவை அல்ல. போருக்குத் தலைமை வகித்தவர், போர்க்குற்ற விசாரணை மன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட வேண்டுமென அதிகமானோர் கூறியிருந்தனர்.

நாட்டுக்காக மின்சார நாற்காலியில் அமர வலியுறுத்தப்பட்டாலும் நான் அதை மகிழ்ச்சியுடன் செய்வேன். - இவ்வாறு ஜனாதிபதி கூறினார். (ஒ-சி)

பணிநிலை வேண்டுகை

முகாமையாளர் (Manager)

கிளிநொச்சி, வன்னி மாவட்டங்களில் இயங்க இருக்கும் முன்னணி நிறுவனத்துக்கு

தகைமை:
- ★ பட்டதாரிகள்.
- ★ குறைந்தது 1 வருட நிர்வாக அனுபவம்.
- ★ பணிக்குரிய பிரதேசத்தின் எவ்விடத்திற்கும் சென்று வரக்கூடியவராக இருத்தல்
- ★ மும்மொழிகள் தெரிந்தவரும் சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்



அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

18.04.2011 இற்கு முன்னர் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது தபால் மூலமோ விண்ணப்பிக்கவும்.

cborecruit@gmail.com

விளம்பர இல.: 4136, உதயன் பணிமனை
361/6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(48,20,26)

# தீக்காயங்களுடன் சிகிச்சை பெற்றவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.18

தீக்காயங்களுடன் சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் மூன்றாவது நாள் மரணமானார்.

சாவகச்சேரி மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சி.குணபாலசிங்கம் (வயது - 56) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

உடலியற் கூற்றுப் பரிசோதனையின் பின்னர் மேலதிக விசாரணையை மேற்கொண்ட யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும் படி உத்தரவிட்டார். (ஒ-4)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் வெட்டுப் புள்ளிகளின் விவரங்கள் உரிய முறையில் வெளியிடப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (சி)

## ஓய்வுபெறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயனும் ஏற்படப் போவதில்லை.

தனியார் மற்றும் அரச ஊழியர்களுக்கு ஓய்வுபெறும் வயதெல்லையொன்று காணப்படுகிறது.

எனினும், அரசியல்வாதிகளுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் இவ்வாறு ஓய்வூ பெறும் வயதெல்லை கிடையாது.

விளையாட்டு வீரர்கள் சுயமாகவே ஓர் குறிப்பிட்ட வயதில் ஓய்வு பெற்றுக் கொள்கின்ற போதிலும், அரசியல்வாதிகள் அவ்வாறு ஓய்வு பெற்று ஒதுங்குவதில்லை.

மக்களினால் விலகச் சொல்லி வலியுறுத்தப்படும் முன்னர் தாமாகவே அரசியல்வாதிகள் ஓய்வு பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சி, பிரதமர் பதவி விலக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாணசபை உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பதிலளிக்கப் போவதில்லை என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# பாணின் விலையும் அதிகரிக்கப்படலாம்

கொழும்பு, ஏப். 18

பிறிமா நிறுவனம் கோதுமை மாவின் விலையை அதிகரிக்கும் பட்சத்தில் பாணின் விலையும் அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது செரண்டிப் நிறுவனம் ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை மூன்று ரூபாவால் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் பிறிமா நிறுவனமும் கோதுமை மாவின் விலையை அதிகரிக்குமானால் அனைத்து பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகளையும் அதிகரிக்க வேண்டிவரும் என்று அந்தச் சங்கம் கூறியுள்ளது.

# ஜனாதிபதி பங்களாதேஷ் புறப்பாடு

கொழும்பு, ஏப்.18

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று பங்களாதேஷ் செல்கிறார்.

பங்களாதேஷ் ஜனாதிபதி ஸில்லூர் ரஹ்மானின் அழைப்பை ஏற்று பங்களாதேஷ் செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்களாதேஷ் ஜனாதிபதி, பிரதமர் ஷேக் ஹஸினா ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

# காங்கிரஸ் இன்று ஆர்ப்பாட்டம்

சென்னை, ஏப்.18

தமிழக மீனவர்கள் நான்குபேர் உயிரிழந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று மு.ப. 10 மணிக்கு காங்கிரஸ் கட்சி இலங்கைத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்துகிறது.

இந்த ஆர்ப்பாட்டம் காங்கிரஸ் கட்சி சார்பாக தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஐ)

## பனாமா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயலத் ஜயவர்த்தன முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

அதன் மூலம் அநியாயமாக சிறை வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவின் விடயம் குறித்து சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிப்பது அவரது எதிர்பார்ப்பாக இருந்தது.

எனினும் அவர் அமர்வில் கலந்து கொள்வதற்கு அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அத்துடன் ஒன்றியத்தின் பொதுச் செயலாளரிடம் அவர் முறைப்பாடொன்றையும் மேற்கொண்டதன் காரணமாக பாதுகாப்பு அதிகாரிகள் உஷார்படுத்தப்பட்டு, திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு மகாநாட்டு மண்டபத்தின் உள்ளே நுழையக் கூட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான ஓ.இராமையா, தொழிற்சங்கவாதி என்ற ரீதியில் மே தினத்தை இதற்குப் பயன்படுத்துவதைத் தான் ஆதரிக்கவில்லை எனக் கூறியுள்ளார்.

அதேவேளை, அரசில் அங்கம் வகிக்கும் மற்றுமோர் இடதுசாரி அமைப்பான லங்கா சமசமாஜக் கட்சியின் தொழிற்சங்கமான லங்கா தொழிலாளர் சங்கத்தின் செயலாளரான ரி.எம்.ஆர்.ரசூல்டீனும் ஜனாதிபதியின் இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளார்.

தமது சங்கங்கள் எல்லாம் அரசின் தனியார் துறைக்கான ஓய்வூதியத் திட்டத்தை எதிர்த்து அதனையே மே தின கோஷமாகக் கொள்ளப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.